கொழும்புத் தமிழ்ச் சங்க
நூலகத்திற்கு அன்பளிப்பாக
இந்நூல் வழங்கியவர்
DEPT. OF HINDU RELIGIOUS
& CULTURAL AFFAIRS

இந்து நதி

13163



கொழும்புத் தமிழ்ச் சங்கம்
பரை நிலைச் சபை,
73
திவு இல. 10. 5 1950
அறக்கட்டளை நிலையம்
T4805
சேர் இல. 1 6. 1968

230.6
இந்து

இந்து மாணவர் மன்றம்
கிழக்குப் பல்கலைக்கழகம்,
வந்தாறுமூலை, செங்கலடி.

1988/89

நல்மான வாழ்விற்கு
நல்லதோர் வழிகாட்டி

ஷ்ப்ரு

உங்கள் நிதியைப் பெருக்க
எங்கள் முதலீட்டுத் திட்டங்களை நாடுங்கள்

நிலையான வைப்புத்திட்டம்

குறைந்த வைப்புத்தொகை - ரூ. 1000/-
மாதாந்த வட்டி பெற குறைந்த வைப்புத்தொகை ரூ. 5000/-

காலம்	மாதாந்த வட்டி வீதம்	முதிர்ச்சியில் வட்டி வீதம்
3 மாதங்கள்	—	14%
6 ,,	—	16%
12 ,,	16%	18%
24 ,,	18%	20%
36 ,,	20%	—

★ வைப்புச் சான்றிதழ் திட்டம்

★ மாதாந்த முதலீட்டுச் சேமிப்புத் திட்டம்

மேலும் விபரங்கள் பெற

ஷ்ப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிடெட்

யாழ் முகவர்,
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு - 4.

589310 500576. ☎ 24805 22073

230.6
இந்து

கொழும்புத் தமிழ்ச் சங்க
நூலகத்திற்கு அன்பளிப்பாக
இந்நூலை வழங்கியவர்

உ

சிவமயம்

இந்து நதி

தமிழ் 13163

இதழாசிரியர் :

பரம். ஜெயக்குமார்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
வரை நிலைச் சபை,
பதிவு இல. 73
10. 5 1950
அறக்கட்டளை நிலையம்.
கதெட் இல. 14605
7. 6. 1968

இந்து மாணவர் மன்றம்
இழக்குப் பல்கலைக்கழகம்
வந்தாறுமூலை,
செங்கலடி.
1988 / 89

SIVAMAYAM

INTHU NATHY

Editor :

Param. Jeyakumar.

The Publication of the
Hindu Students' Association

Eastern University,
Vantharumoolai,
Chenkalady.
1988 / 89.

சமர்ப்பணம்

இந்து நதியின்
இவ்வாண்டு அலைகள்
சித்தி விநாயகர் தம்
பொற்பாதங்களை
நனைக்கட்டும் !

ஓம்

சுவாமி ஜீவனானந்த அவர்களின்

வாழ்த்துரை

இந்து தர்மம் என்பது இயற்கையோடு இணைந்த ஒரு நெறி. மனிதன் மகத்தானவன். அவன் கடவுளின் அம்சம் என்பதை உணர்த்தும் ''தத்வமஸி'' என்ற சுலோகம் இந்து தர்மத்தின் பெருமையைச் சொல்லும். ஒவ்வொரு மனிதனுள்ளும் உறைந்துள்ளது தெய்வீகம். அதை உணர்வதே மனிதனின் முக்தி நிலை. அதுவரை அவனது ஆத்மாவின் பயணம் தொடரும். இப் பயணத்தில் சமயத்தின் பணி என்ன?

மனிதனுள் உறைந்துள்ள தெய்வீகத்தை விகசிக்கச் செய்து அவனைப் புனிதனாக்குவதே சமயத்தின் பணியாகும்.

''உன்னுள் உறைந்திருக்கும் தெய்வீகத்தை விகசிக்கச் செய். ஏனைய யாவும் அதைச் சுற்றி ஒழுங்கமைதி பெறும்' என்பது சுவாமி விவேகானந்தரின் வாக்கு. சகல சாஸ்திரங்களின் சாரமும் இதுவே.

இந்து தர்மம் என்பது மனித குலத்தின் விமோசனத்துக்கு வழிகாட்டும் ஒரு புனித நதி. அந்த நதியுடன் இந்த ''இந்து நதி'' இரண்டறக் கலந்து மக்களின் ஆத்மீக வாழ்வுக்கு வழிகாட்ட வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சுவாமி ஜீவனானந்த

இராமகிருஷ்ண மிஷன்,
கல்லடி - உப்போடை,
மட்டக்களப்பு.
17 - 01 - 1990

கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர்

பேராசிரியர் **எஸ். சந்தானம்** அவர்களின்

ஆசிச்செய்தி

இன்றைய இன்னல் நிறைந்த காலகட்டத்தில் ஆன்மீகத்தின் முக்கியத்துவம் பெரும் பங்கு வகிக்கின்றது. எமது இளைய தலைமுறையினர் ஆன்மீக ஈடுபாட்டில் காண்பிக்கும் அக்கறையையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த வகையில் செயற்பட்டு வரும் எமது பல்கலைக்கழக இந்துமாணவர் மன்றத்தினரின் தொடர்ச்சியான வெளியீடான இவ்விதழிற்கு எனது இதய பூர்வமான வாழ்த்துக்கள். இந்த ஈடுபாடுகள் பரந்த நோக்கில் செயற்படுத்திட பயிலுதன் அவசியத்தை எடுத்துக் கூறத் தேவையில்லை. இந்தச் செயற்பாடுகள் வளர்ந்தோங்கிச் செல்ல என் மனமார்ந்த நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அன்பு, சகோதரத்துவம், புரிந்துணர்வு என்பன இப்படிப்பட்ட அறநூல்களால் தான் வளர்க்கப்பட முடியும். அதுமட்டுமல்லாது மாணவர்களின் கல்விபுகட்டும் பாடநூலாகவும் இச்சஞ்சிகை விளங்குவது பாராட்டுதற்குரியது. உண்மையில் இத்தரப்பட்ட சஞ்சிகைகள் வெளிவரவேண்டும் என்பதில் நாம் அனைவரும் அக்கறையுடையவர்களாக இருக்க வேண்டும். இது சமுதாய முன்னேற்றத்திற்கான அடிக்கல்லாக நிச்சயம் அமையும் என்பதில் ஐயமே இல்லை.

இந்து மாணவர் சங்கத்தினரின் அயராத முயற்சியினால் எமது பல்கலைக்கழகத்தில் கலை, கலாச்சார ரீதியான திறமைகளும் வளர்க்கப்படுகின்றன என்பதற்கு இச்சஞ்சிகையின் இரண்டாம் இதழ் சான்றாகும். இம்மன்றத்தினரின் அளப்பரிய சேவைகள் தொடர்ந்து வெற்றி நடை போடவும், அதன் தொழிற்பாடுகள் மென்மேலும் விஸ்தரிக்கப்படவும் எனது நல்லாசிகள்.

'இந்துநதி' பன்மடங்கு கிளைகளைப்பரப்பி' மானிட உள்ளங்களின் அறிவுத்தாகத்தைப் போக்கிட, ஆன்மீக வெள்ளத்தை அள்ளித் தந்திட எனது வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எஸ். சந்தானம்.

கிழக்குப் பல்கலைக்கழக இந்து மாணவர் மன்றப் பெருந்தலைவர்

பேராசிரியர் மனை. சபாரத்தினம் அவர்களின்

வாழ்த்துரை

இந்து நதியின் இரண்டாவது ஊற்று பாய்ந்தோடி வருகின்றது. இந்து மாணவர் மன்றத்தின் பெருந்தலைவராகவிருந்து இதனை வழிப் படுத்தக் கிடைத்த வாய்ப்பினை ஒரு பேருகவே கருதுகின்றேன்.

பண்பாடுபற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டு வரும் வேளையிது. பண் பாடுபற்றிய அறிவும், அனுபவமும் இன்று பெரிதும் வேண்டப்படுகின் றது. மதம் சார்ந்த ஒழுக்க விழுமியங்களின் தேவை முன் எப்போதை யை விடவும் அதிகமாக இன்று உணரப்படுகின்றது. இந்த வேளையில் இந்துப் பண்பாட்டின் அர்த்தங்களை ஆய்வுக் கருவூலங்களின் வழி வெளிக் கொணர்ந்து பாய்கின்றது இந்து நதி.

இந்து நதியின் முதலாவது இதழிலே நாம் கண்ட வெற்றி, இந்த இரண்டாவது இதழின் பிறப்பின் அடிப்படையாகும்.

இந்து பண்பாட்டின் ஊற்றுக்கள் பலவற்றையும் கொண்டு விளங் குவது கிழக்கிலங்கை. எங்கள் பல்கலைக் கழகத்திலே இடம் பிடித்துள்ள பண்பாட்டுப் பீடத்திலே இந்து பண்பாட்டுத்துறை இடம் பெற வேண் டியதன் அவசியத்தை மீண்டும் இந்த இடத்தில் வலியுறுத்த விரும்பு கின்றோம். இந்தத் துறையிலே பண்பாட்டு மானுடவியல் சார்ந்த ஆய்வு கள் பலவும் நிகழ்த்தப்பட வேண்டியது இன்றியமையாதது. இந்த ஆய் வுச் செல்வங்களையெல்லாம் வெளிக்கொணர இந்து நதி தயாராகப் பாய் கின்றது. இந்து நதியைச் செழுமையுடன் வளம்படுத்த ஆய்வறிஞர்களை அழைக்கின்றோம்.

இந்த இதழுக்கான கட்டுரைகளைத் தந்த அறிஞர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்து நதியின் உருவாக்கத்திலே சம்பந்தப்பட்ட என் அன்புக்குரிய மாணவர்களையும் பாராட்டுகின்றேன்.

எங்கள் பண்பாட்டின் ஆளுமையாய், அர்த்தங்கள் பல தந்து வாழ்வினை வளம்படுத்த வருக! இந்து நதியே வருக!! என்று வாழ்த்தி வரவேற்கின்றேன்.

மனை. சபாரத்தினம்

கிழக்குப் பல்கலைக்கழக

இந்து மாணவர் மன்றச் சிரேஸ்ட பொருளாளர்

கலாநிதி க. சபேசன் அவர்களின்

வாழ்த்துரை

இந்து நதியின், இரண்டாவது இதழ் வெளிவருவதில் பெருமகிழ்ச்சி அடை கிறேன். இந்து மாணவர் மன்றத்தின் செயற்பாடுகள் மேன்மை பெற்றுள்ளமை இவ்விதழூடாக நான் காணக் கூடியதாக இருக்கிறது.

எமது இந்து மாணவர்களின் கலை, கலாச்சாரத்திறன் வளர்வதற்கு இந்துநதி ஒரு நற்கருவியாக அமையட்டும். இன்றைய சூழ்நிலை மேகங்கள் இருளைத் தோற்றுவித்த போதும் ஒச்சஞ்சிகை ஒளி விளக்காகத் திகழும் என்பதில் ஐயமில்லை

பல்வேறு கோணங்களில் அலசி ஆராயப்பட்ட கட்டுரைகளைத் தாங்கி வரும் இவ்விதழ் உங்களுக்குப் பெருவிருந்தாக அமையும் என நம்புகிறேன். 'இந்து நதி' பல்கிப் பெருகிட எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் என்றும் இருக்கும்.

இவ்விதழின் வெளியீட்டில், இந்து மாணவர் மன்றத்தின் சிரேஸ்ட பொரு ளாளர் என்ற வகையில் இரட்டிப்பு மகிழ்ச்சியடைவதுடன், இவ்வறிவுச் செல்வம் தொடர்ந்து வெளிவரவும், இந்து மாணவரின் செயற்பாடுகள் வளர்ந்தோங்கவும் இறைவன் ஆசி வேண்டுவதுடன் மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

க. சபேசன்

இந்து மாணவர் மன்றத் தலைவரின்

ஆசியுரை

கிழக்கின் ஒளி விளக்கு ஒன்று தொடர்ந்து ஏற்றிவைக்கப்படுகின்றது. 'இந்து நதி' இந்து சமயப் பண்பாட்டுக் கோலங்களின் பிரதிபலிப்பு. இவ்விதழின் வெளியீடு உண்மையிலேயே எமது மண்ணிற்கு ஒரு வரப்பிரசாதமாகும். ஆம், வாய்ப்பேச்சை விட செயற்திறனே முக்கியம் என்பதற்கு 'இந்து நதி' சிறந்த எடுத்துக்காட்டு.

எமது இந்து மாணவர் மன்றம் பல வளவு, நெளிவுகளுடாக ஊடுருவிச் சென்று வளரவேண்டிய நிலை. ஆயினும் அதன் வளர்ச்சி முனைப்படைந்ததையிட்டு மன்றத் தலைவர் என்ற வகையில், பெருமகிழ்ச்சி அடையாது இருக்க முடியவில்லை.

'இந்து நதி' என்ற இந்த அறிவுப் பொக்கிஷம் மூலை முடுக்கெல்லாம் பரந்து கிடக்கும் உங்கள் அனைவர் கைகளிலும் பிரகாசிக்கட்டும். அது மட்டுமல்ல எதிர் காலத்திலும் இந்த ஒளி தொடர்ந்து ஏற்றப்பட அனைவரும் முயற்சி எடுக்க வேண்டும்.

'இந்து நதி'யின் எல்லாவிதமான ஊடுருவல்களுக்கும் இறைவன் நல்லாசி வேண்டுகிறேன்.

எஸ். வரதராஜன்

இதழாசிரியரின் இதயத்திலிருந்து.....

'இந்து நதி' இன்று தனது இரண்டாவது செல்வத்தைப் பிரசவிக்கின்றுள். எமது இந்து மாணவர் மன்றத்தின் இலட்சிய வேட்கை உச்சம் பெற்று விட்டதற்கு இவ்விதழின் வெளியீடு சான்று. ஆனால் இந்த இரண்டாம் கருப்ப காலத்தில் ஏற்பட்ட இடையூறுகள், மனவேதனைகள் தான் எத்தனை? எத்தனை? உண்மையில் கருச்சிதைவு ஏற்படாமல் குழந்தையிவள் உங்கள் கைகளில் தவழ்வதற்கு இறைவன் பேரருளும், மன்றத்தினரின் விடாமுயற்சியும், நலன் விரும்பிகளின் ஒத்துழைப்பும் தான் தலையாய ஔஷதங்களாகி இருந்தன. சூழற்காரணிகள் இருவருடங்களைத் தள்ளிவிட்ட போதிலும் எம்மன்றத்தினரின் இதயதாகம், இத்தடைகளையெல்லாம் முறியடித்து விட்டது.

முதற்செல்வத்திலிருந்து சற்று வேறுபட்ட வடிவமாக இவள் உருவெடுத்துள்ளாள்: இந்து பண்பாட்டுக் கோலங்களின் ஆய்வுடன் மட்டும் நின்றுவிடாது, ஏனைய இன, மதங்களுடனான ஒப்புமை நோக்குகளும் இடம் பெற்றிருப்பது இவ்விதழுக்குரிய மகுடங்கள். ஆம், 'இந்து நதி' புதுப்பொலிவுடன் நிறைவான ஆளுமையை நோக்கிப் பாய்கிறுள். வாசகப் பெரியோரால் சுட்டிக்காட்டப்பட்ட சென்ற இதழுக்குரிய குறைகள் நெஞ்சிலமர்த்தப் பட்டமையால், இவள் நிறைவை அணுகுகிறுள். கிழக்கின் மூலைமுடுக்கெல்லாம் இலைமறை காய்களாக இருக்கும் அறிவுப் பொக்கிஷங்களின் ஆய்வுப்படைப்புக்கள் உங்கள் அறிவுப் பசிக்காக கொணரப்படுகின்றன. எமது பல்கலைக்கழக எழுத்தாளச் சிற்பிகளின் வடிவமைப்புகளும் உங்கள் முன் அணிவகுக்கின்றன.

தொடர்ச்சியான எமது முயற்சிகளுக்கு, இதய பூர்வமான ஆசிகளை அள்ளித்தந்த மட்டுநகர் இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஜீவனானந்த அவர்களுக்கும், எமது உபவேந்தர் பேராசிரியர் எஸ். சந்தானம் அவர்களுக்கும் எமது நன்றிக்கடன் நிலைக்கும்.

இந்து மாணவர் மன்றத்தின் உயிர்நாடி எமது பெருந்தலைவர் பேராசிரியர் மனோ. சபாரத்தினம் அவர்களே. 'இந்து நதி' யின் வற்றாத ஊற்று இவரின் வழிகாட்டலே. எதிரிலைகளால் நாம் சோர்வடையும்போது எம்மைத் தட்டியெழுப்பிய ''எங்கட Madam'' இன் செயற்திறனே இவ்விதழின் பூவுலகப் பிரவேசம். அவரது ஊக்கம் இறைவன் காணிக்கை. அத்துடன் எமது செயற்பாடுகளுக்கு ஆக்க ஊக்கமளித்த சிரேஷ்ட பொருளாளர் கலாநிதி க. சபேசன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

'தாம் பெற்ற அறிவுச் செல்வங்களைப் பெறுக இவ்வையகம்' என்றே இந்து நதிக்காக தமது ஆக்கங்களைத் தந்துதவிய அறிவு ஜீவிகளுக்காக எமது இதயத்து சந்தம் ''நன்றி'' கீதம் பாடுகின்றது.

''இந்து நதி'' யின் பசுமைச் செழிப்புக்கு சேவையுள்ளம் கொண்ட வர்த்தகச் செம்மல்களின் பங்கும் அளப்பரியது. அந்த நன்றிகள் எமது நெஞ்சை விட்டகலா. சொல்லொணாத் தடைகளின் மத்தியிலும் இவ்விதழை அச்சுருவேற்றிய புனித செபஸ்தியார் அச்சகத்தினர் எம் நன்றிக்குரியவர்கள்.

'இந்து நதி' யின் இந்த நீர்த்திவலைகள் ஒவ்வொன்றும் உங்கள் அறிவுத் தாகத்தை குறைக்கும் இவ்வேளையில், எனது பிரார்த்தனை என்னவெனில் 'இவள் அறிவு வளம் கொழிக்கும் செல்வநதியாகத் தொடரும் காலங்களிலும் திகழவேண்டு'மென்பதே. அக்கனவு உங்கள் கைகளில் தான்!

பரம். ஜெயக்குமார்

கிழக்குப் பல்கலைக்கழக இந்து மாணவர் மன்ற

நிர்வாகக் குழு

1988 - 1989

பெருந் தலைவர்	:	பேராசிரியர் மனோ. சபாரத்தினம்
சிரேஷ்ட பொருளாளர்	:	கலாநிதி க. சபேசன்
தலைவர்	:	திரு. எஸ். வரதராஜன்
உப - தலைவர்	:	செல்வி. எம். விக்னேஸ்வரி
செயலாளர்	:	திரு. வே. கேதீஸ்வரராஜா
இணைச் செயலாளர்	:	செல்வி. த. பவானி
கனிஷ்ட பொருளாளர்	:	திரு. வி. சிவசத்தியராஜா
இதழாசிரியர்	:	திரு. பரம். ஜெயக்குமார்
இணை - ஆசிரியர்	:	செல்வி. சு. வாசந்தி

குழு உறுப்பினர்கள்

திரு. வி. கார்த்திபன்
,, வி. பாக்கியராஜா
,, எஸ். கிருஸ்ணகுமார்
,, க. கணேஸ்வரன்
செல்வி. க. குமுதினி
,, கு. புஸ்பலதா
,, எஸ். சுனித்திரா
,, சோ. பவானி
,, இந்திரலட்சுமி
,, செ. வாசுகி

தமிழ், முஸ்லிம் கலாசார பாரம் பரியங்களின் ஒன்றித்த தன்மைகள் - காணப்படுவதற்கான காரணங்கள் - ஒருநோக்கு

மௌலவி எம். ஐ. அப்துர் ரஸ்ஸாக்
கலாசார கற்கைகள் பீடாதிபதி,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

இலங்கை வாழ் முஸ்லிம் சனத்தொகையில் 67% சதவீதமானோர் சிங்கள மொழி பேசும் பகுதிகளிலேயே வாழ்கின்றனர். 33% சதவீதமானோர் மாத்திரமே தமிழ் மொழிப் பாரம்பரிய பிரதேசங்களில் வாழ்கின்றனர். பின்வரும் அட்டவணை தமிழ்மொழிப் பாரம்பரிய பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்களின் குடிசனப் புள்ளிவிபரத்தை நூற்று வீதத்தில் விளக்குகின்றது.

மாவட்டம்	முஸ்லிம்	தமிழர்	சிங்களவர்
கிளிநொச்சி			
யாழ்ப்பாணம்	1.7%	97.7%	0.5%
மன்னார்	26.6%	63.8%	8.1%
வவுனியா	6.9%	76-3%	16.5%
முல்லைத்தீவு	4.8%	89.9%	5.1%
மட்டக்களப்பு	24.0%	72.0%	3.2%
அம்பாறை	41.5%	21.5%	37.7%
திருகோணமலை	29.0%	36.4%	33.6%

வட, கிழக்கு இணைந்த மகாணத்தில் முஸ்லிம் சனத்தொகை 17% வீதமாகும். கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் சனத்தொகை 32.5% ஆகும். தமிழ்மொழி பாரம்பரிய பிரதேசத்திற்கு வெளியே வாழும் முஸ்லிம்களின் எண்ணிக்கை, தமிழ்மொழி பாரம்பரிய பிரதேசத்துக்குள் வாழும் முஸ்லிம்களின் எண்ணிக்கையை விட ஒரு மடங்கிற்கும் மேல் அதிகமாக இருந்தாலும் சிங்கள, பௌத்த கலாசார பாதிப்புக்கள் இவர்களிடம் அதிகம் இடம் பெறவில்லை. மாறாக தமிழர்களிடமும் முஸ்லிம்களிடமும் கலாசார பாரம்பரியங்களைப் பொறுத்தவரையில் ஒன்றித்த தன்மைகள் பலவற்றை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இரு கலாசார பாரம்பரியங்களிலும் ஒன்றித்த தன்மைகள் பல காணப்படுவதற்குப் பின்வரும் காரணிகள் அளப்பற்றவகையில் பங்களிப்புச் செய்துள்ளது மறுக்கவோ மறைக்கவோ முடியாதன.

1. மொழி ஒருமைப்பாடு
2. சிறுபான்மை இனங்கள் எனும் உணர்வு
3. இந்திய கலாச்சாரத்தின் செல்வாக்கு

இம்மூன்று காரணிகளும் இரு கலாசார பாரம்பரியங்களிலும் ஒன்றித்த பல தன்மைகள் காணப்படுவதற்கு எவ்வகையில் பங்களிப்புச் செய்துள்ளன என்பது பற்றிச் சிறிது விளக்கமாக நோக்குவோம்.

மொழி ஒருமைப்பாடு:

இனரீதியாக இருபகுதியினரும் வேறுபட்ட வித்தியாசமான தனித்துவப் பண்புகளைத் தன்னகத்தே கொண்டோராக இருப்பினும் இரு இனத்தினரதும் தாய்மொழி தமிழ்தான். தெவுந்தரையில் இருந்து பருத்தித்துறை வரை வாழும் ஒரு மலாய் இனத்தினரைத் தவிர்த்து அனைத்து முஸ்லிம்களதும் தாய்மொழிதமிழ் தான். வெள்ளிக்கிழமை தோறும் பள்ளிவாயில் பிரசங்க மேடைகளில் வைத்து நிகழ்த்தப்படும்

குத்பாப் பேருரையானது தமிழில் மாத்திரமே நடைபெற்று வருகின்றது. இவ் வொருமைப் பாடானது மொழிரீதியான தேசிய வாதத்தில் தமிழர்களோடு முஸ்லிம்களை இணைத்து வைத்தது. இது பற்றி பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது பின் வருமாறு குறிப்பிடுகின்றார்.

> "There is an undeniable cultural unify between the Tamil and muslim groups through the use of the same language. The implications of linquistic Nationalism have not allowed the muslims to emphasis adequatdy the significance of the use of Tamil as their mother tongue. This has to be appreciated in the context of the Sinhala - Budhist and Hindu Tamil Polarizations that were taking place in the evolution of Sinhala and Sri Lankan Tamil nationalism. However it is Significant that muslims have stressed the need of Tamil - medium education even in pre dominantly Sinhalese areas. Their substantial contribution to modern Sri Lankan Tamil Literature.

'ஒரே மொழியைப் பிரயோகிப்பதைக் கொண்டு தமிழர்களுக்கும் முஸ்லிம் குழுக்களுக்குமிடையே மறுக்க முடியாத ஒரு கலாசார ஒருமைப்பாடு இருந்து வருகின்றது. தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்களாக முஸ்லிம்கள் விளங்குவதால் மொழியியல் ரீதியான தனிப்பட்ட தேசிய வாதத்தை அவர்களால் அவ்வளவாக உறுதிப்படுத்த முடியாமற் போயிற்று. சிங்களவர்களின் எழுச்சியுடனும் தமிழ்த்தேசிய வாதத்துடனும் சம்பந்தப்பட்ட வகையில் தோன்றிய சிங்கள - பௌத்த, இந்து - தமிழ் பிரிவினைவாதங்கள் போன்றன இவர்களிடம் தோன்றுதது வரவேற்கப்பட வேண்டிய ஒரு விடயம். எவ்வாறுயினும் சிங்களவர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட பகுதிகளில் கூட இவர்கள் தமிழ்மொழிப் போதனையின் அவசியத்தை வலியுறுத்தி வந்துள்ளனர். தற்கால தமிழ் இலக்கியத்துக்கு அவர்கள் ஆற்றியுள்ள பங்களிப்பானது அவர்களது தமிழ் மொழி அர்ப்பணத்தை எடுத்துக் காட்டக் கூடியதாக இருக்கின்றது.

இலங்கை முஸ்லிம்களுக்கும் தமிழ் மொழிக்கும் இடையிலான தொடர்பு மிகத் தொன்மை வாய்ந்தது. தமிழ் எழுத்துக்கள் அவர்களிடம் பிரபல்யம் பெறுத காலத்தில் தமிழில் சித்தித்து அறபு எழுத்துக்களால் தமது சிந்தனைக்கும் கருத்துகளுக்கும் வடிவம் கொடுப் போராக அவர்கள் விளங்கினர். இதனால் அறபுத் தமிழ் எனும் ஒருவகை எழுத்து வழக்கு உருவானது. இது பற்றி ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> The Ceylon moors, frequently in the past and not frequently in the present have been using Arabic Script with neeessary modifications, to write their Tamil. This is called Arabic Tamil. Being Tamil written in Arabic charectors, Arabic Tamil is something which neither the Arabs nor Tamils could understand. The Arabs being able to read but not understand while the Tamils could understand but for their inabilily to read the Scripts.

இலங்கைச் சோனகர், சென்ற காலத்தில் மிக அதிகமாகவும் சமகாலத்தில் குறைவாகவும் தங்களது தமிழை எழுதுவதற்கு அறபு லிபியைத் தேவையான திருத்தங்களுடன் பிரயோகித்து வந்துள்ளனர். இது அறபுத் தமிழ் என அழைக்கப்படுகின்றது. அறபு எழுத்துக்களால் தமிழ்மொழி எழுதப்படுவது தான் இது.

Professor K. Sivathamby, **The Sri Lankan ethnic crisis and muslim - Tamil relationship**, Inqilab muslim mayhs University of Jaffna, 1986/87 p. 22

AZEEZ A. M. A. **Ceylon muslims and Their mother tongue**, Ceylon Daily News, Col. Sri Lanka, 10 - 02 - 1941.

அறபுத் தமிழ் என்பது அராபியராலோ தமிழர்களாலோ விளங்கிக் கொள்ள முடியாத வொன்று. அராபியருக்கு வாசிக்க முடியுமாக இருந்தாலும் விளங்க முடியாது. தமிழர்களுக்கு விளங்க முடியுமாயிருப்பினும் வாசிக்க முடியாத குறை அவர்களிடம் இருக்கின்றது.

தமிழ் மொழி மூலம் முஸ்லிம் சிறுர்கள் தமது கல்வியைத் தொடர ஆரம்பித்ததுடன் தமிழ் - முஸ்லிம் உறவு வலுவடைந்ததுடன் முஸ்லிம் சிறுர்கள் தமிழ் கலாசார பாரம் பரியங்களையும் தமிழ் சிறுர்கள் முஸ்லிம் கலா சார பாரம்பரியங்களையும் விளங்கிக் கொள்ளும் வாய்ப்பேற்பட்டது. சர்வசன வாக்குரிமை அமுலுக்கு வந்ததுடன் வகுக்கப்பட்ட சுய பாஷாத்திட்டத்தின் படி கல்வி நிர்வாக சபை யில் முஸ்லிம்கள் சார்பாக இடம் பெற்ற சேர் ராசிக் பரீட், டீ. பீ. ஜாயா போன்றோர் முஸ்லிம்களுக்குத் தனியான பாடசாலைகள் வேண்டும் எனும் கொள்கையை அரசாங்கத் தின் கவனத்துக்குக் கொண்டுவர முஸ்லிம் பாடசாலைகள் உருவாயிற்று. எனினும் போத ஆசிரியர்களாக நியமிக்கத் தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் அப்போது முஸ்லிம் சமூகத்தில் போதியளவு காணப்படாமல் இருந்தமையால் பெரும்பாலான வெற்றிடங்கள் தமிழ் சமூக சகோதரர்களைக் கொண்டே நிரப்பப்பட்டன. இக்கால கட்டங்களில் தோன்றிய பாடவிதா னத்துக்கு அமைவான நூற்களும் வேறும் உசாத்துணை நூற்களும் இந்துசமய கலாசார பாரம்பரியங்களையும், இலங்கைத் தமிழர்களின் கலாசார மரபுகளையும் அடிநாதமாக வைத்து எழுதப்பட்டதால் இவை முஸ்லிம் மாணவர் களிடம் செல்வாக்கைச் செலுத்தி நின்றன. இரு கலாசாரப் பாரம்பரியங்களும் முட்டி மோதும் வாய்ப்பேற்பட்டதால் கலாசாரப் புரிந்துணர்வும் பரிமாற்றமும் தோன்றலாயின.

சிறுபான்மை இரு இனங்கள் எனும் உணர்வு:

பெரும்பான்மைச் சிங்களவர்களில் இருந்து கணிசமானவளவு வேறுபட்ட கலை, கலாசார பாரம்பரியங்களைக் கொண்டவர் கள் எனும் உணர்வுதான் பேரினவாதத்துக் கெதிரான அகிம்சைப் போராட்ட காலத் திலும் பின்பு அது ஆயுதப் போராட்டமாக உருவெடுத்தகால கட்டங்களிலும் தமிழர்கள் முஸ்லிம்களைத் தம்மோடு இணைத்துக் கொள் வதற்கும் அவர்களது உரிமைகளுக்குக் குரல் கொடுப்பதற்கும் வழியமைத்துக் கொடுத்தது. மற்றுமோர் சிறுபான்மை சமூகத்தை அர வணைத்து, அதன்மூலம் தமது விடுதலையுணர் வுகளில் அவர்களையும் பங்குதாரர்களாக்கி, தமது உணர்வுகளுக்கு உலக அரங்கில் பெறு மதிமிக்க அர்த்தத்தையேற்படுத்த முனைந்து வந்திருப்பதைக் கடந்தகால சம்பவங்கள், விடுதலையுணர்வின் பரிணமம் என்பன தெட் டத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. தமிழ் பேசும் மக்கள், முஸ்லிம்களும் தமிழ ரும், இஸ்லாமியத் தமிழரும், தமிழரும் போன்ற சொற்பிரயோகங்கள் இவ்வுணர்வை வெளிப்படுத்துவதற்காகவென்றே முன்வைக் கப்பட்டன.

இவ்வுணர்வின் அடிப்படையிலேயே சேர். பொன்னம்பலம் இராமநாதன் ஆரம் பத்தில் 1885ல் இலங்கை சட்டவாக்க சபையிலும் பின்பு முடிக்குரிய ஆசிய சமூகத்தின் இலங்கைக் கிளையிலும் பேசும்போது, 'சோனகர் என்போர் இனத்தால் தமிழர்கள் மதத்தால் முஸ்லிம்கள், என எடுத்துக்கூறி தானே தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் தலைவர் எனக் கூறவைத்தது. இவரது இக்கருத்து முஸ்லிம்கள் மத்தியில் பல பாரிய எதிர் விளைவுகளையேற்படுத்தியது மட்டுமல்லாமல் 'முஸ்லிம் நேசன்' ஆசிரியர் மறுமலர்ச்சித் தந்தை எம். சி. சித்திலெப்பை, ஐ. எல். எம் அப்துல் அஸிஸ் என்போரின் கடுமையான விமர்சனத்துக்கும் ஆளாகியது.

தமிழ் மக்களிடையே உரிமைப்போராட் டம் அகிம்சை வடிவத்திலிருந்து ஆயுதப் போராட்டமாகப் பரிணமம் பெற்றபோது தோன்றிய விடுதலை இயக்கங்கள் அனைத்தும்

மௌலவி அப்துர் ரஸ்ஸாக் எம். ஐ. முஸ்லிம்களின் தமிழ்த் தொண்டு, தமிழாரம், தமிழ்க்கழகம், தொழிற்றிணைக்களம், கொழும்பு 5, 1975.

முஸ்லிம்களைத் தங்களுக்குள் ஒரு பகுதியினர் எனக்காட்டுவதற்கும் அவர்களைத் தங்களுடன் பங்குதாரர்களாக்கிக் கொள்வதற்கும் முயன்று வந்துள்ளன. அரசியல் வாதிகள் கூட பாராளுமன்றத்தில் முஸ்லிம் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்துள்ளனர். முஸ்லிம்களிடம் தற்போது இவ்வாறுனவேர் உணர்வு தோன்றியிருப்பதாடு முஸ்லிம் தலைவர்கள் அரசியல் மேடைகளிலும், பகிரங்க மேடைகளிலும் பாராளுமன்ற அமர்வுகளிலும் தமிழ் மக்களின் நியாயமான உணர்வுகளை மதித்துக் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். இவையனைத்தும் நாம் இந்நாட்டின் சிறுபான்மை இனங்கள் எனும் உணர்வு இவர்களிடம் வேரூன்றியுள்ளதையே காட்டுவதாக இருக்கிறது. இது இரு சமூகத்தினரும் மதிக்கும் கலாசார பாரம்பரிய அம்சங்களில் ஒன்றித்த பண்புகள் காணப்படுவதற்குக் காரணங்களாக இருந்து வந்துள்ளன.

இந்திய கலாசாரச் செல்வாக்கு:

அறபு நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான தொடர்பு கௌதம புத்தருடைய காலத்தில் இருந்தே இருந்து வந்துள்ள தெனினும் இவ்வுறவானது உண்மை வடிவம் பெற்றது கி. பி. 8 ம் ஆண்டுக்கும் 12 ம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் தான். கி. பி. 8 ம் நூற்றாண்டளவில் இந்துஸ்தான் வரை கைப்பற்றிய முஸ்லிம் வெற்றியாளர்களின் முயற்சியால் விஞ்ஞான கலாசாரப் பரிமாற்றங்களுடன் கருத்துப் பரிமாறல்களும் இருநாடுகளுக்குமிடையே தோன்றலாயின. இந்தியாவைப் பற்றியும் அதன் மக்களைப் பற்றியும் ஆளமான முறையில் இவர்களது மனதிலேற்பட்ட அன்பினதும் பாசத்தினதும் காரணமாக சிந்து, பஞ்சாப் மாகாணங்களின் அதிகாரிகள் என்பதைக் கூட மறந்து இந்தியர்களுடன் ஒன்றிணைந்தனர்.

சமஸ்கிருத மொழியில் காணப்பட்ட பல புத்தகங்கள், அறிவுக் கருவூலங்கள் அறபு மொழியில் பெயர்க்கப்பட்டன. மௌரிய, குப்த காலங்களைச் சேர்ந்த இவ்விந்தியக் கருவூலங்களை அறபு நாடுகளுக்கு எடுத்துச் சென்று பரப்பும் பணியில் அபூஸைத் அல் - ஸைராபி, ஸீலமான் தாகிர், அல் - மஸீதி, இப்னு ஹோகல், அல் - ஜாஹிழ், அல் - இஸ்தக்ரி, அல் - மக்தீஸி, இப்னு ஹஸம், இப்னு அல்நதீம், இப்னு அபீ உஸைபா, இப்னுல் கிபாரி, இப்னு ஷஹ்ரயார், அல் - மர்வாளி, அபுல்பிதா, அல் - பிரூனி, இப்னு பதூதா போன்றோரின் பணி இத்துறையில் குறிப்பிடத்தக்கது. இந்தியாவுக்கும் அறபு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத் தொடர்பு கி. மு. 2800 -வது ஆண்டில் இருந்தே நிலவி வருகின்றது. அறபு - இந்திய கலாசாரத் தொடர்பால் அறபு மொழியில் பல இந்தியச் சொற்கள் புகுந்ததுடன் இந்திய மொழிகளில் அறபுச் சொற்களும் புகுந்தன. அரேபியர் 7-ம் 8-ம் நூற்றாண்டுகளில் இருந்து 16-ம் நூற்றாண்டு வரை இந்தியாவுக்குள் வந்து குடியேறிய வண்ணம் காணப்பட்டனர்.

1258 - ம் ஆண்டில் அப்பாசிய கிலாபத்தின் தலைநகரமாகவிருந்த பக்தாத்நகரம் மங்கோலியர்களின் தாக்குதல்களுக்கு ஆட்பட்டு வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து பாரசீக வளைகுடாவில் அரேபியரின் நடமாட்டம் வெகுவாகக் குறைந்தது. பக்தாதின் வீழ்ச்சியைத் தொடர்ந்து இலங்கைக்கும் அரேபியருக்கும் இடையிலான நேரடித் தொடர்பு இல்லாமற் போய்விட்டது. இவர்களது பயணம் இந்தியாவினூடாக அல்லது இந்தியாவில் ஏற்கனவே குடியேறியோர் மூலமாகவே மேற்கொள்ளப்பட்டதால் ஏற்கனவே இந்திய கலாசாரத் தாக்கங்களுக்குட்பட்ட அரேபியர் அவற்றை இலங்கையில் குடியேறிய வேளையிலும் தொடர்ந்து அமுல்படுத்தியதுடன் கலாசார பாரம்பரியங்களாகப் பின்பற்றியும் வந்தனர்.

இந்து - பௌத்த அறநியமங்கள் - ஒப்புமை

திருமதி. தனபாக்கியம் குணபாலசிங்கம் எம். ஏ. ஏழாலை

இந்து மதம் மிகப் பழைமையான தோற்றுவாயை உடையது எனினும் இந்து மத வளர்ச்சியில் உண்மைத் தத்துவ ஆய்வுகள் ஒருபுறம் வளர்ந்து கொண்டிருக்கையில் மறுபுறத்திற் சமுதாயதேவைக் கப்பாற்பட்ட முறையில் இறைவனிடம் பக்திசிரத்தையையேற்படுத்தாத சமயக்கிரியைகள் பெருகி வளர்ந்து கொண்டிருந்தன. இக்காலகட்டத்திலேதான் இந்துவாகப் பிறந்த சித்தாத்தர் இல்லற வாழ்க்கையினின்றும் தம்மை விடுவித்துக்கொண்டு, தம் சமுதாயத்திற் பெருகி வளர்த்திருக்கின்ற இந்துசமயக் கிரியைகள் இம்மைக்கோ அல்லது மறுமைக்கோ உதவவல்லன அல்ல எனக் கருதிப் பல்லாண்டுகள் தவமிருந்து தமது அனுபவவாயிலாகக் கண்ட உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு பௌத்த மதத்தினை உருவாக்கினர். இவ்வாறு தாம் உருவாக்கிய பௌத்த மதத்தின் அறநியமங்களைத் திரிபிடக எனும் நூலில் விரித்துரைத்ததோடு,தாம் எவ்வுயிர்களுக்கும் நன்மைபுரியும் பொருட்டுப் பல்பிறப்பெடுத்து எழுந்தருளுவர் என்றும் மக்களுக்கு உணர்த்தினர் அதனால் அவருடைய காலத்திலேயே பௌத்தமதம் மக்களுக்குப் போதிக்கப்பட்டு, இந்திய மக்களும் தழுவலாயினர். அயல் நாடுகளிலும் பரப்பப்படலாயிற்று. அதனாலே பௌத்த மதம் இன்று உலகப்புகழ் வாய்ந்த மதமாகத் திகழ்கின்றது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், இதுகாறும் நடைபெற்றுள்ள தொல்லியல், வரலாற்று ஆய்வுகள் தமிழகத்திலும், ஈழத்திலும் பௌத்தம் தமிழ் மக்களிடையே வகித்த உன்னத நிலையை எடுத்துக் காட்டியுள்ளன. சிறப்பாகப் பல பௌத்தத் தமிழ்ப் பெரியார்கள் தமிழிலக்கண, இலக்கியங்களாயாத்துத் தமிழ் மொழியை வளம்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தனர் என்றும் அறிகின்றோம். அதுமட்டுமன்றிக் கி. பி. 6ம் நூற்றாண்டளவிற் காஞ்சி அரசபரம்பரையைச் சார்ந்த வரானே போதிதம்மர் நெறிப்படுத்திய 'தியான மார்க்கம்' என்ற பௌத்த நெறியே சீனாவிற் 'சன்மதம்' எனவும் ஜப்பானில் 'சென்மதம்' எனவும் புகழ்பெறலாயிற்று. எனவே இன்று பௌத்தம் உலக சமயங்களுள் ஒன்றாக விளங்குகின்றதெனில், அதன் இன்றைய நிலைக்குத் தமிழர் அன்று ஆற்றிய பங்களிப்புகளும் காரணிகளாகின்றன எனில் மிகையாகாது. பௌத்த மத வளர்ச்சியிற் தமிழர் அன்று ஆற்றிய பணிகள் இவ்வாறு இருப்பினும், இன்று பௌத்தம் தமிழ் மக்கள் மத்தியில் வேரோடற்றுப்போய்விட்டது. இதன் காரணத்தை ஆய்வதே இக்கட்டுரையாகும்.

உலகின் வேறெந்த மதங்களிலும் இல்லாதவாறு ஆன்மீகசிந்தனை பெருகி வளர்ந்த மதம் இந்து மதமாகும். இந்து மதத் தத்துவங்கள் காலத்துக்குக் காலம் தர்க்கரீதியான ஆய்வுகளுடன் வளர்ந்து வந்துள்ளன. இந்த இந்துமத தத்துவங்களின் மூலநூல்களான வேதாகமங்களை இறைவனே வகுத்தனன் என்பர் எம்முன்னோர். இதற்குத் திருஞான சம்பந்தர்

> 'தொகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம்
> வகுத்தவன்" என்றும்
>
> ....."தொன்மறை யாறங்கம்

ஆய்ந்தவன்' என்றும் கூறுவதை, நாம் ஒரு மேற்கோளாகக் கொண்டு உய்த்துணரத்தக்கதாம். மேலும் இறைவனே இந்த மெய்நெறியின் நுண்பொருளினை உணரத்தக்க ஞானம்மிக்க அகச்சந்தான குரவராகிய திருநந்திதேவர், சனற்குமாரர், சத்தியஞானதரிசினிகர், பரஞ்சோதிமுனிவர் முதலான நால்வருக்கும் உபதேசித்து, அவர்கள் மூலமாக உயிர்கள்

நால்வகை உறுதிப் பொருள்களையும் (அறம், பொருள், இன்பம், வீடு) அறிந்து ஒழுகி, உய்திபெற வழிவகுத்தனர் என்பதனையும்

'பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப் பல்
லுலகினிலுயிர் வாழ்க்கை
கண்ட நாதர்''

என்றும் திருஞானசம்பந்தர் கூறுவதிலிருந்தும் நாம் கண்டுகொள்ளலாம்.

இவ்வாறு வேதசிவாகமங்களுள் இறைவனால் உரைக்கப்பட்ட பதி, பசு, பாசங்களின் உண்மை விளக்கத்தினைக் கிறித்துவிற்குப் பிற்பட்ட நூற்றாண்டுகளில் இந்துசமயக் குரவர்களும், புறச்சந்தான குரவர்களும், சங்கரர் வழிநின்ற தத்துவ ஆசிரியர்களும் உலகோர்க்கும், ஞானநெறி நிற்போர்க்கும் எடுத்துரைக்கலாயினர். (வேதசிவாகமங்களுள், வேதங்கள் உலகோர்க்கும், சிவாகமங்கள் இறைவனின் அருள்ச்சத்தி விழந்த சத்திநிபாதருக்கும் வகுக்கப்பட்டனவாம்) இச்சமயாசாரியர்களும், தத்துவாசிரியர்களுமே வேதசிவாகமங்களில் உரைக்கப்பட்ட அறநியமங்களைப் பிற மதவாதங்களுடன் தர்க்காதியாக வாதிட்டு, இவையே ஒருவனின் வாழ்க்கையை ஈடேற்றவல்லன என்றும் நிலைநிறுத்தலாயினர்.

ஏற்கனவே பௌத்தம் சிறந்ததொரு வாழ்க்கைத் தத்துவத்தினை, ஆன்ம ஈடேற்ற வழிகளை உலகோர்க்கு வகுத்திருந்தபொழுதிலும் பௌத்தத்தின் அறநியமக் கோட்பாடுகள் அத்திவாரமிடப்படாது எழுப்பப்பட்ட ஒரு வீட்டின் பகுதிகளை நிகர்த்தனவாம். அதாவது பௌத்தத்தின் அறநியமங்கள், அவ்வீட்டில் நம்பி வாழும் சாதகர்களுக்கு உறுதியான பலனை அளிக்கவல்லனவல்ல. ஏனெனிற் பௌத்தம் உண்மைப்பொருள்களான பிரம்ம விசாரணை, ஆன்ம விசாரணை, பிரபஞ்ச விசாரணை என்பன குறித்து முன்பின் முரணான கருத்துக்களைக் கொண்டிருந்ததேயாம். அதனற் பௌத்தம், பௌத்த மதத்தினைச் சரணடைந்த ஆன்மசித்சக்திகளை ஒரு சாதகனை வழிப்படுத்தத் தவறிவிடுகின்றது எனலாம்.

சிறப்பாக இந்துமதம் கூறுகின்ற, கருமங்களின் பிணிப்பாற் தொடர்கின்ற சுழற்சியான பிறப்பு வட்டத்திலிருந்து ஒருயிர் தன்னை விடுவித்துக்கொள்ள அருள் பாலிப்பவரும், உயிர்மீது கழிவிரக்கம் கொண்டிரங்கி, உயிருடன் ஒன்றாய், வேறாய், உடனாய் நின்று இயங்குகின்றவருமான என்றும் உள்பொருளான இறைவனைப் பற்றிப் பௌத்தம் எதுவும் கூறவில்லை. அதற்குப் பதிலாக எவ்வுயிரிடத்தும் அன்புடையவரான புத்தர் பல்பிறப்பெடுத்து உயிர்களுக்கு நன்மை செய்யும் பொருட்டுக் குருவாக அரசமர நிழலில் உருவத்திருமேனி கொண்டெழுந்தருளுவர் என்கிறது. புத்தர் பல பிறவிகளை எடுப்பவர் என்பதனால், பௌத்தத்தில் உயிருக்கும், உடம்புக்கும் தோன்றுகின்ற கணபங்கவாதம் உலகோருக்கு அருள் புரிகின்ற கடவுளாகிய புத்தருக்கும் உரியதாகின்றது. (அறிவும், அறியப்படும் பொருளும் கணந்தோறும் தோன்றி அழிகின்றன என்பதே பௌத்தத்தின், கணபங்கவாதமாகும்) இவ்விதமே உயிரின் பிறப்பென்பதும் குற்றம், வினை, வினைப்பயன் காரணமாக ஐவகைக் கந்தங்களின் (உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம்) கூட்டமாய் உடம்பின் கண் எழும் பலதிறப்பட்ட அறிவுகளை உடம்புடன் கூடி நிலையற்றதாய் அழிவுறுமேயன்றி, உயிரென்ற ஒரு நித்தியப் பொருள் இல்லை என்கிறது. மூப்பென்பது கணத்திற்குக்கணம் ஏற்படும் மாற்றத்தினால் நிலையற்றவையான உயிரும், உடலும் மாற்றமடைகின்றனவேயன்றி வேறொன்றுமல்ல என்று கூறும். பிறவித்துன்பம் அறுதலாவது கந்தங்களின் கூட்டம் அழிவுறுதலேயாம். ஐங்கந்தமும் முற்றுக அற்றுப்போதலே முத்தி என்பதாம். மேலும் அறிவிலேதான் உலகந்தோன்றுவதென்றும், அறிவின் வேறாய உலகம் என்ற நித்திய சடப்பொருள் எதுவும் இல்லை என்றும் பிரபஞ்சம் பற்றியும் சூனியவாதமே கூறுகின்றது. இவ்வாறு கடவுள் - உயிர் - உலகம் பற்றிப் பௌத்தம் இத்தகைய விளக்கங்களைத் தந்ததற்கு அடிப்படையாக இருந்த காரணம், பௌத்தம் காட்சி, கருதல் எனும் இரு அளவைகளை மட்டுமே ஏற்றுக் கொண்டு இத்தத்துவங்களை ஆய்ந்தமையாம்.

எனினும் பௌத்தம் குருஉண்மை, அறி வுண்மை, சன்மம், மறுபிறப்பு, நிருவாண நிலை, விடுதலைக்கான சாதனங்கள் என்ப வற்றை ஏற்றுக்கொண்டுள்ளது. சிறப்பாகப் பௌத்தம் வாழ்க்கை பிறவித் துன்பத்தின் சுழற்சி என்று கருதியமையாற், கவனமான முறையில் ஒருவன் இத்துன்பக்கடலிலிருந்து விடுவித்துக் கொண்டு நிருவாண நிலையை யடைய வழிவகுக்கின்ற சாத்வீகமான சாத னங்களை அறநியமங்களாக நெறிப்படுத்தி யுள்ளமை அவதானிக்கத்தக்கது. ஒருவன் துன்பம் தருகின்ற பிறப்பிற் சிக்காமல் நிரு வாண நிலையையடைவதற்குரிய சாதனங்க ளாகத் தானம், சீலம், பொறை; வீரியம், தியானம், உணர்ச்சி, உபாயம், அருள், வலி, ஞானம் என்பன வகுக்கப்பட்டுள்ளன. இவற் றுள் உலகோர் தானமும், சீலமும் மேற் கொள்வர். சீலம் என்பது மனம் வாக்குக் காயங்களை அடக்கி அறவழி நிற்பதாகும். இந்த அறிநெறியானது கொல்லாமை, கள்ளாமை, காமமின்மை, பொய்யாமை, புறங்கூறாமை வன்சொற் கூறாமை, பயனற் றவை மொழியாமை, வெஃகாமை, வெகு ளாமை, நற் காட்சி என்பனவாம். இவற்றைக் கடைப் பிடிப்பதனால் ஒருவன் மறுபிறப்பில் நல்ல பிறப்பை எடுக்கின்றான்.

மேலும் நிருவாணநிலையையடைய முயல் வோருக்குப் பௌத்தம் நான்வகை வாய்மை களை வகுத்துள்ளது. அவையாவன துக்கம், துக்ககாரணம், துக்கநீக்கம், துக்கநீக்கநெறி என்பனவாம். இவற்றுள் துக்கமென்பது பிறப்பு, பிணி, மூப்பு, சாவு, நுகர்வு முத லான வழிகளில் ஒருவனை வந்தடையும். இத் துக்கத்திற்குக் காரணமாய் அமைபவை பற்று, அறியாமை, செயல், வேட்கை, வினைப்பயன் ஆகியனவாம். துக்கத்தை நிவா ரணம் செய்தல் என்பது ஒரு பொருளின் மீது வைக்கப்படுகின்ற பற்றானது துன்பத் திற்கும், பிறப்பிற்கும் காரணம் என்று அறி தலாம். துக்கநீக்கமாவது, பற்றற்ற நெறியே நிருவாணத்தையடைய வைக்கின்ற நெறி யெனக்கொண்டு அவ்வழி நிற்றலாம். இவ் வாறு துக்கநீக்கத்துக்குரிய பற்றறுத்தலைப் பௌத்தம் அகுபபாவனை என்கிறது. இப் பாவனையைத் தொடர்ந்து ஏற்படுகின்ற மைத்திரி பாவனை (எல்லா உயிர்களிலும் அன்பு செலுத்துதல்), கருணைப்பாவனை (பிற உயிர்களின் துயரை நீக்க விரும்புதல்), முதி தைப்பாவனை (பிற உயிர் இன்பம் கண்டு அகமகிழ்தல்) முதலான பாவனைகளாற் திருத் திய உணர்வுடன் அறிவுரை கேட்டல், கேட் டதைச் சிந்தித்தல், கேட்டவாறு நடத்தல், உண்மை தெளிதல் முதலான நான்கு நெறி களின் வழிநின்று அஞ்ஞானமாகிய அக இருளை அகற்றலே நிருவாணநிலையை அடைய வைக்கும் என்கிறது.

எனவே ஒருவன் பிறப்பு வட்டத்திலி ருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்குரிய சாதனமார்க்கமாகவே பௌத்தம் மேற் குறிப்பிட்ட அறநியமங்களை வகுத்துள்ளது. இது இயல்பாகவே இந்து மதம் கூறும் ஐம் பொறியடக்கமுடைய ஞானியர் நியமங்க ளாம். எனவே உலகஞானம் கைவரப்பெறாது பௌத்த சங்கத்தையணுகிய பிரம்மச்சரிய னுக்கு, இவை இலகுவிற் சாத்தியப்படுவதில்லை என்பதனைக் கடந்தகாலப் பௌத்த சங்க வரலாறுகள் எடுத்துக்காட்டியுள்ளன. ஆனால் இந்துமதம் ஒருவன் வாழ்க்கையில் முழுமை யான அனுபவங்களைப் பெற்ற பின்னரே முற்றுணர்வுபெறும் நிலையையடைய முடியு மெனக் கொண்டு அறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப் பொருள்களையும், பிரம்ம சரியம் (சீடராய் நின்று கல்வி கற்கும் நிலை) இல்லறம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் எனும் நால்வகை வாழ்க்கைநிலைகளையும் வகுத்துள்ளமை சிறப்பாக அவதானிக்கத் தக்கதாகும்.

மேலும் பௌத்தத்தின் கருமம், மறு பிறப்பு, அறநியமங்கள், நிருவாணநிலை என்ற கோட்பாடுகளை ஆராயுமிடத்துக் கலைபங்க வாதத்தினால் அறிவும், அறியப்படும் பொரு ளும் கணந்தோறும் தோன்றியழிகின்றன என்று பௌத்தம் கூறுவதனால், உயிர் உலகம் என்ற நிலையான பொருள்கள் எதுவும் இல்லை யென்று தெளிவாக்கப் படுகின்றது. அப்படி யானால் நிலையற்ற (இல்பொருளான) பொரு ளான உயிர்மீது கருமத் தொடர்சிகளையும், பிறப்புச் சுழற்சிகளையும், அறநியமங்களையும், நிருவாணநிலைகளையும் பௌத்தம் ஏன் கூறத்

துன்றது என்ற வினை இயல்பாகவே எழுகின்றது. எனவே இக்கோட்பாடுகள் யாவும் முன் பின் முரணித்து நிற்பதை நாம் அவதானிக்கலாம். மற்று உயிர்களுக்கு உதவி செய்வதற்காகக் குருவாக எழுந்தருளுகின்ற புத்தரும் பலபிறப்புக்களை எடுக்கின்றார் என்பதனாற் குருவாய் வருகின்ற புத்தரும் கணபங்க வாதத்திற்கு உட்பட்டு அழிந்து போகின்ற தன்மையுடையவராதலால், இவருடைய பிறப்பினை அறுக்க இந்துமத ஆகமங்கள் கூறுகின்ற அருளே குருவடிவம் கொண்டெழுந்தருளல் அவசியமாகின்றது. சிவாகமங்கள் சகலநிலையிலுள்ள மானிடர்க்குப் பக்குவமுதிர்ச்சி கண்டு பரம்பொருளே மானுடவடிவில் நின்று அருள்புரிவர் என்னும், இங்கு எழுந்தருளும் ஞானகுரவர் மானுட வடிவிற் தோன்றினும் அத்துவிதப் பரமுத்தியின்பம் துய்ப்பிக்கும் தூய அருளேயாம் என்றும் கூறுகின்றன. இந்த ஞானம் பேரறிவுக்குரிய ஞானகுரவருக்கு அல்லாமல் வேறெவருக்கும் அமையப்பெறுதலாம், இந்த நியமத்தினை

'துன்னியவைம் புலவேடர் சுழலிற் பட்டுத்
துணைவனையு மறியாது துயருறுந்தொல்
லுயிரை
மன்னுமருட் குருவாகி வந்தவரி வீக்கி
மலமகற்றித் தானுக்கி மலரடிக்கீழ் வைப்பன்
சி. சி. சுபக்கம் (செய். 253)

எனும் சூத்திரத்தில் கண்டு நாம் தெளியலாம்.

இந்துமதத் தத்துவங்கள் இல்லறமே துறவறத்திற்குக் காரணம் என்றும், காரண காரியமுறைப்படி இல்லறம் முன்னும் துறவறம் பின்னுமாக மானுட வாழ்க்கையை இரண்டு பெரும்பகுதிகளாக்கித், தானமும் பூசையும் இல்லறத்தாருக்கும், தவமும் விரதமும் துறந்தார் செய்யப்படவேண்டிய அறங்களெனவும் வகுத்துள்ளன. எனவே இந்து மதம் இல்லறம் என்பது துன்பம் விளைவிப்பதெனக் கண்டு துறந்துவிடும்படி கூறவில்லை. அதற்குப்பதிலாக வாழ்க்கையின் பல கட்டங்களிற் படிப்படியாக ஒருவன் அனுபவிக்கின்ற இன்பதுன்ப அனுபவங்களே அவனை வாழ்க்கையெனும் கடலை நீந்திக் கரையேற உதவுகின்றன எனக்கூறும். இறைவனின் மூர்த்தங்களில் ஒன்றான அர்த்தநாரீசுவர உருவத்திருமேனியும், உயிர்களைப் போகங்களை அனுபவித்து உவர்ப்படைய வேண்டுமென்கிறது. பௌத்தமோ வாழ்க்கையின் துன்பங்களைக் கண்டு கிலேசமுற்ற வரான கௌதமரால், ஒருவன் எவ்வாறு தன்னைத் துன்பங்களினின்றும் விடுவித்துக் கொள்ளலாம் என்ற தேடலினால் உருவாக்கப்பட்டதாகும். எனவே பௌத்தம் உண்மைப்பொருள்கள் பற்றிய தேடலில் அதிக அக்கறை காட்டவில்லை என்பதும் தெளிவாகின்றது. அதனாலே பௌத்தத்தின் கோட்பாடுகள் முரணுயின எனலாம். பௌத்தத்தின் முரண்பட்ட கோட்பாடுகளிலிருந்து, இந்துமத அறநியமங்களைப் பூரணமாக நாம் விளங்கிக் கொள்ள முடிகின்றது எனில் மிகையாகாது. பௌத்தத்தின் குறைபாட்டினை அப்பர் சுவாமிகள்

'மெய்த்தவன் காண் மெய்தவத்தில்
நிற்பார்க் கெல்லாம்
பொய்த்தவன் காண் புத்தன்'

என்றும் மாணிக்கவாசக சுவாமிகள் ''புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம்'' என்றும் எடுத்துரைப்பதனால் நாமும் உய்த்துணரக் கூடியதாக இருக்கின்றது.

இந்துமதத் தத்துவங்களிற் சிறப்பாக வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத் திறன் பதி, உயிர் என்பன எமது ஊனக்கண்களாற் கண்டறியத்தக்கனவல்ல, ஆதலால் இவற்றினை ஆகமம், காட்சி, கருதல் முதலான அளவைகளாலும், ஆன்ம சிற்சக்தியாலும் என்றும் உள்பொருள்கள் எனக்கூறும். இதன் பிரகாரம் இல்பொருள் தோன்றாது, உள் பொருளே தோன்றும் என்று பிரபஞ்சத்தின் ஒடுக்கத்திலும் அது உள்பொருள் என்றும், உள்ள காரியம் உள்ள காரணத்தினின்றும் ஒரு கருத்தாவினாற்றான் தோற்றுவிக்கப்படும் என்பதனாற் பிரபஞ்சத்தின் ஒடுக்கத்திற்கும், விரிவிற்கும் கருத்தா வேண்டும் என்றும் கூறுகின்றது. மற்று இறைவன் ஆணைப்படி தத்தம் கருமத்திற்கேற்கப் பிறப்பு வட்டத்திற் சுழல்கின்ற உயிர்களும் என்றும் நித்தியத்தன்மையுடையனவாய், எண்ணிறந்தவை

யர்ய் உள்ளன. அவை அருவத்தன்மையுடையனவாயினும் எண்பத்து நான்கு நூருயிரம் யோனி பேதங்களையுடைய உடல்களில் வசித்திடவரும் வியாபகத் தன்மையுடையவை அறிவுப்பொருளாயினும் அனுதியே மூலமலத்தினுல் அறிவுமறைப்புண்டிருப்பதனுற் சார்ந்த தன் வண்ணமாய் நிற்கும் இயல்புடையன. அதனுல் அவை முற்றறிவுடைய இறை, அறிவற்ற சடப்பொருளாலான உடற்கருவிகள் என்ற இரண்டையும் சார்ந்து, அது அது வாய் அறியும் சிற்றறிவுடையன என்பது சித்தாந்த நெறியாம்.

எமது இந்த உடலுடன் ஒரே காலத்திற் தோன்றி ஒன்றுகி, உடனுகி, வேருகி இயங்குகின்றதான உயிர் உளதா என்று நாமும் சிந்திப்போமானுல், எம்முன்னே ஒரறிவுமுதல் எண்ணறிவுவரை அறிவு விளக்கமுடைய உயிர்ப்பொருள்களும், அறிவுவிளக்கமற்ற சடப்பொருள்களும் இருப்பதை நாம் அறிவோம். எனவே இந்த உயிர்ப்பொருள்களை எடுத்து அவற்றின் உறுப்புகளில் உயிர் இருக்கின்றதா என்று நாம் ஆராயின், உயிரின் இருப்பீடத்தை எங்கே என்று கூறமுடியாதிருக்கின்றது. எனவே ''இங்கில்லை'' 'இங்கில்லை' என்று கழித்து விடுகின்றோம். அவ்வாறு எம்மிடத்தில் எற்படுகின்ற அறிவே உயிராம். ஒருயிர் தன் பிறப்பு முதல் இறப்பு வரை நிலையான அறிவு வளர்ச்சியனுபவங்களைக் கொண்டதாய், உடற்கருவிகள் துணைக்கொண்டு மறந்து, மறந்து அறிவதும் எம் அனுபவமாம். இதன் காரணம் வினைப்பயனே. வினைப்பயனுலே உயிர்கள் அறிவு வேறுபாடுடைய அச்சுக்களிற் பிறக்கின்றன என்பதனை

நிலத்தியல்பால் நீர்திரிந்தற்ருகும்
மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு (குறள்: 452)

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும் (குறள்: 337)

எனும் திருவள்ளுவரின் குறள்களுடன் ஒப்பிட்டுணர்தல் நன்று

மேலும், உயிர் உடலில் ஆன்மதத்துவங்கள் இருபத்துநான்குடனும் கூடி, அது அதுவாக அழுந்தி அறிவதே ஆன்மநுகர்ச்சியாம். எனவே உடம்பு, ஐம்பொறிகள், பிராணவாயு, அந்தக்கரணங்கள் என்பவற்றுள் ஒன்று குறைந்தாலும், உயிரின் அறிவு நிகழாமையால், உயிர் இத்தத்துவங்கள் யாவற்றுடனும் ஒன்றுகியும், வேருகியும், உடனுயும் நின்றே தொழிற்படுகின்றது என்பது தெளிவாம். மேலும இந்திரியங்கள் வாயிலாக வரும் விடயங்களைச் சடப்பொருளிற் (பிரகிருதியிற்) தோன்றியதான புத்திநிச்சயிக்கையில், ஆன்மாவிற்கு அறிவை எழுப்பும் வித்தியாதத்துவம் வாயிலாக, அவ்வுயிர் செய்த புண்ணிய பாவங்களுக்கேற்ப விடயங்களை 'அது' 'இது' எனத் தீர்மானிக்கும். இவ்வாறு உயிர், புத்தி முதலான கருவிகளின் துணைக்கொண்டு அறிவது ஆராய்ச்சி அறிவாகும். ஆனுல் உயிர் ஒன்றினை அனுபவரீதியாக அறியும்பொழுது தானே அறிகின்றது. எனவே சடப்பொருளின் தோற்றமான மூலையின் மாற்றுச் சிகிச்சையினுல் உடல்வேறு, தலைவேருகப் பொருத்தப்பட்ட இரு குரங்குகளின் நடவடிக்கைகள் வழமைபோல இருந்தன எனில், அவை புத்தியின் வழமையான செயற்பாடே எனலாம். எனவே உயிர், மூளையில் ஏகதேசியாக இருக்கின்றது என்றும், அதனுல் மூளையை மாற்றினுல் ஒரு உயிரை மாற்றினதற்குச் சமனுகாது என்னும் இன்றைய வைத்திய நிபுணர்கள் உயிருக்கு உருவைஏற்றி, ஓரிடத்திலே பதியவைப்பதனுல் உயிர் அழிந்துவிடக் கூடிய பொருளாகின்றது. இதனை மறுத்துரைக்கின்ற

''உடலினி லேகதேசி யுயிரென்னி னுருவாய்
மாயும'' (சி. சி. சுபக்கம். செய். 206)

சிவஞானசித்தியார் பாசுரத்திலிருந்து நாமும் உண்மையை உய்த்துணரலாம். இதேவழியில் உயிர் சரீரமெங்கும் நிறைந்து நின்று அறியும் என்பதும் பொருந்தாது என்பதனை

உருவினி னிறைந்து நின்றங் குணர்ந்திடு
முயிர தென்னின்

.....

.....

வருமுடற் குறைக்க வொக்கக் குறைந்து
பின் மாயு மன்றே

(சி.சி. சுபக்கம். செய். 207)

எனும் செயுளாலும் நாம் உணரலாம். எனவே உயிர், உடலில் ஆகாசம்போல் எங்கும் நிறைந்து வியாபியாமலும், உடலின் ஆன்மதத்துவங்களில் ஒரு தத்துவத்தினைப் பொருந்தினால், அதிலேயே வியாபித்து அறியத்தக்கதாயும், மற்றுந் தான் வசிக்கின்ற உடலில் வியாபிக்கத்தக்கதாயும் இருக்கும் நிலையையேசைவசித்தாந்திகள்'வசித்திடவரும் வியாபி' என்பர். எனவே துண்டமாக்கப்பட்ட உடலில் வேதனைக்குட்படுத்தப்பட்டு ஆனந்தளர்ந்திருந்ததும், புத்தியின் வேறுனதுமான உயிரின் வியாபகம் கிரமின் மேற்பரப்புவரை ஒடுங்கிப் பின் தன் அறிவுத் தொழிற் பாட்டிற்கு உதவாத உடலை விட்டு நீங்கலாயிற்று என்பதே சித்தாந்தத் திறனும்

மற்று, மறுபிறப்புக் கோட்பாடு பற்றிய நவீன கண்டு பிடிப்புகளும், ஆய்வுகளும் உயிர்கள் என்றும் உள்ள பொருள்கள் எனவும், கருமத்தின் பிணிப்பாற் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பிறப்பு வட்டத்திற் காற்றடி போற் சுழன்று கொண்டிருக்கின்றன என்பதனையும் உறுதிப்படுத்தியுள்ளன.

உயிர்களின் பிறப்புக்களில் மானுடப் பிறவி எடுத்தல் பெரிய சமுத்திரத்தைக் கையினாலே நீந்திக் கரையேறினதற்கு நிகராம். எனவே தான் இந்து மத அறநியமங்கள் மானுடவாழ்வில் ஒருவன் அறம், பொருள், இன்பம், வீடு எனும் உறுதிப்பொருள்களையும், மாணாக்கன், இல்லறம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் எனும் நால்வகை வாழ்க்கை நிலைகளையும், சரியை, கிரியை, யோகம், ஞானம் முதலான சாதனமார்க்கங்களையும் சாதகர்கள் தத்தம் பக்குவப்படி கைக் கொண்டு பிறவித்தளையை அறுக்க முயல வேண்டும் என்று வகுத்துள்ளது.

எமது நாயன்மார்களில் ஒருவரான சாக்கிய நாயனார்,

'ஈசர் அருள்கூட ஈறில் சிவஞானறியே
பொருளாவ தெனவுணர்வு நாட்டுவார்'

எனப் பௌத்தமதத்திலிருந்து சைவத்திற்கு மாறினர் என்பது நாயன்மார் சமய வரலாறு. மேலும் வாழ்வின் பிற்காலத்தில் இந்துமத அறவழி நின்ற அப்பரும், சம்பந்தர் முதலான சமய குரவர்களும் பௌத்தம் ஆன்ம ஈடேற்றத்திற்கும் போதியதாகாதெனத் தமது பாசுரங்களில் எடுத்தியம்பியுள்ளனர். மாணிக்கவாசக சுவாமிகள் பௌத்தருடன் வாதிட்டு, அவர் வினாக்களுக்கு விடைபகர்ந்தவையாகவே திருச்சாழல் எனும் திருவாசகம் காணப்படுகிறது.

எனவே நாம் மேலே அவதானித்தவாறு பௌத்தம் அடிப்படை உண்மைகளை நெறிப்படுத்தத் தவறிய விடத்தும் ஒருவனின் வாழ்வினை நெறிப்படுத்தும் தத்துவங்களை வகுத்துள்ளது என்பது உறுதியாம். பௌத்த தருமத்தின்படி நெறிப்படுத்தப்பட்ட ஒருவனின் ஆன்ம ஈடேற்றம், புத்தரின் ஆன்ம சிற்சக்திக்குப் புலனாகாத மேலான உண்மைப் பொருளை இறுதியில் அவாவுகின்ற நிலையை எய்துவிக்கும் எனலாம்.

குணநாடிக் குற்றமு நாடி அவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல். (குறள்:504)

நூலோதி

1. ச. தண்டபாணி தேசிகர், திருக்குறள் உரைக்களஞ்சியம், அறத்துப்பால்பாயிரவியல், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1981.
2. Dr T B. Siddalingaiah, Origin and development of Saiva Siedhanta upto 14 th century, 1979.
(பிரதிகள் கிடைக்குமிடம் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்)
3. கா. சுப்பிரமணியபிள்ளை, மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம், கழகவெளியீடு, 1928
4. சிவஞானசித்தியார் சுபக்கம்
5. மணிமேகலை, காதைகள் 29, 30.
6. இரா. நாகசாமி, ''தமிழகமும் பௌத்தமும்'', கையேடு, கலைக்காட்சிக்குழு 2வது உலகத் தமிழ்க்கருத்தரங்கு மாநாடு, சென்னை 1968 பக். 218.
7. ஜி. தனபாக்கியம், இலங்கையிற் தொல்லியல் ஆய்வுகளும் திராவிடர் கலாச்சாரமும், இயல் 6 இலங்கையிற் தமிழர் வளர்த்த பௌத்தம் 1988 பக்: 166 - 209

மாணிக்கவாசகரும் குவலயானந்தமும்

மகாவித்துவான் F. X. C. நடராசா மட்டுநகர்.

மாணிக்கவாசகர் மணிமணியாகத் திருவாசகம் தந்தவர். திருவாசகம் பலராலும் போற்றப்பட்டு வருகிறது. பத்தி நெறி வளர்த்துப் பரவசம் ஆக்குகின்றது. பலர் உரை எழுதியிருக்கிறார்கள். பதிப்புகளும் வந்துள்ளன.

திருவாசகம், திருக்கோவையார் என்பவற்றை இவர் இயற்றியதாக அறிந்துள்ளோம். குவலயானந்தம் என்றோர் இலக்கண நூல் மாணிக்கவாசகரால் இயற்றப்பட்டதாக அறிந்திலேம்.

குவலயானந்தம் என்ற இலக்கண நூலை இயற்றிய ஆசிரியருடைய பெயரிலே மாறுட்டம் உண்டு. வாதவூரன், மாணிக்கவாசகன், வரகுணபாண்டியன் என்ற நாமங்கள் குவலயானந்தம் என்ற நூலிலே சிறப்புப் பாயிரத்திற் காண்டல் கூடும்.

நூலுக்குரிய ''குவலயானந்தம்'' என்ற பெயர் குவலய + ஆனந்தம் என்று பிரிபடும் குவலயம் என்றால் உலகம். பெயர் பொருத்த முடைத்தே. 1979 வரை இலக்கிய நூல்கள் பலவற்றின் உரைகளில் குவலயானந்தம் என்ற பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறோம். நேரிற்பார்க்கும் வாய்ப்பு இல்லை.

இந்நூலை(1) டாக்டர் ச. வே. சுப்பிரமணியம் 1979 ஆம் ஆண்டு அச்சிற்பதிப்பித்தார். தமிழ்ப் பதிப்பகம் சென்னை என்ற முகவரியிற் பெறலாம். இப்பதிப்பிற் சந்திராலோகம் என்ற நூலும் அடங்கும். குவலயானந்தம் என்ற பெயர் இரண்டு இலக்கண நூல்களுக்கு வழங்குகிறது. அவற்றிற்கு முதலாம், இரண்டாம் என்று எண்கள் இடப்பட்டுண்டு.

குவலயானந்தம் - மாணிக்கவாசகர் இயற்றிய நூல். இந்நூலை எடுத்தியம்பும் இலக்கிய உரைகளுண்டு என்று குறிப்பிட்டோம். அவற்றைக் கால வரிசைப்படுத்திக் காட்டுதல் சாலச்சிறந்தது.

i. சரவணப்பெருமாளையர் - நைடதம் உரையில்.....1842.

ii. வேதகிரிமுதலியார் - நைடதம் உரையில்.....1851.

iii. சைமன்காசிச்செட்டி - Tamil Plutarch.....1859

iv சதாசிவம்பிள்ளை - பாவலர் சரித்திரதீபம்.....1886.

v. உ. வே. சாமிநாதையர் - சங்கத் தமிழும், பிற்காலத்தமிழும்.....1934.

vi பொ. பூலோகசிங்கம் - தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெருமுயற்சிகள்.....1979.

vii ச. வே. சுப்பிரமணியன்- குவலயானந்தம் சந்திரலோகம்.....1979.

இவ்வண்ணம் எழுவரும் கூறியிருக்கிறார்கள். இவர்கள் எவ்வாறு கூறியிருக்கிறார்கள் என்பனவற்றைக் கவனிப்போமாக.

சரவணப் பெருமாளையர் நைடதத்திற்கு உரை எழுதியுள்ளார். இஃது 1842 இல் அச்சேற்றப்பட்டது. கைக்கிளைப்படலம் வரையும் உரை எழுதினர். மிகுதிக்கு அவர் மகன் கந்தசாமி ஐயர் உரை வகுத்தார். இருவரும் தங்கள் உரையில் குவலயானந்த மேற்கோள் காட்டினர். மற்றைய இலக்கண நூல்களிலிருந்தும் சான்றுகள் உரைத்தனர்.

(1)குவலயானந்தம் 1, 2
சந்திராலோகம்
} டாக்டர். ச. வே. சுப்பிரமணியம்
தமிழ்ப் பதிப்பகம்
சென்னை 600 - 020. 1979

முதலாஞ் செய்யுளில், அஃதாவது விநாயகர் வணக்கச் செய்யுளுக்கு உரையெழுதும் போது: -

''மாணிக்கவாசகர் திருவாய் மலர்ந்தருளிய குவலயானந்த சூத்திரம்'' : -

''வழிபடு தெய்வ வணக்கஞ் செய்து
மங்கல மொழிமுதல் வழுவாது ரைக்கில்
எடுத்துக் கொண்ட இலக்கண விலக்கிய
மிடுக்கணின்றி இனிது''

என்று விருத்தியுரையில் எடுத்தோதுகின்றார். இவ்வாறு குவலயானந்தம் என்ற இலக்கண நூல் இருபத்தைந்து இடங்களுக்குமேல் விளம்பப்படுகின்றது.

களத்தூர் வேதகிரி முதலியார் நைடதத்திற்கு உரை எழுதினர். 1851 ஆம் ஆண்டுப் பதிப்பில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது.

''வேதகிரி முதலியாரால் பதவுரையும், கருத்துரையும் செய்து, பல இலக்கண மேற்கோளுடன் பதிப்பித்த பிரதிக் கிணங்க'' - என்று இயம்பப்பட்டுண்டு. ஆகவே 1851 க்கு முன்னர் வேதகிரி முதலியாராற் பதிப்பிக்கப்பட்டது புலனாகும்.

சுண்ணாகம் அ. குமாரசுவாமிப் புலவர் எழுதிய ''தமிழ்ப் புலவர் சரித்திரம்'' என்ற நூலிலே வேதகிரி முதலியார் சரித்திரத்தில் குவலயானந்தம் குறித்துச் சில சூத்திரங்கள் தருகிறார். மூன்று சூத்திரங்கள் உதாரணமாகக் காட்டியிருக்கிறார். அவை அச்சேறிய குவலயானந்தத்தில் நிலைமாறிக் கிடக்கின்றன.

இவை இவ்வாறிருக்க 1859 இல் சைமன் காசிச் செட்டியால் வெளியிடப்பட்ட ''The Tamil Plutarch'' - ''தமிழ்ப்புலவர்கள் என்ற ஆங்கில நூலில்'' திருவாசகம், திருக்கோவை என்னும் நூல்களைத் தந்த மாணிக்கவாசகரே குவலயானந்தம் என்ற நூலையாத்தார் என்று எழுதியுள்ளார். இவ்வாறு எழுதியமைக்கு சரவணப் பெருமாளையர், வேதகிரி முதலியார் ஆகிய இருவர் எழுதிய நைடத உரைகளை காசிச் செட்டியவர்கள் பார்த்திருந்தமை காரணமாகலாம்.

பாவலர் சரித்திரதீபகம் 1886 இல் அச்சேறியது. இதனை எழுதியவர் சதாசிவம் பிள்ளை. காசிச் செட்டி எழுதிய தமிழ்ப் புலவர் நூலை மொழி பெயர்த்தும், சேர்த்தும், திருத்தியும், விருத்தி செய்தும் எழுதப்பட்டது என்பது தெளிவாகின்றது. சதாசிவம் பிள்ளை எழுதியதாவது: -

''சைவர் சொல்லும் சமய குரவர் நால்வருள் ஒருவராகிய இவர் பதிசாத்திரங்களில் அன்றி இலக்கண நூற்கடல் கடந்த வல்ல பண்டிதர் ஆகலிற் குவலயானந்தம் என்னும் இலக்கண நூலை இயற்றினர்.'' -

சதாசிவப் பிள்ளையும் ஏலவே வந்த நைடத உரைகளைப் பார்த்திருத்தல் கூடும். காசிச் செட்டியும், சதாசிவம்பிள்ளையும் எழுத்திற் காணுத விடயங்களை எழுதவே மாட்டார்கள்.

இனி சங்கத்தமிழும் பிற்காலத்தமிழும் எழுதியவர் உ. வே. சாமிநாதையர். முதற் பதிப்பு 1929. இரண்டாம் பதிப்பு 1934. இரண்டாம் பதிப்பில் 27 ஆம் பக்கத்தில் குவலயானந்தம் பற்றி எழுதியிருக்கிறார்.

'குவலயானந்தம் என்ற அணியிலக்கணம் மாணிக்கவாசகர் என்னும் பெயருள்ள ஒரு புலவராற் செய்யப்பட்டது; சூத்திரங்களால் அமைந்தது. இந்நூலுட் கூறப்பெற்ற அணிகள் நூறு. இதற்கு முதனூல் வடமொழி நூலே'

இதிலே குவலயானந்தம் - மாணிக்கவாசகர் என்னும் புலவர் செய்தனர் என்றும் அணியிலக்கணம் என்றும் கூறியிருக்கிறார்.

குவலயானந்தம் என்றும் நூல் உறுப்பியல், அணியியல் சித்திரவியல் என மூன்று பிரிவுகளையுடையது.

i. உறுப்பியல் ..... 150 சூத்திரங்கள்.
ii. அணியியல் ..... 120 ,,
iii. சித்திரவியல்..... 29 ,,

மொத்தம் 309 சூத்திரங்கள்.

பூலோகசிங்கம் எழுதின எழுத்தினை நோக்குவோம். தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெருமுயற்சிகள் என்பது அவர் நூலாகும். அதில் எழுதிய கட்டுரைகள் ஆறு ''சைமன் காசிச்செட்டி அவர்கள் தந்த தமிழ்ப் புலவர் சரிதம்'' - என்பதுதான் முதற்கட்டுரை. குவலயானந்தம் பற்றி எழுந்த வசனங்கள் வருமாறு:-

'திருவாசகம், திருச்சிற்றம்பலக்கோவையார் என்பவற்றை இயற்றிய (1) மாணிக்கவாசக சுவாமிகள் குவலயானந்தம் என்னும் இலக்கண நூலையும் இயற்றியதாகக் காசிச்செட்டியவர்கள் கருதுவர். சந்திராலோகம் என்னும் வடமொழி அணியிலக்கண நூலுக்கு எழுந்த வடமொழியுரை நூலே குவலயானந்தம். இதனை அப்பைய தீட்சிதர் எழுதினர். அப்பைய தீட்சிதரின் உரையை மாணிக்கவாசகர் மொழி பெயர்த்தார். இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். பெயரொற்றுமையை மட்டுமே ஆதாரமாகக் கொண்ட படியாற் காசிச் செட்டி பிழைவிட நேர்ந்தது' - பக் 29.

இவரது நூலின் 23ஆம் பக்கத்தில் சரவணப் பெருமாளையர், வேதகிரிமுதலியார் வெளியிட்ட நூல்களை சைமன் காசிச்செட்டி அறிந்திருந்தார் என்றும் எழுதியிருக்கிறார்.

பூலோகசிங்கம் உரைநடை நூலோடு எடுத்துக் காட்ட இருப்பது சோம. இளவரசு எழுதிய இலக்கண வரலாறு. அந்நூலில் குவலயானந்தம் பற்றி எழுதியிருப்பதாவது:-

> 'சந்திராலோகம் என்னும் வடமொழி அணியிலக்கண நூலுக்கு எழுந்த வடமொழியுரை குவலயானந்தம் ஆகும். இவ்வுரை இயற்றிய ஆசிரியர் அப்பைய தீட்சிதர் ஆவார். இவர் காலம் கி. பி. 1520 - 1593. இந்நூலினை மாணிக்கவாசகர் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.'

இலக்கண வரலாறு என்ற நூலின்படி மாணிக்கவாசகர் மொழி பெயர்த்தது வடமொழி வசனநடையை. மொழி பெயர்த்து தமிழ் வசனநடையில் மாணிக்கவாசகர் எழுதினர். இது அணியிலக்கணம். தமிழிலுள்ள குவலயானந்தம் சூத்திரங்களாலானது. அதனில் எழுத்திலக்கணம், சொல்லிலக்கண முண்டு.

1979 இல் குவலயானந்தம் (1, 2) சந்திராலோகம் எனும் மூன்று இலக்கண நூல்களும் வெளிவந்தன. முதன்முறையாகக் குவலயானந்தம் வெளிவந்தது. இதன் ஆசிரியர் மாணிக்கவாசகர் (திருவாதவூரர்) என்பது நூலின் பாயிரத்தாலும், சிறப்புப் பாயிரத்தாலும் அறியப்படுகிறது. வரகுண பாண்டியனும் சொல்லப்படுகிறான். திருக்கோவையாரில் செய் - 306, 327 - சொல்லப்படுகிறான்.

வடமொழி அணி நூலாகிய மீமாங்கிசையின் பொருளை அறிந்து ''சிவவியாகரணம்' எனும் நூலை அகத்தியர் இயற்றினர். அதனை மாணிக்கவாசக சுவாமிகள் குவலயானந்தம் என்ற பெயருடன் இலக்கணஞ் செய்தனர். அதற்கும் உரை செய்தனர். இதனைச் சிறப்புப் பாயிரங் கூறுகின்றது. குவலயானந்தம் - அணியிலுள்ள 87 வகையான அணிகள் தரப்பட்டுள்ளன. மற்றைய இலக்கண நூல்களுடன் ஒப்பிட்டு நோக்குமிடத்து

i. குவலயானந்தம்..... அணிகள் - 87
ii. சந்திராலோகம்..... அணிகள் - 100
iii. குவலயானந்தம். 2..... அணிகள் - 120
iv. மாறனலங்காரம்..... அணிகள் - 64
v. தொன்னூல் விளக்கம்..... அணிகள் - 30
vi. முத்து வீரியம்..... அணிகள் - 58
vii. சுவாமி நாதம்..... அணிகள் - 31
vii. வீரசோழியம்
ix. தண்டியலங்காரம்
x. இலக்கண விளக்கம் } ,, 35

சந்திராலோகம் - சந்திர + ஆலோகம், ஆலோகம் = ஒளி என்னும் அணியிலக்கணத்தை இயற்றியவர் காளிதாசர். அதனை வடமொழியில் வசனவடிவத்தில் மொழி பெயர்த்தவர் அப்பைய தீட்சிதர். அதற்குப் பெயர் குவலயானந்தம் (குவலயானந்தம் அன்று) இதனில் 120 அணிகளுள் இதன் விபரம் 1895 இல் பதிப்பித்த குவலயானந்தம் நூலிற் கண்டு தெளிக. விசாகப் பெருமாளையர் வசனத்தில் இயற்றிய அணியிலக்கணம் சந்திராலோகம் (குவலயானந்தம்) பின்பற்றியதே.

குவலயானந்தம் வேறு. சந்திராலோகம் வேறு. சந்திராலோகத்தின் மொழி பெயர்ப்பாகியகுவலயானந்தம் வேறு. குவலயானந்தம் இயற்றியவர் திருவாதவூராகிய மாணிக்கவாசகர். இலக்கியங்களாகிய திருவாசகம், திருக்கோவையார் இயற்றியவர்; ஏன் குவலயானந்தம் என்ற இலக்கண நூலைச் செய்திருக்க மாட்டார் என்பது கேள்வி. இத்தக் கேள்விக்கு விடைகாணுதல் அறிஞர் கடன்.

---

(1)சோம. இளவரசு. இலக்கண வரலாறு (முதற் பதிப்பு 1963) பக். 225 என்று குறிப்பு எழுதியிருந்தார்.

கிறீஸ்த்தாப்தத்திற்கு முந்திய கதிர்காமம்

கலாநிதி சி. க. சிற்றம்பலம் வரலாற்றுத்துறை, யாழ். பல்கலைக்கழகம்

கதிர்காமம் இன்று இந்துக்கள், பௌத்தர்கள், இஸ்லாமியர் ஆகியோரின் புனித ஸ்தலமாக விளங்கினாலும் இப்பகுதியில் கிறீஸ்தாப்தத்திற்கு முன் பிருந்தே இந்துக்களின் வழிபாடு தழைத்திருந்ததற்குப் பல சான்றுகள் உள. இச்சான்றுகளில் இப்பகுதியில் ஆட்சி செய்த கதிர்காமச் சத்திரியர்கள் (கதிர்காம அரசர்கள்) பற்றி மகாவம்சத்தில் காணப்படும் குறிப்பு பிரதானமானது. (M. V xix. 54) இவர்கள் பற்றிய செய்தி இலங்கையின் வரலாற்றுக் காலத்து முதல் மன்னனாகிய தேவநம்பியதீஸன் ஆட்சியின் சமகாலத்திலேயே காணப்படுகிறது. இத்தகைய வரலாற்றுக்கால நாகரீக வளர்ச்சிக்கு வித்திட்ட மையமாக வடக்கே தேவநம்பிய தீஸன் ஆட்சி செய்த அநுராதபுரம் இருந்தது போன்று தென்கிழக்கே மாகம (திஸ்ஸமகாராம) இருந்தது. திஸ்ஸமகாராம விலிருந்து 12 மைலுக்கு அப்பால் உள்ளதே கதிர்காமமாகும். அநுராதபுர, மாகம கலாசார வளர்ச்சிக்கு வித்திட்ட கலாசாரம் பெருங்கற்காலக் கலாசாரம் என்பதும் இத்தகைய கலாசாரமே தென்னிந்தியத் திராவிட கலாசாரத்திற்கு வித்திட்டதென்பதை அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகள் எடுத்தியம்புகின்றன. (Sitrampalam, S. K. 1980) இதனால் பெருங்கற்காலக் கலாசாரப் பின்னணியில் வளர்ச்சி பெற்ற தமிழக நாகரீகத்தைப் போன்றே ஈழத்து வரலாற்றுக் கால நாகரீகமும் காணப்பட்டதென்றால் மிகையாகாது. எனினும் தமிழகத்தைப் போன்றல்லாது ஈழம தனித்தீவாக அமைந்திருந்ததும், பௌத்தத்தின் வருகையால் இப்பகுதியில் கலாசார ரீதியில் பெருமாற்றம் ஏற்பட்டது எனலாம் இருந்தும் பௌத்தத்திற்கு முந்திய நம்பிக்கைகள் பல பௌத்தத்தின் வருகையால், தமிழகத்தில் வட இந்தியச் செல்வாக்கால் உருமாறியது போன்று உருமாறுமல் பழைய நிலையில் அப்படியே இலங்கையில் பேணப்படவும் வாய்பிருந்தது. இத்தகைய நம்பிக்கைகளில் ஒன்றாகிய முருக வழிபாடு பண்டு தொட்டுத் திகழ்த்திருந்த இடமாகவே கதிர்காமம் விளங்கியதற்குப் பல்வகையான சான்றுகள் காணப்படுகின்றன.

கதிர்காமம் பற்றி முதல் முதலாகக் கிடைக்கும் செய்தி பௌத்த மதத்தின் வருகையோடே காணப்படுவது பௌத்தம் பரவ முன்னர் இங்குள்ள அரசர்கள் இந்துக்களாகவே விளங்கினர் என்பதை உறுதி செய்வதாக அமைகின்றது. இச்செய்தியில் பௌத்தர்களின் வழிபாட்டுச் சின்னமாகிய அரசமரக் கிளையை வைபவ ரீதியாக நாட்டப்படும் வைபவம் நடைபெற்ற போது அதிற் கலந்து கொண்ட பிரமுகர்களாக சத்திரிய மனன்னர்களான கதிர்காமச் சத்திரியர், சண்டாளகமச் சத்திரியர்கள் குறிக்கப்படுகின்றனர். இம்மன்னர்களுக்குரிய சத்திரியர்கள் என்ற ஆரிய வர்ணப் பெயர் கூட மகாவம்சம் எழுதப்பட்ட காலத்திற் புகுத்தப்பட்ட ஒரு பெயராகவும் இருந்திருக்கலாம். இச்சத்திரியர்களோடு பிராமணனை 'திவக' குறிக்கப்படுவதும் பொதுவாகப் பிராமணர் இந்துக்களாக இக்காலத்தில் விளங்கியதால் இச்சத்திரிய மன்னர்களும் பிராமணரைப் போல் இந்துக்களாகவே விளங்கினர் என்பதையும் உணர்த்துகின்றது எனலாம். இவற்றோடு இச்சத்திரியர்கள் வாழ்ந்த கதிர்காமம், சண்டாளகம, பிராமணத்திவக ஆகியோர் வாழ்ந்த இடங்களில் பௌத்தர்களின் வழிபாட்டுச் சின்னமாகிய அரச மரக்கிளை நடப்பட்டதாக மகாவம்சம் குறிக்கும் செய்தியும் இன்னோர் வரலாற்று உண்மையை எடுத்துக்

காட்டுகின்றது. பொதுவாகவே பிரசார மதங்களின் வரிசையில் சேர்ந்துள்ள பௌத்தமதம், தமது மதம் பரப்பும் நடவடிக்கைகளில் ஒன்றுகப் பிற மதங்கள் செழித்த இடங்களில் தமது மத வழிபாட்டிடங்களை அமைத்தல் அல்லது அவை இருக்கும் இடத்திற்கருகில் தமது வழிபாட்டிடங்களை அமைத்தல் மரபாகக் காணப்பட்டது. மகாவம்சத்தில் கூட ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட பௌத்த வழிபாட்டிடங்கள் பல. பழைய யக்ஷ வழிபாட்டிடங்களில் அமைக்கப்பட்டதற்கான சான்றுகள் இருப்பதால் அரசமரக் கீழையும் செல்வாக்குள்ள இந்துக்களின் வழிபாட்டிடத்திற்கு அருகில் நடப்பட்டமை பௌத்தம் இங்கு பரவிய யமையை எடுத்துக் காட்டுகின்றது எனலாம்.

பௌத்தத்தின் வழிபாட்டுச் சின்னமாகிய அரசமரகீழை நாட்டப்பட்டதைக் கூறும் மகாவம்சம் கதிர்காகச் சத்திரியர் இதற்களித்த ஆதரவு பற்றியோ அன்றி இவர்கள் பற்றிய மேலதிக விவரத்தையோ வேறெவ்விடத்திலும் குறிக்கவில்லை. இவர்களின் ஆதரவு பௌத்தத்திற்கு ஆரம்பத்திலிருந்து கிடைத்திருந்தால் பௌத்த மத வரலாற்றை எழுதுவதையே தமது நோக்கமாகக் கொண்டிருந்த மகாவம்ச ஆசிரியர் அதுபற்றி நிச்சயமாகக் குறித்திருப்பார். இது பற்றிய செய்திகள் மகாவம்சத்தில் காணப்படாமை இவர்கள் இந்துக்களாக விளங்கியமையை எடுத்துக் காட்டுகின்றது எனலாம். மகாவம்ச ஆசிரியர் பொதுவாகவே பௌத்த சமய நம்பிக்கையல்லாத இந்துசமய நம்பிக்கைகள் 'தவறுன நம்பிக்கைகள்" என்ற கோட்பாட்டில் இவை பற்றித் தமது நூலில் குறிப்பிடுவதையும், இவை பற்றிய விவரத்தைத் தவிர்த்திருந்ததையும் இந்நூலினை நன்கு ஆராயும் போது தெளியலாம்.

பௌத்தத்தின் பரவல் அரச மரக்கீழை நாட்டு வைபவத்தோடு மட்டும் நிற்கவில்லை. கதிர்காமத்திற்குக் கிட்ட 1/2 மைல் தொலைவில் பௌத்தர்களின் வழிபாட்டுச் சின்னம் 'கிரி விபாரை' என்ற பெயரில் கட்டப்பட்டது. தேவநம்பியதீஸனின் தம்பியாகிய மகாநாக மாகமத்தில் தனது அரசிருக்கையை அமைத்திருந்தபோதே இத்தகைய வழிபாட்டிடம் கட்டப்பட்டதென்ற ஐதீகம் நிலவினாலும் கூட இக் கட்டிடத்தின் கற்களிற் பொறிக்கப்பட்ட பிராமி எழுத்துக்களை ஆராய்ந்த பரணவித்தாரை இதன் காலம் கி.மு. 1ஆம் நூற்றாண்டாக இருக்கலாம்என்று கூறியுள்ளார். (Paranavitana, S. 1928-33)

பௌத்த மதத்தின் பரம்பலின் அடுத்த கட்டம் மகாநாமவின் பேரனாகிய சோத்தபயாவின் காலத்ததாகும். கி.மு 2ஆம் நூற்றாண்டில் முற்பகுதியில் மாகமவில் ஆட்சி செய்த இவன் கதிர்காமச் சத்திரியர்களை அழித்து அப்பாவத்திற்குப் பிராயச்சித்தமாக இப்பிரதேசத்தில் 500 விகாரைகளைக் கட்டியதாக ஓர் ஐதீகத்தை இன்னோர் நூலாகிய தாதுவம்சம் குறிப்பிடுகிறது. (D. V. 33 - 34) இதிலிருந்து துட்டகைமுனுவின் பேரனாகிய இவன் காலத்தில் ரோகணைப் பிரதேசத்தில் பௌத்தம் மேலோங்கியது தெளிவாகின்றது. பௌத்தத்தின் மேலோங்கலை எடுத்தியம்புவதாகவே கௌதம புத்தர் தரிசித்த இடங்களாக ஈழத்தில் பதினாறு இடங்கள் குறிக்கப்படுகின்றன. இப் பதினாறு இடங்களில் அட்டவணையைப் பார்க்கும் போது பௌத்தம் இவ்விடங்களிற் செழிப்புற்ற காலத்தில் அதற்கு ஒரு பழைமையான பாரம்பரியத்தை எடுத்துக் காட்டவே இத்தகைய ஐதீகம் புகுத்தப்பட்டது போல் தெரிகிறது. இவ்வரிசையில் கதிர்காமம், திஸ்ஸமகாராம, கிழக்கே தீகவாபி ஆகிய பகுதிகள் குறிக்கப்படுகின்றன. அண்மைக்காலத்தில் கிடைக்கப்பெற்ற கல்வெட்டுச் சான்றுகள் கதிர்காம அரசர்கள் ஆட்சி தீகவாபி வரை சென்றிருந்ததை எடுத்தியம்புவதும் ஈண்டு நினைவு கூரற்பாலது. (Gunawardana, R. A. L. H : 1982)

கதிர்காமத்தோடு தொடர்புடைய மன்னர்களை அழித்ததாகத் தாதுவம்சம் கூறினாலும் இவர்களின் மூன்றும், நான்காம் தலைமுறையினர் பௌத்த மதத்திற்கு அளித்த தானம் பற்றிக் கிடைக்கும் செய்தியை உற்று நோக்கும்போது தொடர்ந்து இவர்கள் இப்பகுதியில் வாழ்ந்ததும் இவர்களில் பலர் பௌத்தர்களாக மாறியதும் தெளிவாகிறது. எனினும் இவர்களிற் சிலரது ஆதரவு தொடர்ந்தும் கதிர்காமத்திலுள்ள இந்து

ஆலயத்துக்குக் கிடைத்திருக்கலாம். காரணம் 'கந்த உபத' என்ற சிங்கள நூலில் துட்ட கைமுனு எல்லாளனுடன் சண்டைக்குச் செல்ல முன்னர் கதிர்காமக் கடவுளி வழி பட்டு ஆசிர்வாதம் பெற்றுச் சண்டைக்குச் சென்றதாகவும் எல்லாளனுடன் அடைந்த பெருவெற்றிக்குப் பின்னர் இங்கே கோயில மைத்தான் எனவும் குறிப்புண்டு. இத்தகைய குறிப்பு ராஜவலியா என்ற சிங்கள நூலிலும் உண்டு பௌத்த குருமார் பொதுவாகவே தாமெழுதிய பாளி நூல்களாகிய மகாவம் சம், சூளவம்சம் ஆகியவற்றுள் பிறமத அநுஷ்டானங்களை மறைப்பது வழக்கம். ஆனல் சிங்களமொழியில் அமைந்த நூல் களில் இவை குறிக்கப்படும் மரபை நோக்கும் போது கிறீஸ்தாப்தத்திற்கு முன்னர் இங்கே முருகன் ஆலயம் ஒன்றிருந்ததையே இத் தகைய ஐதீகம் எடுத்துக் காட்டுகின்றது என்று எண்ணுவதிற் தவறில்லை. துரதிஷ்ட் வசமாக இந்துக்கள் இக்காலத்தில் கருங்கற் களை உபயோகித்துக் கட்டிடங்களை ஆக்குவ தற்குப் பதிலாக அழியும் பொருட்களால் இவற்றை ஆக்கியதால் இவ்வாலயம் பற்றி விரிவான தகவல் நமக்குக் கிடைக்கவில்லை எனலாம்.

மேற்கூறிய யூகம் சரியானதே என்பதனை உறுதி செய்வதற்கு பல சான்றுகள் உள. ஈழத்திலும் முருக வணக்கம் தமிழகத்தைப் போன்று தொன்மையானதே. ஆதிச்சநல் லூரில் முருகனது வேல், காவடிச் சின்னங்கள் காணப்படுவது போன்று இத்தாழிக்காட்டிற்கு நேரெதிரே உள்ள இலங்கையிலுள்ள தாழிக் காடாகிய பொம்பரிப்பிலும் வேல் கிடைத் துள்ளது. (Sitampalam), S. K. 1980) இதே போன்று அண்மைக் காலத்திற் கதிர்காமத் திற்குக் கிட்ட தாழிக் காடொன்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதுவும் பல புதிய செய்திகளைத் தரலாம். இவ்வாறே தான் கிறீஸ்தாப்தத்திற்கு முந்திய ஈழத்துப் பிரா மிக் கல்வெட்டுக்களில் முருக வணக்கத்தினைக் குறிக்கும் 'குமார', 'விசாக', வேல் போன்ற பெயர்களும் காணப்படுகின்றன. (சிற்றம் பலம் சி, க. 1976) கதிர்காமச் சத்திரியர் களின் பரம்பரையில் ஒருவர் 'குமார' என்ற பெயரைத் தாங்கி நின்றதும் ஈண்டு குறிப் பிடத்தக்கது. (Paranavitana, S. 1970)

மேற்கூறிய செய்திகளோடு கதிர்காமத் தில் காணப்படும் வழிபாட்டு முறைகள் கூடக் கிறீஸ்தாப்தத்திற்கு முன்னரே இங்கு புகுந்த வழி பாட்டு முறை என்பதனை ஐதீகங்களும் பிற ஆதாரங்களும் எடுத்துக் காட்டுகின்றன. (வேலுப்பிள்ளை, ஆ. 1977). காரணம் இக் காலத்திற்குப் பின் பௌத்தம் இங்கு நன்கு வேரூன்றி விட்டதால் இவை இங்கே புகுவ தற்கான வாய்ப்பிருக்கவில்லை. அத்துடன் கதிர்காமத்தில் காணப்படும் வழிபாட்டுமுறை சங்ககாலத்தில் கிறீஸ்தாப்தத்திற்கு முன்னர் தமிழகத்தில் நிலவிய வழிபாட்டு முறையினை ஒத்துக் காணப்படுவதும் இதன் பழமைக்குச் சிறந்த சான்றாகும். தமிழகத்திலும் சங்க காலத்திலே தான் முருக வணக்கம் மேன்மை பெற்றிருந்தது. முருகன் பற்றிய ஐதீகங்களில் தமிழகத்தில் முருகன் சூரனைக் கொல்லத் திருச்செந்தூரில் பாசறை அமைத்துப்பின்னர் திருப்பரங்குன்றத்தில் மணவளனுகக் காட்சி கொடுத்த செய்தி இருப்பது போல, ஈழத்து ஐதீகங்களும் சூரனைக் கொல்ல முருகன் கதிர்காமத்தில் பாசறை அமைத்துப் பின்னர் வள்ளியை மணந்த இடமாகவும் இதனைக் குறிப்பதிலிருந்து இரு பிராந்தியங்களிலும் முருகனது போர், திருமணம் ஆகியன பற்றிய ஐதீகங்களைத் தத்தம் பிரதேசத்துடன் இணைத்த மரபு பழைய மரபாகவே காணப் படுவது புலனுகின்றது. தமிழ் நாட்டிற் தோன்றிய முருகனின் போர், திருமணம் பற்றிய ஐதீகம் பின்னர் கிறீஸ்தாப்தத்திற்கு முன்னரே ஈழத்திற்கு எடுத்து வரப்பட்டு ஈழத்துக்குரிய மரபாகவும் பேணப்பட்ட ஒரு நிலையைக்கூட இவ்வைதீக மரபு எடுத்துக் காட்டுகின்றதெனலாம். சங்க இலக்கியங் களில் முருகன் பற்றிய வர்ணனைகளில் குறிஞ்சிக் குமரனுக அவனை வர்ணிக்கும் தன்மையை நோக்கும்போது இத்தகைய குறிஞ்சி நிலப்பிரதேசமாய கதிர்காமப் பிரதேசத்தில் இவ்வைதீகம் வளருவதற்கு ஒரு நல்ல வாய்ப்பும் இருந்தது எனலாம். படை வீடுகளின் வாடை கதிர்காமத்திற்கும் உண்டு என்றுல் மிகையாகாது. இத்தகைய மரபோடு கதிர்காமச் சத்திரியர்கள் பற்றிக் கூறும் பிராமிக் கல்வெட்டுக்கள் தமிழகத்தி லிருந்தே இவ் ஐதீகங்கள் பரவி இருக்கலாம் என்பதை உணர்த்துகின்றன எனலாம்.

இப் பிராமிக் கல்வெட்டுக்களில் இச்சத்தி ரியர் சந்ததியில் ஒருவன் 'மஜ்ஜி மகாராஜ்' எனக் குறிக்கப்படுகின்றான் இக் கல்வெட்டு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கென்னல் லில் உளது. (Paranavitana, S. 1970). இதனைப் பரணவித்தானை 'மற்சய மகாராஜன்' என வாசித்து இம்'மற்சய' வம்சத்தினர் வட இந்தியாவிலிருந்து சிங்கள மக்களோடு கூடி வந்த மற்சய வம்சத்தினர் எனக் கொள் கிறார். உண்மையிலே இதே கல்வெட்டில் கதிர்காமச் சத்திரியர்களில் கல்வெட்டுக்கள் எல்லாவற்றிலும் காணப்படுவது மீன் வடிவம் காணப்படுவது மீன் சின்னத்தையுடைய மகா ராஜன், 'மீனவர்' எனப்பட்ட பாண்டியா ஆண்ட பிரதேசத்தினரே என்பதை உணர்த்து கின்றது கதிர்காமச் சத்திரியர்கள் கல் வெட்டுக்களில் 10 சகோதரர்கள் கூட்டாட்சி பற்றி வரும் குறிப்புக்கூட பாண்டி நாட்டில் 5 சகோதரர்கள் கூடி ஆட்சி செய்த 'பஞ்ச வர்' 'ஐவர்' ஆட்சி முறையையே எடுத்துக் காட்டுகின்றது எனலாம். (குணசிங்கம். செ. 1970) இக் கல்வெட்டுக்கள் குறிக்கும் 'அய' என்ற பதமும் பாண்டி நாட்டிலே குறுநில மன்னர்களாக விளங்கிய ஆயரைக் குறித்து நிற்கின்றதெனலாம். இதனால் இக்காலத்தில் பாண்டிய பிரதேசத்தில் மேலோங்கியிருந்த முருக வழிபாடு ஈழத்துமுருகவழிபாட்டு முறை களோடு சங்கமித்தது எனக் கொண்டாலும் பிழையாகாது.

கதிர்காம வழிபாட்டுமுறை மிகப்பழைய ஒரு பாரம்பரியத்தைக் கொண்டிருந்ததைச் சங்க இலக்கியங்களில் வரும் கு றி ப் பு க ளி லிருந்தும் அறிபலாம். சங்க இலக்கியங்களிற் தலைவிக்குக் காதல் நோயால் மெய்ப்பாடு தோன்றும் போது தாயும் செவிலியும் அந் நோய் பற்றி அறிய முருக வணக்கத்தின் பூசாரியாகிய வேலனை அழைப்பதும் வேலன் வேல்தாங்கி, பலியிட்டு, வெறியாட்டமாடி அந்நோயைத் தீர்ப்பதும் பற்றிய குறிப்பு வருகிறது. இத்தகைய வழிபாட்டில் வேலன், கடம்பமரங்களின் கீழோ அன்றி ஆற்றோரங் களிலோ களம் அமைத்து மூங்கில் கீற்றுக் களால் அதனைப் பல பிரிவுகளாகப் பிரித்தல் கூறப்படுகின்றது. இப்பிரிவுகள் 'பல்பிரம்பு' என்று சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படு கின்றன. ஏறத்தாள 64 பிரிவுகள் களத்தில் இருந்தன. இக்களத்தில் தான் ஆட்டுக்கடா வின் பலியிற் பெறற குருதி ஊற்றப்பட்டுப் பிற நிவேதனப் பொருட்களும் படைக்கப் பட்டன இவ்வெறியாட்டத்தில் வேலன் மீது ஏறி அவனை இயக்கும் தெய்வமே முருகன் என பதைச் சங்க இலக்கியங்கள் பகருகின்றன. குறுந்தொகையில் 362 ஆம் பாடலிலுள்ள 'முருகையர் வந்த முதுவாய் வேல' என்ற குறிப்பு இதனையே உணர்த்துகின்றது. இதன் பொருள் முருகென்ற தெய்வம் உன் உடலில் ஏறப்பெற்று வெறியாடி வந்த வேலனே என்பது பொருளாகும். இது மட்டுமன்றி முருகன் உறையும் இடங்களாக 'வேல் ஏந்தி ஆடும் வேலன் இழைத்த வெறியாடும் களத் திலும் அவன் உறைதற்குரியவன்' என்ற குறிப்பும் கூட 'களம்' முருகன் உறையும் இடம் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இதுபற்றி ஆராய்ந்த அறிஞர் பிற்காலத்தில் யந்திரம் மூலம் தெய்வத்தை யாசிக்கும் மர பின் மூலத்தை வேலன் களம் வரையும் பழக்கத்திலிருந்தும் பழைய வழிபாட்டை யொட்டிய வேலன் பூசாரிகளின் வழிபாடு களிலிருந்தும் கண்டறியலாம் என்கின்றனர். (சாமி, பி. ல. 1971) கதிர்காமத்திலும் யந் திர பூசையே முக்கியம் பெறுவதை நோக் கும் போதும், இதனை இயற்றும் 'கப்புறாள' என அழைக்கப்படும் பிராமணரல்லாத பூசாரி கள் 'வேலன்' வழி வந்த பூசாரியினரே எனக் கொள்ளலாம். வேலன் பூசாரிகள் களத்திற்கு மந்திரமுரைத்து முருகனைத் தம்முள் வர வழைத்து வழிபாடு செய்தது போன்று கப் புறாளையினரும் செய்கின்றனர் எனலாம். இத் தகைய பழைய வழிபாட்டு முறையைத்தான் தொல்காப்பியரும் 'கந்தழி வழிபாடு' என அழைத்தார் எனலாம். கந்தழி என்பதன் முதற்பொருள் ஒரு மரத்தறி என அமைந் தாலும் முருகனை ஒரு குறிப்பிட்ட பொருளில் தோன்றி அருள் செய்யுமாறு வேண்டும் பண் டைய வழிபாட்டு முறையையே கந்துடை நிலை எனக் கொள்ளப்படுகின்றது. ஆயுதங் கள் தனியான வழிபாட்டுச் சின்னங்களா கவே பண்டைய வழிபாட்டில் இயங்கின. வேல், சூலம் ஆகியன தெய்வமுறை வழி பாட்டுச் சின்னங்களே. காலக்கிரமத்தில் இவற்றின் தனியான முக்கியத்துவம் குறை

தெய்வங்களின் ஆயுதங்களாக இவை மாறின.

வள்ளிதான் முருகனின் முதல் மனைவி. தேவசேனை பின் வந்த மனைவி. கதிர்காமத்திற் கூட வட நாட்டுக் கலியாணகிரி பற்றிக் கூறும் மரபு - தேவசேனையிடம் கந்தனை அழைத்துச் செல்ல இவர் வந்ததாகக் கூறப்படும் மரபு - ஒருவகையில் தெய்வசேனை வழிபாடு கி. பி. 17 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேதான் இங்கு புகுந்தது என்பதை எடுத்துக் காட்டுகிறது எனலாம். (சபாநாதன், குல. 1947) இக்காலத்தில் வாழ்ந்த முஸ்லீம்களின் பெரியாரான கர்மநபிக்கு அமைக்கப்பட்ட மசூதியுடன் முஸ்லீம்களுக்கும் இவ்விடம் புனித இடமாகியது. (Navaratnam. Ratna. 1973)

இதனால் கதிர்காமத்தில் பௌத்த விகாரையும் அரச மரமும் முக்கியம் பெற்றாலும் கூட ஆதியில் முருக வழிபாடு தழைத்திருந்ததை போர்க் கடவுளாகிய முருகன் பற்றிய ஐதீகங்கள், துட்ட காமினியை அவன் வணங்கிய தன்மை, வழிபாட்டு முறைகள் ஆகியன எடுத்துக் காட்டுகின்றன எனலாம். துரதிஷ்டவசமாக ஈழத்து இந்து மதம் பற்றிய தகவல்களைத் தரும் இந்துமத நூல்கள் காணப்படாததால் இவை பற்றிய தொடர்ச்சியான வரலாற்றை நாம் அறிய முடியவில்லை. இக்கால இந்துமதம் பற்றிய தகவல்களைக்கூட பௌத்தமத வரலாறு பற்றிக் கூறும் நூல்களில் இருந்து தான் பெறவேண்டியுள்ளது. பௌத்தம் கிறீஸ்தாப்தத்திற்கு முன்னரே கதிர்காமப் பகுதியிற் கால் கொண்டாலுங் கூட கிறீஸ்தாப்தத்திற்கு முந்திய காலத்தில் இப்பகுதியில் இந்துமத நம்பிக்கைகள் நன்கு வேரூன்றியிருந்தன. இந்நம்பிக்கைகளில் வட இந்திய ஆதிய நம்பிக்கைகளும் சேர்ந்து பரவியிருந்தன. தமிழகத்திலும் சங்ககாலத்திலேயே சுதேச திராவிட சமய நம்பிக்கைகளுடன் வட இந்திய வேதநெறிச் சமய நம்பிக்கைகளும் சங்கமமாகிய நிலையை ஈழத்திலும் காணலாம். கதிர்காமத்திலும் வேத நெறிக் கலாசார நம்பிக்கைகள் பரவியிருந்தமைக்கும் சான்றுகள் உள. கதிர்காமத்திற்கு 5 மைல் தொலைவிலுள்ள சித்துல்பவுவில் (செல்லக் கதிர்காமம்?) கிடைத்துள்ள பிராமிக் கல்வெட்டுக்கள் பல சான்றுகளைத் தருகின்றன. இங்குள்ள கல்வெட்டொன்றில் 'பமணவச' என்ற குறிப்பு வருகிறது. இங்கே வரும் 'வச' என்பது 'வற்சய' கோத்திரத்தினைச் சேர்ந்த பிராமணரைக் குறிக்கும் எனலாம். இதே இடத்திலுள்ள இன்னோர் கல்வெட்டில் 'பமண மருகுட கௌதமி' என வரும் குறிப்பு கௌத்தமி கோத்திரத்தைச் சேர்ந்த பிராமணரைக் குறிக்கிறது எனலாம். பிறிதோர் கல்வெட்டில் காணப்படும் ''ஆசாரிய பராசரி சலேன'' எனவரும் குறிப்பும் பராசர கோத்திரப் பிராமணரையே குறிக்கிறது எனலாம். Paranavitana, S. 1970: 601; 656) கி.மு. 1ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த வட்ட காமினி மன்னனுக்கெதிரான கிளர்ச்சியை ஆரம்பித்த பிராமண 'திஸவும்' இப்பகுதியைச் சேர்ந்திருந்ததை நோக்கும் போதும் சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் சுதேச திராவிட இந்து மத நம்பிக்கைகளோடு இக்காலத்தில் ஆரிய நம்பிக்கைளும் இப்பிரதேசத்தில் பரந்திருந்தமை புலனாகின்றது.

எப்படித்தான் பௌத்த மதப் படர்ச்சி இங்கே காணப்பட்டாலுங் கூட கிறீஸ்தவ சகாப்த காலத்திலும் இந்துமத நம்பிக்கைகள் இங்கே வேரூன்றியிருந்ததை இரு பிராமிக் கல்வெட்டுக்கள் எடுத்தியம்புகின்றன. இவை முறையே திஸ்ஸமகாராம, கிரிண்ட ஆகிய இடங்களில் உள. திஸ்ஸமகாராம கதிர்காமத்திலிருந்து 12 மைல் தொலைவிலும் கிரிண்ட திஸ்ஸமகாராமாவுக்குத் தென்கிழக்கே 8 மைல் தொலைவிலும் உள்ளன. இதனால் இவை கூறும் செய்திகள் கதிர்காமச் சுற்றாடலைப் பிரதிபலிப்பனவாக அமையுமாதலால் அவை பற்றி ஆராய்தல் பொருத்தமுடையதாகும். முதலில் கிருண்டக் கல்வெட்டை நோக்குவோம். அது பின்வருமாறு அமைந்துள்ளது.

> 'இந்த எல்லையற்ற பிரபஞ்சத்தில் புத்தருக்குச் சமமாக ஒருவருமில்லை. எல்லாப் பொருள்களிலும் அவரது நிலையை அடைதல் மிகவும் எளிதன்று. சர்வஞ்ஞரான அவருக்கு மேலான ஆசிரியர் எவருமிலர். அவரே மேலான புகலிடமாவார்; அவரே உலகத்தின் கண்; அவரே உண்மையாகவே சுயம்பு

ஆகவும் உள்ளவர். இப் பாறையி லுள்ள விகாரையில் 'நாக' என்ற பெயருள்ள உபராஜா புத்த பெரு மானிடம் சரண் அடைந்தார். (இதனால்) தவருன சமய நம்பிக்கை களைக கைவிட்டு நல்ல வழியில் ஈடுபட்டார்.

திஸ்ஸமகாராமக் கல்வெட்டின் வாசகம் பின்வருமாறு அமைந்துள்ளது.

'சித்தம்!

பேராசையே பயத்தின் மூலமாகும். பற்று அதிகரித்தல் உண்மையாகவே ஒரு தவருன நம்பிக்கையில்லையா? பற்று, ஆசை ஆகியவற்றி லிருந்து மக்களைத் திசைதிருப்ப முடியாதா? இவ்வாறு சிந்தித்துக் கொண்டும் அரசருக்குரிய கிராமத்தில் தவருன நம்பிக்கைகளை நீக்கும் நோக்கத்து டனும் மதிநுட்பம் வாய்ந்தவனும் நாக என்ற பெயர் உடையவனுமா கிய உபராஜ பதவியை வகித்த நான் புத்த பெருமானைச் சரணடைந்து இதைச் செய்தேன்!.

மேற்கூறிய இரு கல்வெட்டுக்களும் 1945 இல் பேராசிரியர் பரணவித்தானாவினால் வெளியிடப்பட்டவை. (Paranavitana, S.1945) இக் கல்வெட்டுக்கள் இரண்டும் தவருன சமய நம்பிக்கைகள் பற்றிக் கூறுகின்றன. பொதுவாகவே பாளி நூல்களில் இந்துமத நம்பிக்கைகளைக் கூறும் போதெல்லாம் இவை தவருன சமய நம்பிக்கைகள் என்ற சொற் றொடர் பயன்படுத்தப்படுவதை நோக்கும் போது இவை கூறும் தவருன சமய நம்பிக் கைகள் இந்துமத நம்பிக்கைகளே என்பதில் ஐயமில்லை. திருண்டிக் கல்வெட்டு 'தவருன சமய நம்பிக்கைகள்' என்று வெறுமனே கூற, திஸ்ஸமகாராமக் கல்வெட்டு 'அரச னுக்குரிய கிராமத்திலுள்ள தவருன சமய நம்பிக்கைகள்' எனக் கூறுகிறது. திஸ்ஸம காராம ரோகண இராட்சியத்தின் தலை நகர். புத்தர் காலப்பட்ட இடங்களில் ஒன்று என்ற ஐதீகமுடைய இடம். இக் கிராமத்தில் இந்துமத நம்பிக்கைகள் தளைத்திருந்தன என்றால் நீண்ட ஒரு வழிகாட்டு மரபை உடைய கதிர்காமத்தில் இவை தழைத் திருக்கவில்லை என்று கூற முடியுமா? கந்தன் சிங்கள மக்களின் நாற்றிசைக் கடவுளரில் ஒருவன் அத்துடன் முருகன் பற்றிக் கூறும் போது 'எந்த இடத்திலுள்ள முருகனென் றாலும் அவனை 'கதிர்காமத்தெய்யோ' என அவர்கள் அழைப்பது கூட இக் கடவுளின் பழமைக்கும் பாரம்பரியத்துக்குச் சிறந்த உரைக்கல்லாகும். இத்தகைய வழிபாட்டுடன் ஆரிய சமய நம்பிக்கைகளும் இப்பகுதியில் கிறீஸ்தாப்தத்திற்கு முன்னர் பரவியிருந்த தைப் பிராமிக் கல்வெட்டுகளும் எடுத்தியம்பு கின்றன எனலாம்.

இத்தகைய பின்னணி தமிழகத்தில் குறிப்பாகத் திருப்பரங்குன்றம் போன்ற முருகனது படை வீடுகளில் அருகருகே நடைபெற்ற வேதநெறி வழி வந்த வழிபாட் டையும், சுதேச வேலன் வழிபாட்டு முறை யும் நமக்கு எடுத்துக் காட்டுகிறது எனலாம். இதனால் கதிர்காமம் என்ற சொற்பிரயோகம் வடமொழி வழியான சொற்பிறப்பைக் கொடுத்தாலும் தவறன்று. இதனால் கார்த் திகேய கிராமம், கதிர்காமமாகவும் மருவி யிருக்கலாம். அல்லது ஒளியும் (கதிர்) அன்பும் (காமமும்) கலந்து விளங்குமிடமா கவும் இம்மை விளங்கலாம். சிலர் இதற்கு யானை (கஜா) வாழ் கிராமம் எனவும் பொருள் கொள்வர். இன்னும் சிலர் கதிரு மரங்கள் நிறைந்து காணப்பட்டதால் இது இவ்வாறு பெயர் பெற்றதென்பார். எவ் வாருயினும் செவ்வேளான முருகன் ஒளிபடர் மேனியனாக உறையும் பகுதியே இம்மை என் பதில் ஐயமில்லை. இம்மலையிலிருந்து காலை யிலும் மாலையிலும் செவ்வொளியைக் காணும் வாய்ப்பிருந்ததால் வனமாகக் காட்சி தரும் இப்பகுதி கதிர் + காமன் (வனம்) எனவும் பெயர் பெற்றிருக்கலாம். காரணம் கொண்டி போன்ற திராவிட மொழிகளில் கமன், கம்ம என்பவை வனத்தைக் குறிக்கும் சொற்களே. காலகதியில் கம, என மருவிக் கதிர்கம, கதிர்காமமாகவும் விரிவு பெற்றிருக்கலாம். இதனால் ஒளிக் காடே பின்னர் ஒளிக் கிராமம் எனவும் மருவியிருக்கலாம்.

Gunawardana, R . A . L . H. 1982 'Prelude to the State' in **The Sri Lanka Journal of the Humanities. Vol. VIII. Nos. 1 - 2.**

D . V . Dathavamsa 1925 (ed.) B. C. Law. (Lahore)

M . V . Mahavamsa 1960 (ed. Trans.) Geiger . W (Colombo)

Navaratnam, Ratna 1973 **Karttikeya, The Divine Child** (Bombay).

Paranavitana 1928 - 33: 'Katarágama Inscriptions' **Epigraphia Zeylanica. Vol. III.** pp. 212 - 225.

1945 Brahmi inscriptions in Sinhalese Verse J. R. A. S. (C. B.) Vol. XXXVI Part II pp. 58 - 66. 1970. **Brahmi Inscriptions of Ceylon** (Colombo).

Sitrampalam, S. K. 1980 **'The Megaliteic Culture of Sri Lanka,** Unpublished Ph. D. Thesis, University of Poona, Poona.

குணசிங்கம், செ. 1970 'பாண்டியர் வரலாற்றில் பஞ்சவர் ஆட்சிமுறை' சிந்தனை மலர். 3 இதழ் 1 பக். 58 - 71.

சபாநாதன், குல. 1847 கதிர்காமம், சன்னகம்.

சாமி, பி. ஏல் 1971. 'வேலன் வழிபாடு' ஆராய்ச்சி மலர் 3. இதழ் 2. பக் 294 - 302

சிற்றம்பலம் சி. க. 1976 'இலங்கையின் ஆதிப் பிராமிக்கல்வெட்டுக்கள் காட்டும் இந்து மதம் சிந்தனைத் தொகுதி 1. இதழ் 2. பக் 29 - 36.

வேலுப்பிள்ளை, ஆ. 1977 'ஈழத்தில் முருக வழிபாடு' இந்து தர்மம், இந்து மாணவர் சங்கம், பேராதனை. பக். 13 - 18.

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

சுவாமி செல்லத்துரை சிவதொண்டன் நிலையம், செங்கலடி.

விஞ்ஞானம் ஐம்பொறிகளுக்குள் அகப்படும் புறப்பொருள்களையும் பருப்பொருள்களையும் (Phenomena) மட்டுமே ஆராய்ந்தறிய முயலுகின்றது. கல்வி கேள்விகளால் பெறும் உணர்ச்சியுடன் உலகதோடொப்ப நிற்றலைக் குறிக்கும் பாசஞானமென்பதும் இதுவே. மனவுலகில் நடைபெறும் சகல கலைஞானங்களும் இதுவேயாகும்.

மெய்ஞ்ஞானமோ ஐம்புலன்களுக்கும் எட்டாமல் அப்பாற்பட்டு விளங்கும் அகப்பொருள்களையும், நுண்பொருள்களையும் (Neumena) ஆழ்ந்துணர்ந்தனுபவிக்க வழி வகுக்கின்றது. கல்வி கேள்விகளாலும் உலகியலனுபவத்தாலும் வரும் அறிவைத் துணையாகக் கொண்டு, நிலை, நிலையாமைகளையும், நன்மை தீமைகளையும் ஆராய்ந்து, காணப்படுவனவெல்லாம் அழியப்படுவனவாதலைக் கண்டு, துறவுநாட்டம் கொண்டு, பொறிபுலனடங்க மெய்யுணர்ந்து, அவாவறுத்து வீடுபேறடையச் செய்தலைக் குறிக்கும் பசு, பதி, ஞானம் எனப்படும் சமய ஞானம் என்பதும் இதுவேயாம்.

இந்தக் காலம் விஞ்ஞானகாலம். எல்லாத் துறைகளிலும் விஞ்ஞானம் பெரிதும் ஊடுருவி வருகின்றது. கடந்த நூற்றைம்பதாண்டுகளுக்குட்பட்ட விஞ்ஞான வளர்ச்சி, அதற்கு முற்பட்ட பல நூற்றாண்டுகளின் காலத்துக்குரிய பண்பாட்டைத் தகர்த்தெறிந்துவிட்டு, மேலும் வேகமாக வளர்ந்து வருகின்றது. இதன் கிளைகளும் பலப்பலவாக விரிகின்றன. பழைய கூற்றுகிய 'ஆயகலைகள் அறுபத்து நான்கு' என்பது தற்போது வழக்கொழிந்து விட்டது. நாளுக்கு நாள் விஞ்ஞானக்கலைக் கூறுகள் அளவிறந்தனவாக விரிகின்றன. சிறிய நுண்ணிய பொருள்களைப் பற்றி நிரம்பிய அறிவுடையானே 'சிறந்த விஞ்ஞானி' எனப்படுகிறான். இக்கால மனித அறிவு சமாளிக்கமுடியாதபடி விரிவாகி விட்டது. பழையவெல்லாவாறுகளையும் மேலும் பற்பலவாக விரிந்துவிட்டது. தொலை நோக்காடியானது (Telescope) வானத்திலுள்ள விண்மீன்களையும் அவற்றின் இயக்கங்களையும் பற்றி எமது மூளைக் கெட்டாத பல செய்திகளை வெளியாக்கிவிட்டது. இது போலவே பௌதிக நூல் (Physics) நில நூல் (Geology) உயிர் நூல் (Biology) உடலியல் நூல் (Physiology) உள நூல் (Psychology) மனித நூல் (Anthropology) முதலான அளவற்ற புதியனவற்றை எமக் கறிவிக்கின்றன.

இவற்றாலும், வளர்ச்சியடையும் புதிய கண்டுபிடிப்புக்களாலும், சாமானிய மக்களிடையே தெய்வ நம்பிக்கையும், சீரான பழைய பண்பாடும் நிலைகுலைகின்றன. முன்னர் எல்லாக் கலைகளும் இறைவனையடைதலை குறிக்கோளாகக் கொண்டு (மெய்ப் பொருள் காண்பதே அறிவு) அதற்கமைய நெறிகளை அமைத்து வளர்ந்து வந்தன. இன்று இந்நிலை மாறி, முடிந்த முடிபாகிய தத்துவக் கொள்கை (Philosophy) கீழே தள்ளப்பட்டு, உண்மையை உணர வேண்டும் என்னும் போர் முனையிலிருந்து ஒதுங்கி விட்டது. இதன் பேராக மனித மூளை தாங்க முடியாது திணறித் தடுமாறுகின்றது.

பழைய கொள்கைகள் பல பொய்யெனவும், மூடநம்பிக்கை எனவும் இக்கால மக்களால் ஒதுக்கப்பட்டு விட்டன. விஞ்ஞானம் வளர வளர மெய்ஞ்ஞானமும் (இறையுணர்வு) தெய்வ நம்பிக்கைகளும் தாமே மறைந்து விடும் என்பது ஒரு சாராரின் கொள்கை. தெய்வ நம்பிக்கையும் தெய்வக் கோட்பாடுகளும் உள்ளவர்கள் குருட்டு நம்பிக்கையும் பிற்போக்கும் உடையவரென்றே இன்றுள்ள பலரால் இகழப்படுகிறார்கள். அன்றியும் வேறு சிலர் தமக்கு இறையுணர்வும் நம்பிக்

கையும் இல்லை என்று கூறுவதையுமுற் போக்கு நெறியாகவும், நாகரீகமாகவும் கடைப்பிடித்து வருகிறார்கள்.

மேற்கூறியவற்றிலிருந்து விஞ்ஞானத்துக்கும் மெய்ஞ்ஞானத்துக்கும் ஏதோ பெரும் வேறு பாடுளது போல் பலர் பேசுவதும் நினைப்பதும் உண்டு. நன்றாகச் சிந்தித்துப் பார்ப்போமாயின் இவ்விரண்டிற்கும் எத்தகைய இகலும் முரண் பாடும் இருக்கவில்லை என்பது தெற்றெனத் தெளியலாகும். ஐம்புலன்களுக்குள் அகப்படும் புறப் பொருள்களையும், பருப் பொருள்களை யும் மட்டுமே ஆராய்ந்தறியும் விஞ்ஞானத் துக்கும், ஐம்புலன்களுக்கு எட்டாமல் அப்பாற் பட்டு விளங்கும் அகப் பொருள்களையும், நுண் பொருள்களையும் ஆழ்ந்துணர்ந்தறிய வழி காட்டும் மெய்ஞ்ஞானத்தும் முரணுறவோ இகலுறவோ ஒரு காரணமும் இல்லை. இரண் டினதும் எல்லையும், குறிக்கோளும், செயல் முறைகளும் தனித்தனி வேறாக விளங்கக் காணலாம். இதனால் இவற்றிற்கிடையே போட்டியும் பூசலும் எழுதற்கு வாய்ப்பே யில்லை.

எந்த இடத்தில் விஞ்ஞானம் செயலிழந்து முடிவுறுகிறதோ அந்த இடத்திலிருந்துதான் மெய்ஞ்ஞானம் தொடங்குகின்றது. விஞ்ஞா னம் வளர்ந்து கொண்டிருக்கும் ஒரு கலையே. இது இன்னும் குழவியாகவேயுளது. அதன் வளர்ச்சி, ஆராய்ச்சி முறைகளில் எத்தனையோ இடையீடுகளும் மாறுபாடுகளும் எழலாம். ஆகவே இவையிரண்டும் ஒன்றுக்கொன்று முரணானவையென யாம் முடிவு கட்டுதல் சரியாகாது.

அன்றியும் விஞ்ஞானம் இயற்கைப் பொருள்களின் இயல்புகளை விளக்கிக் கூறுமே யன்றி, அவற்றின் காரணங்களையும் அடிப் படைகளையும் விளக்கவல்லதன்று. (Science cannot tell the ultimate 'why' of things and events) விஞ்ஞானம் என்பது வெறும் அறிவே. மெய்ஞ்ஞானமாகிய சமயமோ அதன் பயனு கிய சிறந்த அநுபவமாக அமைகிறது.

மெய்ஞ்ஞானம் கலவாத விஞ்ஞானம் முடத்தன்மையுடையது. விஞ்ஞானம்கலவாத. மெய்ஞ்ஞானம் குருட்டுத்தனமை வாய்ந்தது சிறந்த விஞ்ஞானி ஒருவன் நாத்திகனாக இருக்கமுடியாது. இயற்கைப் பொருள்களை ஆராய ஆராய, இறைவனின் அருமை பெருமைகள் அவனுக்குத்தான் நன்கினிது விளங்கும் என்று பேரறிஞர் அல்பேட் ஐன்ஸ் டைன் கூறியுள்ளார்.

மெய்ஞ்ஞானத்தோடு இயைபில்லாத விஞ்ஞானம் அகந்தை மிக்கது. விஞ்ஞானம் சேராத மெய்ஞ்ஞானம் மூடநம்பிக்கை பொருந்தியது என்பது தத்துவ வித்தகர் இராதாக்கிருஷ்ணன் கூற்றாகும்

வெறும் அரை குறை அறிவே மெய்ஞ் ஞானத்தை மறுக்கும். ஆழ்ந்து நிறைவுற்ற அறிவோ சமயவுணர்வில் தலைப்பட்டுத் தழைத்து நிற்கும் என்பர் பிரான்ஸிஸ் பேக்கர்.

கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்.

- திருவள்ளுவர்

அலகுசால் கற்பின் அறிவுநூல் கல்லாது உலகநூல் ஓதுவ தெல்லாம்- கல கல கூம்துணை யல்லால் கொண்டு தடுமாற்றம் போம்துணை யறிவார் இல்.

- நாலடியார்.

எனவே இருவகை ஞானமும் ஒன்றை யொன்று தழுவிப் பிணைந்து நிறைவுறுவன வேயன்றி மாறுபடுவன அல்ல என்பது யாவர்க்கும் எளிதில் விளங்கும்.

(பிறவித் துன்பத்தைக் கடந்து விடுதலை பெறுவதற்கு உதவியாக இருக்கும் மெய் யுணர்வு புகட்டும் மெய்ஞ்ஞான நூல்களையே மிகுதியாகக் கற்கவேண்டும்.)

'திருமூலர் காட்டும் திருநெறி'

சைவப்புலவர் பண்டிதர் வி ரி. செல்லத்துரை, பிரசித்த நோத்தாரிஸ், சாரைதீவு.

சாத்திரமும் கோத்திரமுமாக உள்ள நூல்களிலே சைவசித்தாந்தக் கருத்துக்கள் காணப்படுகின்றன. சாத்திர நூல்களவரிசையிலே பதினொன்று மெய்கண்ட சாத்திரங்கள் அடங்கும். தோத்திர நூல்கள் நிரலிலே பன்னிரு திருமுறைகள் நிற்கும். இத்திருமுறைகளே பத்தாம் திருமுறையாக விளங்குவதே திருமூலர் திருமந்திரமாகும். இத் திருமந்திரத்திலே சாத்திரக் கருத்துக்களும், கோத்திரக் கருத்துக்களும் விரவிக் காணப்படுகின்றன. இதன் பெருமை கருதியே 'திருமந்திரத்தில் இல்லாதது ஒரு மந்திரத்திலுமில்லை' என்று நமது முன்னோர் கூறி வைத்துள்ளனர்.

திருமந்திரம் திருமூலர் என்ற சித்தரால் கி. பி 9ஆம் நூற்றாண்டளவில் அருளிச் செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது கி.பி.3ஆம் நூற்றாண்டளவில் தோன்றியது என்றும் குறிப்பிடுவர் ஒரு சிலர். எக் காலத்தில் எச் சந்தர்ப்பத்தில் தோன்றியதாயினும் அந் நூலில் கூறப்படும் கருத்துக்கள் மனித வாழ்வுக்கு அதாவது மனித முன்னேற்றத்துக்குச் சாத்தியமான பல கருத்துக்களாய் உள்ளன. சிந்தனைக்கு விருந்தளிக்கக் கூடியதும் நுண்ணுணர்வைத் தூண்டி விடக் கூடியதுமான பல எண்ணக் கோலங்களாய் விளங்குகின்றன. 'மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்' என்றும் போற்றத்தக்கதாகவும் உள்ளன.

மானிட உடம்பின் மகிமை, அன்பின் பெருமை, உடம்பைப் பேணும் முறைமை, வாழ்வின் அநித்தியம், நல்லொழுக்கங்கள், நீதிவழுவாநெறி முறைகள் எல்லாம் எடுத்துக் கூறப்படுவனவாய் உள்ளன. உலகியல் வாழ்வுக்கான வழிகாட்டி நூலாகவும் விளங்குவதுடன், வையத்து வாழ்வாங்கு வாழ்வதற்கான விதி முறைகள் எல்லாம் தெளிவாக எடுத்துக் கூறும் நூலாகவும் உள்ளது.

நமது உடம்பினை 'மலம் சோரும் ஒன்பது வாயிற்குடில்' என்றும், வெறும் 'காற்றடைத்த பை' என்றும், 'ஒன்பது வாயில் கோட்டையடா உற்றுப் பார்த்தால் ஓட்டையடா' என்றும், 'பொல்லாப் புழுமலிநோய்ப் புன் குரம்பை' என்றும் சித்தர்களும் ஞானிகளும் எள்ளி நகையாடிய வேளையில் உடம்பின் பெருமையை எடுத்துரைத்து, உடம்பைப் பேணினால் மட்டுமே உயிரைப் பேணலாம் என்ற கருத்தினைத் திருமூலர் வலியுறுத்தி உள்ளார்.

'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திறம்பட ஞானமும் சேர்ந்திடல் ஒட்டார்'

எனக் கூறி உடம்பை நீண்ட காலம் நிலையாய் வைத்திருக்க வழிவகையும் கூறிய மெருமையால் திருமந்திரம் ஒரு தனித் தன்மை வாய்ந்ததாய் விளங்குகின்றது.

'அன்பே சிவம்', 'சிவமே அன்பு' 'அன்பும் சிவமும் வேறல்ல' என்பது திருமூலர் கண்ட முடிவு.

'என்பிலதனை வெய்யில் போலக்காயுமே
அன்பிலதனை அறம்'

என்பது வள்ளுவர் கூற்று. இவையிரண்டிற்கும் உள்ள தொடர்பினை உற்று நோக்கும் பொழுது இருவர் நோக்கும் ஒரே நோக்காகக் காணப்படுவதை நாம் உணரலாம். திருமூலர் தனது திருமந்திரத்தில்,

'அன்புஞ் சிவமு மிரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே'

என்று அன்பின் மெருமையை எடுத்துக் கூறுகின்றார். வாழ்க்கையின் அநித்தியம், பேரும், புகழும் நிலையற்றவை என்பதனை வலியுறுத்த முன்வந்த திருமூலர் நேரடி அனுபவங்கள் வாயிலாகப் பல்வகைப்பட்ட எடுத்துக் காட்டுகள் மூலமாக நம்மை நல்வழிப் படுத்த முயலுகின்றார்.

இல்லத்துத் தலைவன் ஒருவன், அறுசுவை உணவுப் பொருட்களை ஆங்காங்கு தேடித் தனது அகமுடையாளிடத்துக் கொடுத்துச் சமைக்கச் செய்கின்றான். பின்னர் அதனைச் சுவைத்துச் சாப்பிடுகின்றான். சுவைத்த உணர்வோடு உணர்வாக மனையாளுடன் மந்தணத்தில் (கட்டிலில்) ஒருமித்துத் துயில் கொள்ளு

கின்றன். திடீரென்று அவனது உடம்பின் இடது பக்கத்தில் ஒரு வலி ஏறபடுகின்றது. நின்றது மூச்சு. பிரிந்தது உயிர். அவ்வளவு தான் நமது வாழ்வு என்று நமது அநித்திய மான வாழ்வைப் படம் பிடித்துக் காட்டு கின்றார்.

'அடப்பண்ணி வைத்தார் அடிசிலே உண்டார்
மடக்கொடியாளொடு மந்தணங்கொண்டார்
இடப் பக்கம் இறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந்தாரே'

என்பதுவே அப்பாடல். அத்தோடு அவர் விடவில்லை. மேலும், தொடர்ந்து செல்கின் றார். மரணச் செய்தி கேட்டு ஊரெல்லாம் ஒரே அழுகை. பட்டம், பதவி, புகழ் இணைந்த பெயரெல்லாம் மறைக்கின்றது சிவம் சவம் என்று அழைக்கப்படுகின்றது என எடுத்துக் காட்டுகின்றார். அத்தோடு நாட்கள் நகர நகரப் பற்றும் பாசமும் மறைந்து நினைவ கன்று போவதை நினைவுறுத்துகின்றார்.

'ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டார்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டார்
சூரையங் காட்டிடைக் கொண்டு போய்ச்
சுட்டிட்டார்
நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தாரே'
என்றும்

'நாட்டுக்கு நாயகன் நம்மூர்த் தலைமகன்
காட்டுச் சிவிகை ஒன்றேறிக் கடைமுறை
நாட்டார்கள் பின்செல்ல முன்னே பறை
கொட்ட
நாட்டுக்கு நம்பி நடக்கின்றவாறே'
என்றும் கூறுகின்றார்.

அத்தோடு நில்லாமல் நல்லொழுக் கங்களைக் கடைப்பிடித்து வாழவேண்டும் எனவும் அறிவுறுத்துகின்றார். பயனற்ற வழி களிலே செல்லும் நமது போக்கைச் சாடி நல்வழிகளிலே நெறிப்படுத்த முனைகின்றார். மனம்போன போக்கெல்லாம் போகாது புலன்களைத் தீய வழிகளில் செல்லவிடாது பொறிகளைக் கட்டுப் படுத்தி வாழ வழி காட்டுகின்றார். அவரது வழிகாட்டல்கள் நல்லொழுக்க வாழ்வுக்கு வித்திடுகின்றது.

'காடுவெட்டி நிலந்திருத்திக் காட்டெருவும் போட்டு
கரும்பை விட்டுக் கடு விரைத்துக் களிக் கின்ற உலகீர்!
கூடுவிட்டுப் போயின பின் எது புரிவீர்? எங்கே?
குடியிருப்பீர் ஐயோ நீ குறித்தறியிரிங்கே? என்றும்,

'அத்திப் பழமும் அரைக்கீரை நல்வித்தும் கொத்திக் கிளறிக் கூட்டில் அடைத்தது அத்திப் பழத்தின் அழுதம் அறிந்த பின் கத்திக் கொண்டைவரும் காடடைந் தாரே, என்றும் கூறுகின்றார்.

இவற்றினைவிடப் பின்வரும் திருமந்திரப் பாடல்கள் பேரின்பத்தை நாடாமல் சிற்றின் பத்தையே நாடி மகிழும் மக்களைப் பற்றி எடுத்துக் கூறி நல்வழிப் படுத்த முயல்வதைக் காட்டுகின்றது. இது போதாமல் மேலும் மேற்படி கருத்தினை நிலைநாட்ட நல்ல உதாரணங்களும் முன்வைக்கப் படுகின்றது. அவ்யாவன,

'வாழை பழுத்துக் கிடக்குது. வையகம்
வாழையைச் சூழத் தாழ் கோத்து நிற்குது
தாழைத் திறந்து கனியுண்ண மாட்டாதார்.
தாழம் பழத்துக்குத் தள்ளுண்டவாறே?
'கள்ள வழியில் விழுந்த விளாங்கனி
கொள்ளச் சென்றவரும் குழியில் விழுந்தனர்
தெள்ளிய ஞானி தெளிவுறக் கண்ட பின்
பிள்ளைகளெவரும் பிதற்றெழிந்தாரே!

என்பனவாகும். இவை அனைத்தும் திருமந் திரப் பாடல்களே.

எனவே, மேற் கூறப்பட்ட உதாரணப் பாடல்களில் இருந்து நாம் அறியக் கூடியவை யாதெனில்; திருமூலர் அவர்கள் சைவசித் தாந்த அடிப்படைக் கருத்துகளை மட்டும் கூறுவதோடு நின்றுவிடாது, வாழ்க்கையை நல்வழிப் படுத்தக் கூடிய உயர்ந்த கருத்துக் களையும், திருநெறிகளையும் எடுத்துக் கூறி உலகில் வாழும் மக்கள் யாவரும் உய்தி பெறுவதற்கும் வழியமைத்துக் கொடுத்துள் ளார்என்பதுவே அறிஞர் தம் கருத்தாகும்.

இலங்கைப் பூர்வ குடிகளும் சிவவழிபாடும்

பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை தமிழ்த்துறைத் தலைவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

திருமூலர் திருமந்திரம் 2701 ஆம் பாடலிலே இலங்கையைச் சிவ பூமிக்குள் அடக்கியுள்ளார்.

> மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை
> கூருமிவ் வானின் இலங்கைக் குறியுறுஞ்
> சாருந் திலைனைத் தன்மா மலயத்தூர்
> டேறுஞ் சுழுனை இவை சிவ பூமியே.

தில்லைச் சிதம்பரத்துக்கும் பொதிகை மலைக்கும் இடைப்பட்ட தமிழகம் சிவபூமியென்றும் மேருமலைக்கும் இலங்கைக்கும் இடைப்பட்ட பகுதி சிவபூமியென்றும் பெயருக்கு ஓரளவு உரிமையுடையதென்றும் கூறப்பட்டுள்ளது. பௌராணிக இலக்கியங்களுள்ளே பயின்று வரும் மேருமலை பூமியிலுள்ள எந்த மலையையும் குறிக்கின்றதா என்பது இன்னும் தெளிவாகவில்லை. சிவ புராணங்களிலே கயிலாய மலை பற்றிப் பரவலான குறிப்புகள இடம் பெறுகின்றன. இமயமலைக்கு வடக்கிலே திபெத்திலே கயிலாயமலை அடையாளங் காணப்பட்டுள்ளது. வங்காளத்துக்கு வடதிசையிலே கயிலாயம் அமைந்துள்ளது. ஆகம வழிபாடு வங்காளத்தின் வடபகுதியிலேயே தோற்றம் பெற்றதாக இன்றைய ஆய்வாளர் கருதுகின்றனர்.

இலங்கையின் வரலாறு கி. மு. மூன்றும் நூற்றாண்டிலே பௌத்தமத வருகையுடன் தெளிவடைகின்றது. பௌத்தமதம் இன்றைய பீகார் மாநிலத்திலிருந்து இலங்கைக்கு வந்தது. அசோகப் பேரரசன் அனுப்பிய மகிந்தன் தலைமையிலான பௌத்த குருமார் ஆகாய மார்க்கமாக இலங்கையிலுள்ள மிகிந்தலைக்கு வந்ததாக மகாவம்மிசம் கூறுகிறது. ஆகாய மார்க்கமாக வந்தனரென்பதை ஏற்கமறுக்கும் இன்றைய அறிஞர், தென்னிந்தியாவினூடாக அன்றி, ஒரிஸ்ஸா, வங்காளம் என்னும் மாநிலங்களிலுள்ள துறைமுகங்களூடாக வந்திருக்க வேண்டும் என்று கொள்வர்.

மகாவம்மிசம் இலங்கைக்குச் சிங்களவர் வருகையை முந்நூறு ஆண்டுகள் முன்னெடுத்துச் செல்கிறது. வங்காளம், ஒரிஸ்ஸா என்னும் மாநிலங்களிலுள்ள பகுதிகளிலேயே சிங்களவரின் முன்னோர் வாழ்ந்ததாகவும் விஜயனும் தோழர்களும் அப்பிரதேசங்களிருந்து கடல்மார்க்கமாக இலங்கை வந்ததாகவும் கூறப்படுகிறது. மகாவம்மிசத்தின்படி, விஜயன் இங்கு வந்தபோது, இலங்கையிலே நாகர்களும் இயக்கர்களும் வசித்தனர். கௌதம புத்தர் தம்முடைய மதத்தை இலங்கையிலே நிலை நிறுத்துவதற்காக மூன்றுமுறை ஆகாயமார்க்கமாக நேரிலே வந்தாரென்றும் இலங்கையின் மேற்குத் திசையிலுள்ளதும் இன்று களனி என்று சொல்லப்படுவதுமான கல்யாணிக்கு வந்த அவர் அண்மையிலிருந்த மலைச்சிகரத்திலே தம்முடைய திருவடியின் அடையாளத்தைப் பொறித்துச் சென்றாரென்றும் கூறப்படுகிறது. இலங்கையின் வடதிசையிலுள்ள நாகதீபத்துக்கு வந்த புத்தர் ஓர் இரத்தினச் சிம்மாசனம் தொடர்பாக, நாக அரசர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறைத் தீர்த்து வைத்து, அந்தச் சிம்மாசனத்தைத் தமக்குரிய புனித சின்னமாக்கினர். இலங்கையிலே மேற்குத் திசையிலும் வடமேற்குத் திசையிலும் நாகர் ஆதிக்கம் செலுத்தி வந்ததனால், நாகத் திசை என்ற பெயர் அத்திசைகளைக் குறிக்க வழங்கியதைச் சென்னைத்தமிழ்ப் பேரகராதி, யாழ்ப்பாணத்திலே தொகுக்கப்பட்ட அகராதிகளிலிருந்து எடுத்துக்காட்டுகிறது.

கௌதம புத்தர் இயக்கர்கள் வாழ்ந்த மகியங்கணைப்பகுதிக்கும் வந்திருந்தார். இயக்கர்களிடம் எதிர்ப்பைக்கண்ட அவர், இயக்கர்களை அவ்விடத்திலிருந்து விரட்டி, தம்முடைய மதத்தை அவ்விடத்திலே நிலைநிறுத்தினரென்று கூறப்படுகிறது. சிவவழிபாட்டுக்காரர்களாக இருந்த இயக்கர்கள் பௌத்தத்தை ஏற்கமறுத்திருக்கக் கூடும் என்று நம்ப இடமிருக்கிறது.

நாகர்கள், இயக்கர்கள் என்பவர் யார் என்பதுபற்றி அறிஞர் களிடையே ஒருமைப்பாடு இன்னும் ஏற்படவில்லை. தென்னிந்தியாவிலே திராவிட இனப்பண்பாட்டோடு தொடர்புடைய பெருங்கற் பண்பாட்டுச் சின்னங்கள் இலங்கையின் பல பகுதிகளிலும் கண்டெக்கப்பட்டு வருகின்றன. நாகர்களும், இயக்கர்களும் திராவிடர்களாக - தமிழர்களாக - இருக்கவேண்டும் என்ற கருதுகோள் சிலரால் முன்வைக்கப்படுகிறது.

இந்தியாவின் வடகீழ் எல்லைப்புறத்திலே, நாகர்கள் என்ற மங்கோலியத் தொடர்புள்ள இனத்துக்கு நாகலாந்து என்று தனி மாநிலம் காணப்படுகிறது. வரலாற்றுக் காலத்துக்கு முன்பும் வரலாற்றுக் காலத்திலும் நாகர்களைப் பற்றிய பல குறிப்புகள் இந்தியாவின் பல்வேறு பாகங்களிலிருந்தும் கிடைக்கின்றன. நாகமன்னர்கள் ஆரியமன்னர் களோடும், திராவிட மன்னர்களோடும் வேறுபாடு காட்டாது கலப்புகளை ஏற்படுத்தி வந்துள்ளனர். சங்ககாலப் புலவர்களுள்ளே நாகர் என்று பெயருள்ளவர் சிலர் காணப்படுகின்றனர்.

பண்டைக்காலத் தமிழகத்திலே சேரநாடு என்று பெயர் பெற்றிருந்த பிரதேசத்தின் பெரும்பகுதியாக அமைந்து, இன்றும் தமிழோடு ஒப்புமைகள் பல வற்றைக் கொண்டு விளங்கும் மலையாளமொழி வழங்கும் கேரளா மாநிலத்திலே நாயர் என்னும் சமூகத்தினர் வாழுகின்றனர். நாகபாம்பு வழிபாட்டின் எச்சசொச்சங்கள் அவர்களிடையே இன்றும் காணப்படுகின்றன. நாகர் என்ற சொல் நாயர் என்று திரிந்து வழங்குகிறதெனக் கொள்ளலாம். கேரளமும் தமிழ்நாட்டுக்கு மேற்குத்திசையில் அமைந்திருக்கிறது. நாகர் வடகீழ் இந்தியாவிலிருந்து வந்தவர்களானால், பண்டைக்காலத் தமிழகத்திலும் பண்டைக்கால இலங்கையிலும் மேற்குத்திசையிலே குடியேறியது ஏன், எப்படி என்ற வினாக்கள் எழுகின்றன.

தமிழகத்தின் தென்மேற்கிலே நாகர் கோயில் என்ற துறைமுகமும் தென்கிழக்கிலே நாகபட்டினம் என்ற துறைமுகமும் காணப்படுகின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டின் கிழக்குக்கரையிலே நாகர் கோவில் என்றொரு துறை உண்டு. நாகதம்பிரான் வழிபாட்டுச் சின்னங்கள் வடஇலங்கையிலே ஆங்காங்கு காணப்படுகின்றன. இலங்கையின் வட மேற்குத் திசையிலே பாடல் பெற்ற சிவத் தலமான திருக்கேதீச்சரம் காணப்படுகிறது. கேதுவழிபட்ட தலமாதலால் திருக்கேதீஸ்வரமென்ற பெயரேற்பட்டதாகக் கூறப்படுவது நாகர்கள் வழிபட்ட சிவத்தலம் என்பதையே குறிப்பதாக இருக்கவேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நாகர் கோவிலும் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நாகபட்டினமும இலங்கைக்கு நாகர்கள் வந்த வழிகளா அல்லது இலங்கையிலிருந்த நாகர்கள் தமிழகத்துக்குச் சென்ற வழிகளா என்பது ஆராய்ச்சிக்கு உரியது.

கௌதம புத்தர் காலத்திலேயே பௌத்த சமயத்தை விரும்பி ஏற்றுவிட்டார்களாகக் கூறப்படும் நாகர்கள் அநுராதபுரத்திலிருந்த சிங்களமன்னர்கள் பௌத்தசமயத்தை ஏற்றுக் கொண்டதும் அவர்களுடன் நெருங்கிக் கலந்தனர். மகாவம்மிசம் குறிப்பிடும் சிங்கள மன்னர் வரிசையிலே, தேவநம்பிய தீசனின் தம்பியாக ஒரு நாகன் குறிப்பிடப்படுகிறான். அவனுடைய தாய் நாகர்குலத்தவளாக இருந்திருக்க வேண்டும். கி. பி. இரண்டாம் நூற்றாண்டு நடுப்பகுதியிலிருந்து மூன்றாம் நூற்றாண்டு நடுப்பகுதிவரையிலே, மன்னர்கள் பலர் நாகர்களாக விளங்குவதைக் காணலாம். திருமணத் தொடர்புகள் மூலமாக, நாகர் குலத்தவர்கள் அநுராதபுரச்சிம்மாசனத்தைக் கைப்பற்றியிருந்தனர் என்றே இந்த நிலைமைக்கு விளக்கம் கொடுக்க வேண்டும்.

மகாவம்மிசம் முதலிய பாளி நூல்களும் மணிமேகலை முதலிய தமிழ் நூல்களும் குறிப்பிடும் நாகத்தீவு அல்லது மணிபல்லவம் எது என்பது ஒரு காலத்திலே ஆராய்ச்சிக்குரிய விடயமாக இருந்தது. இனறைய நயினாதீவே அந்த இடம் என்று ஒருகாலத்திலே கருதப்பட்டது. அதனால், அங்கே நாகதீவு விகாரைகட்டியெழுப்பப்பட்டு, அது சிங்கள பௌத்தர்களின் யாத்திரைத்தலமாக மாறியுள்ளது. 1936 இல் வல்லிபுரத்திலே கண்டெடுக்கப்பட்ட பொன்னேட்டுச் சாசனம் யாழ்ப்

பாணக் குடாநாடு முழுவதும் நாகத்தீவெனப் பெயர் பெற்றிருக்க வேண்டும் என்ற விளக்கத்தைத் தந்துள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாடுவரை, மாதோட்டம் உட்பட, இலங்கையின் வடமேற்குப் பிரதேசம் நாகர்கள் குடியிருப்பாக ஒரு காலத்திலே விளங்கியிருக்க வேண்டும். வரலாற்றுக் காலத்திலே. இலங்கையின் ஏனைய சில பகுதிகளிலும் நாகர் ஆட்சி ஏற்பட்டது மகாவம்மிசத்திலிருந்து தெரியவருகிறது. இலங்கையின் தென்கீழ்த் திசையிலுள்ள மகாகமம், வடகீழ்த்திசையிலுள்ள கொட்டியாரம், மத்தியிலுள்ள பாத்தலை முதலிய இடங்களும் நாகர்குடியிருப்புக்களாக மாறின.

வரலாற்று ஆய்வுக்கு, இலக்கியச்சான்றுகளிலும் பார்க்க, சாதனச்சான்றுகள் வலுமிக்கனவாகக் கொளளப்படுகின்றன. தமிழகத்துச் சங்ககாலத்துக்குச் சமமான காலத்தைச் சேர்ந்தவனுன ஆதிப்பிரமிச் சாசனங்களிலே நாகர் அரசுகள் குறிப்பிடப்படும் இடங்களை நோக்க வேண்டும். நாகர்கள் நாடு முழுவதும் பரவி வாழ்ந்தமை அச்சாசனங்களிலே வரும் ஆட்பெயர்களிலிருந்து புலப்படுகிறது. வடமாகாணத்தின் தென்னெல்லையிலுள்ள வவுனியாவுக்கு அண்மையிலுள்ள பெரிய புளியங்குளத்துக் குகைச்சாசனங்களிலே நாகமன்னன் குறிப்பிடப் படுகிறுன். நாகத்தீவிலிருந்த மக்கள் வவுனியாவரை பரவி, அப்பிரதேசத்தில் அரச உரிமையும் பெற்றிருந்திருக்கின்றனர்.

வடமேற்கு மாகாணத்திலே, நாகமன்னர்கள் பற்றி இரண்டு சாசனங்கள் குறிப்பிடுகின்றன. அவற்றுள் ஒன்று பழைய பிராமிச் சாசனகாலத்தையும் மற்றது சிறிது பிந்திய காலத்தையும் சேர்ந்தது. இலங்கையிலுள்ள மிகப்பழைய சிவன் கோவில்களுள் ஒன்றுகக் கருதப்படும் முன்னேசுவரம் வடமேற்கு மாகாணத்தைச் சேர்ந்தது. அனுராதபுர மாவட்டத்திலும் ஒரு சாசனம் நாகமன்னனைக் குறிப்பிடுகிறது. அந்தச்சாசனம் காணப்படும் இடம் வடமாகாண எல்லைக்கு அண்மையிலே, மேற்குத் திசையிலே அமைந்துள்ளது.

மத்திய மலை நாட்டிலே, கண்டி மாவட்டத்திலே, இருவேறு இடங்களிலுள்ள சாசனங்கள் ஒவ்வொன்று நாகமன்னரைக் குறிப்பிடுவது வியப்பாக உள்ளது. நாகமன்னர் ஆட்சி கண்டி மாவட்டத்திலே பரவியிருந்தமைக்கு இலக்கியச்சான்று கிடைக்கவில்லை; இச்சாசனங்கள்மட்டுமே சான்றுபகருகின்றன.

வடக்குமாகாணம், வடமேற்குமாகாணம், மத்தியமாகாணம் முதலிய பிரதேசங்களிலே, நாக அரசு ஒன்று பலவா, பலவாலை எத்தனை இருந்தன என்பதைத் தீர்மானிக்கத் தேவையான சான்று இதுவரை கிடைக்கவில்லை. நாக அரசு கிழக்கு இலங்கையிலும் தன்னுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளமைக்குச் சான்று கிடைத்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள குசலங்கந்தக் குகைச்சாசனத்திலும் அம்பாறை மாவட்டத்திலுள்ள மொட்டைக்கல்லுக் குகைச்சாசனத்திலும் நாக உபராசர்கள் குறிப்பிடப்படுகின்றனர். யுவராசா என்ற வட சொல்லே உபராசா என்று பாகதத்திரிபு பெற்றுள்ளது. கிழக்கிலே இளமைப் பருவத்திலே இளவரசராக முடிசூடி அனுபவம் பெற்றபின் வடக்கிலே முழு அரசராகப் பதவி உயர்வுபெற்றுப்போகும் வழக்கம், நாகமன்னர்களுக்குள் இருந்திருக்குமாவென்பது ஆராயத்தக்கது.

நாகர்கள் இலங்கையின் வடகரையிலிருந்தும் மேற்குக்கரையிலிருந்தும் சிறிது சிறிதாக இலங்கைமுழுவதும் பரவியிருக்கின்றனரென்பது தெளிவாகத் தெரிகிறது. தமிழ் நாட்டுக் கடற்கரைக்கு எதிர்க்கடற்கரையிலே நாகர்குடியிருப்புகள் இலங்கையிலே அமைந்திருந்ததனுல், இலங்கை நாகர்கள் தமிழர்களாக அல்லது தமிழர்களோடு உறவுகளை வளர்த்துக் கொண்டவர்களாக இருக்கவேண்டும். இயக்கர்கள் என்போர் யார் என்பது இன்னும் சிக்கலான விஞவாகக் காணப்படுகிறது. மகாவம்மிசத்தின்படி, இயக்கப்பெண்ணுன குவேனியை மணம்முடித்த விஜயன், அவளின் உதவியுடன் இயக்கர்களைக் கொன்றொழித்து, இலங்கை மன்னன் ஆகின்றுன். பின்பு, குவேனியையும் இரண்டு பிள்ளைகளையும் காட்டுக்கு விரட்டிவிடுகிறுன். அப்பிள்ளை

களின் பரம்பரையே இன்றுள்ள வேடர்கள் என்று கூறப்படுகிறது. இது எவ்வாறுயினும் இயக்கர்களின் பரம்பரையில் வந்தவர்களே வேடர்கள் என்ற கருத்து இன்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது வேடர்களின் முன்னோர் நாகர்களுக்கும் முன்பு இலங்கைக்கு வந்தவர்களாக இருக்கவேண்டும். நாகர்கள் காலப்போக்கிலே தமது தனித்துவத்தை இழந்து, தமிழர் சிங்களவர் என் போருடன் இரண்டறக் கலந்துவிட்டனர். இயக்கரும் பெரும் பகுதியினர் இவ்வாறே மாறிவிட்டனர், இயக்கருள் ஒரு பகுதியினர் இன்றும் தமதுதனித்துவத்தைப் பேணும் வேடராக வாழ்ந்துவருகின்றனர்.

'ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்' என்னும் முன்னோடித் தமிழர் வரலாற்று நூலை எழுதிப் புகழ் கொண்ட கனகசபைப்பிள்ளை, இயக்கர்களும் மத்திய ஆசியாவிலிருந்து இமயமலையூடாக இந்தியாவுக்குட் புகுந்த மங்கோலியத் தொடர்புள்ள இனத்தவரேயென்பர். இவர்கள் ஒரு காலத்திலே ஆரியமயமாக்குதலைத் தீவிரமாக எதிர்த்து நின்றவர்களாக இருந்திருக்க வேண்டும் இராமாயணப் புகழ்பெற்ற இராவணன், இலங்கை இயக்கர் குலமன்னர் ஆவான். ஆரிய - திராவிடப்பூசல் கூர்மையடைந்துள்ள நிலையிலே, தமிழ்நாட்டிலே, வட இந்திய இராமனை எதிர்த்துப் போராடிய இராவணன் திராவிட மன்னனாகவும் தமிழ் மன்னனாகவும் போற்றப்படுவதைக் காணலாம். தமிழ் நாட்டு மக்கள் இராவணன் மேல் உரிமை பாராட்டுவது இருபதாம் நூற்றாண்டு நிகழ்ச்சியாகும்.

இயக்கர்களைக் கயிலாய மலையோடு தொடர்புபடுத்தும் மரபு, அவர்கள் மத்திய ஆசியாவிலிருந்து வங்காளம் ஊடாக வந்தவர்களாகலாம் என்ற நம்பிக்கைக்கு ஆதாரமாகக் கூடும். இராவணனுடைய உறவினனும் மூத்தவனுமான குபேரன் இலங்கையரசை இராவணனுக்கு விட்டுவிட்டுக் கயிலைக்குச் சென்றான் என்று கூறப்படுகிறது. கயிலாயநாதன் என்ற பெயர் சிவபெருமானை மட்டுமல்லாது குபேரனையும் குறிக்கின்றது. குபேரசைலம் என்பது கயிலாமலையே என்று அகராதி கூறும். இராவணன் கயிலாய மலையைத் தூக்கிக் கொண்டு இலங்கைக்கு வரமுயன்றான் எனப்படுகிறது. தன் இனத்தவர்களான இயக்கர்களுக்குக் கயிலாய மலைமேல் இருந்த உரிமையையே அவன் நிலைநாட்ட முயன்றான் போலும்.

வங்காளத்தின் வடபகுதியே தாந்திரீக வழிபாடு அல்லது ஆகம வழிபாட்டு வளர்ப்புப் பண்ணை என்று கூறப்படுகிறது. கயிலாயத்தைத் தலைமைத்தானமாகக் கொண்ட சைவாகம முறையிலான வழிபாடு வங்காளத்திலே காலத்தால் மிகப்பழையது. இராவணன் முதலிய இயக்கர் சிவ வழிபாட்டுக்காரர் என்பது இராமாயணத்திலே அழுத்திக் கூறப்பட்டுள்ளது. சைவசமய குரவர்களுள் முதல் இருவரான திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் தங்களுடைய தேவாரப்பதிகங்களிலே இராவணனுக்குப் பெருமுக்கியத்துவம் வழங்கியுள்ளனர் சிவசின்னமான திருநீற்றின் சிறப்புகளை வரிசைப்படுத்தும் சம்பந்தர் 'இராவணன்மேலது நீறு' என்று கூறும்போது, மானிடப்பிறவி யெடுத்தவர் எவருமே இவ்வாறு உயர்த்திக் கூறப்படவில்லை என்பது உற்றுக் கவனிக்கப்பட வேண்டும்.

சைவசமய குரவர்களுள் நான்காமவரான மாணிக்கவாசகர் சிவபெருமான் மண்டோதரிக்கு அருள் செய்தமையைப் பாடியுள்ளார். இராவணன் தேவியான மண்டோதரி தேவதச்சன் மயனின் புதல்வியெனப்படுகிறாள். மாதோட்டமே மண்டோதரியின் சொந்த இடம் என்றொரு கருத்து நிலவுகிறது. மகாதுவட்டா என்பவன் சிவபிரானை வழிபட்ட இடமே மாதோட்டமாக மருவியதென்ற கருத்து சிலராலே முன் வைக்கப்படுகிறது. கம்மாளர்களுடைய குடியேற்ற நகரமாதோட்டம் விளங்கியதென்ற கருத்தினை முதலியார் இராசநாயகம் முன்வைத்துள்ளார். நாகர்களும் ஒரு பிரிவினரே இந்தக் கம்மாளர் என்று அவர் கருதுகிறார். நாகர்களும் ஒரு காலத்திலே சிவ வழிபாட்டுக்காரராக இருந்துள்ளனர்.

வங்காளத்திலே சிவ வழிபாட்டோடு குமார வழிபாடும் ஒரு காலத்தில் மிகவும் செல்வாக்குப் பெற்று விளங்கியது. குமார வழிபாடு தமிழகத்து முருக வழிபாட்டோடு

இணைந்து நிற்பது வேடர்கள் இலங்கையில் முருக வழிபாட்டை 'குமர'க் கடவுளுக்கே நிகழ்த்துகின்றனர். கதிர்காமத்திலிருந்து முல்லைத்தீவு வரை, 'குமார' வழிபாட்டுச் சான்றுகள் காணப்படுகின்றன. கிழக்கிலங்கையிலுள்ள படைக் கோவில்கள் பல வேடரா லேயே தொடக்கி வைக்கப்பட்டவையாகக் கூறப்படுகின்றன.

இலங்கையிலுள்ள ஆதிப்பிராமிச்சாசனங் கள், மக்கள் பௌத்தத்துக்கு மதம் மாறிய நிலையிலே தோன்றியவை. அச்சாசனங்களி லும் பெரும்பாலானவை பௌத்தகுருமாரின் பெயர்களையும் அக்குருமாருக்கான குகைகளை ஏற்படுத்தியவரின் பெயர்களையும் கூறுகின் றன. பௌத்தம் பரவுவதற்கு முன்பு மக்களி டையே வழங்கிய ஆட்பெயர்கள் அற்றுப் போகாத நிலை அது. 'சிவா' என்ற பெயர் இலங்கை முழுவதும் பயின்று காணப்படு கிறது. பௌத்தம் இலங்கைக்கு வரமுன்பு, இலங்கை சிவபூமியாக விளங்கிருக்கவேண்டும்.

இலங்கையெங்கும் சிவா என்ற பெயர் பயின்று காணப்பட்ட போதும் மிகவும் அதிக மாகப் பயின்று காணப்பட்ட பிரதேசம் இலங்கையின் தென்கீழ்த் திசையாகும். அம் பாந்தோட்டை மாவட்டத்திலே கதிர்காமத் தைச் சுற்றியுள்ள மகாகமப்பற்றிலேயே 'சிவா', 'குமார' முதலிய பெயர்கள் செறிந்து காணப்படுகின்றன. தென்கீழ் இலங்கை யிலுள்ள திருக்கோவிலுக்கு எதிரிலே கடலுக் குள் இராவணன் கோட்டை இருந்து அழிந் ததாக வரும் செவிவழிச்செய்தி இவ்விடம் நினைவு கூரத்தக்கது.

இலங்கையின் வடகிழக்குத் திசையில் அமைந்துள்ள திருகோணமலை மாவட்டமும் இராவணனோடு தொடர்பு படுத்தப்படுகின் றது. கோணமலைக்குன்றை வாளால் வெட்டிய வனெனவும் கன்னியா வெந்நீர் ஊற்றுகளை அமைத்தவனெனவும் கோணேசுவரத்தை வழி பட்டவனெனவும் இராவணன் கூறப்படுகிறான்.

திருகோணமலை முதல் திருக்கோவில் வரை, இயக்கர் பூர்வகுடிகளாக வாழ்ந்த தென்கீழ்த்திசையிலே கிழக்குப் பகுதியில் அமைந்திருத்தல் கவனிக்கத்தக்கது. கொக் கட்டிச்சோலை தான்தோன்றீசுவரர் கோவி லெனப் பெயர்பெற்ற மட்டக்களப்புப் பிர தேசத்திலே பிரசித்திபெற்ற சிவன்கோவில் வழிபாடும் வேடர்களாலேயே தொடக்கி வைக்கப்பட்டதாக வித்துவான் வி. சீ. கந்தையா கூறுவர்.

இராவணன் முதலியோர் புலஸ்தியமுனி வர் பரம்பரையிலே வந்தவரென இராமாய ணம் கூறும். சைவசமயத்தவரான சோழப் பெருமன்னர் இலங்கையைக் கைப்பற்றிய போது, இராவணனை நினைவுகூரும் வகையிலே, புலஸ்திய நகர் என்ற புதிய தலைநகரை அமைத்தனர். அதுவே பொலனருவை என்று மருவியது.

தேர்ந்தெடுத்த உசாத்துணை நூல்கள்.

கந்தையா, வி: சீ. - மட்டக்களப்புத் தமிழகம், ஈழகேசரி பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், யாழ்ப்பாணம், 1964.

- மட்டக்களப்புச் சைவக்கோவில்கள், இந்துசமயத்திணைக்களம், பிரதேச அபிவிருத்தி அமைச்சு, கொழும்பு, 1983.

வடிவேல், இ: - திருகோணமலை மாவட்ட திருத்தலங்கள், இந்துசமயத் திணைக்களம், பிரதேச அபிவிருத்தி அமைச்சு, கொழும்பு, 1982.

Paranvitana, S. - Inscriptions of Ceylon, Vol.I, Early Bramhi Inscriptions, Archaeological Survey of Ceylon, 1970.

Rasanayagam, Mudaliyar C. - Ancient Jaffna, 1926; யாழ்ப்பாணச் சரித்திரம், யாழ்ப்பாணம், 1933.

இந்து மதம்

திரு. சோமலிங்கம் - வந்தாறுமூலை.

இமயம் தொடக்கம் குமரி வரை
எங்கும் வாழ்ந்தது இந்து மதம்
சமயநெறியில் தவருமல் நல்ல
தத்துவம் சொன்னது இந்து மதம்
நமனுக்கும் அஞ்சா நெறியில் வாழ்ந்து
நல்லதைச் சொன்னது இந்து மதம்
உலகம் சுற்றம் என்ற உண்மை
உணர்த்தி நிற்பது இந்து மதம்!

பாதகம் நீக்கி நிறையுடன் வாழ
பக்குவம் கொடுப்பது இந்து மதம்
வேதம் ஓதி மேன்மை உணர்ந்து
விவரம் தருவது இந்து மதம்
நாதம் கடந்த வெளியில் நின்று
ஞானம் ஈவது இந்து மதம்
பேதம் தீர்த்து சமரசம் காண
பேணி நிற்பது இந்து மதம்!

தியாகம் யாகம் எல்லாம் ஒன்றாய்
சேர்த்து வாழ்வது இந்து மதம்
தியானம் செய்து சிவத்தை அடைய
சகத்தில் மிளிர்வது இந்து மதம்
உயர்வும் பணிவும் சமமாய் எண்ணி
உலகைக் காப்பது இந்து மதம்
செயல்கள் அனைத்தும் சிவனுக்கு ஈந்து
சிற்றத்தைக் காப்பது இந்து மதம்!

சைவசித்தாந்த தத்துவங்கள்

செல்வி. கு. குமுதினி 1ம் வருடம் வர்த்தகபீடம்.

சைவ சித்தாந்தம் என்பது சைவம், சித்தாந்தம் என்னும் இரு சொற்களால் ஆன தொடர். சைவம் சிவசம்பந்தமுடையது சித்தாந்தம் முடிந்த முடிவு. ஆகவே சைவ சித்தாந்தம் என்றால் சைவசமயத்தின் முடிந்த முடிபு எனப் பொருள்படும். சைவ சித்தாந்தம் என்னும் பெயரை முதன் முதற் கூறியவர் திருமூலநாயனார். அவர் செய்த பாடல் ஒன்றில் சைவசித்தாந்தர் குறிப்பிடப் படுகிறார்கள்.

கற்பன கற்றுக் கலிமன்னு மெய்யோக
முற்பத ஞான முறைமுறை நண்ணியே
சொற்பத மேவித் துரிசற்று மேலான
தற்பரங் கண்டுளோர் சைவசித்தாந்தரே.

சிவநெறிச் சார்பான மிகவும் நுட்பமான முடிபுகள் சைவசித்தாந்தம் எனப்பட்டன. சைவசித்தாந்தத்தில் கடவுள், உயிர், உலகம் என்னும் மூன்றும் ஆராயப்படுவன. சைவர் எனப்படுவோர் நித்திய அநுட்டானம், சிவ பூசை, சிவாலயதரிசனம், சைவ ஆசார நியமனங்கள் என்பன வழுவாமல் மேற் கொண்டு வாழ்பவர். அவர்கள் கற்பன கற்றுக் கற்றவழியிலே நிற்பவராவர். சைவ சமயத்திற் பிறந்தவர்கள் சைவத்திறம் என்று சிவாகமங்களிலே விதிக்கப்பட்ட சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன வற்றில் முதன் மூன்றினையும் மெய்யன்போடு அநுட்டித்தால், அவர்களுக்குச் சிவபெருமான் ஞானபிரியர் மூலம் அருள் செய்து முத்தி கொடுத்தருளுவர். சைவசித்தாந்த முத்தி, ஆணவம் முதலிய மலபந்தம் நீக்கி, பிறப்பு, இறப்பு இல்லாத சிவபெருமானின் திருவடி களைக் கூடிச் சிவானந்த அநுபூதியில் இருத்தலாம். நீரிற் கலந்த உப்பு அந்நீரின் ஒவ்வொரு திவலையிலும் காணப்படுதல் போல, சிவத்தினுடைய குணமெல்லாம் சிவத்தை யடைந்த உயிரிடத்தே காணப்படும்.

இராசாங்கத்தமர்ந்த சைவம் எனவும், வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம் எனவும் போற்றப்பட்டது எங்கள் சைவ சித்தாந்தம். இதன் கோட்பாடுகள் திருவருட் பயனில் ஒரு திருக்குறளில் அழகாகவும் அமைதியாகவும் கூறப்பட்டுள்ளன. ஒருவனுகிய இறைவனும், அளவில்லாதவனுகிய உயிர்களும், இருள்வடிவாகிய ஆணவமலமும் கன்மமலமும், சுத்தமாயை, அசுத்தமாயை என்னும் இரு மாயைகளும் ஆகிய இப் பொருட்கள் ஆறும் அநாதியானவை.

ஏகன் அனேகன் இருள்கருமம் மாயை
யிரண்டாகவிவை ஆருதி யில்,

இவற்றை மூன்று பொருள்களாகக் கூறுவர். முதலாவது அறிவிக்காமலே எதனையும் அறியும் பொருள். இரண்டாவது அறிவித்தால் அறியும் பொருள். மூன்றுவது அறிவித்தாலும் அறியாத பொருள். இம் மூன்றையும் முறையே பதி, பசு, பாசம் எனப் பெரியோர் பகருவர். இவை என்றுமுள்ள பொருள்கள்.

மூப் பொருள்களும் வெவ்வேறு பிரிவைச் சேர்ந்தனவாய் இருப்பினும், ஒன்றோடொன்று தொடர்புள்ளனவாகவே இருக்கின்றன. இத் தொடர்பை வியாபகம், வியாப்பியம், வியாத்தி என்று சைவசித்தாந்தம் கூறும். இதனை ஓர் உதாரணமூலம் விளக்கலாம். ஒரு குவளை நிரம்பப் பால்கலந்த தேநீர் இருப்பதாக வைத்துக் கொள்வோம். குவளையிலுள்ள இடம் வியாபகத்துக்கு உவமை; குவளையிலுள்ள தேநீர் வியாப்பியத்துக்கு உவமை; தேநீரில் உள்ள பால், தேயிலைச் சாரம், வெல்லம் ஆகிய மூன்றும் வியாத்திக்கு உவமை. இடத்தின் வியாபகம் தேநீருக்கும் பால் முதலிய மூன்றுக்கும் தனக்குள்ளே அடங்கியிருக்க ஆதாரமாயி

ருப்பதோடு இவற்றுள்ளும் விரவியிருக்கின்றது. இவ்வாறே பதியின் வியாபகத்துள் பசுவர்க்கமாகிய உயிர்களும், பாசவர்க்கமாகிய மும்மலங்களும் உலகமும் அடங்கியிருப்பதோடு இவ்வியாபகமும் இப் பொருட்கள் எல்லாவற்றுள்ளும் ஊடுருவி நீக்கமற நிறைந்திருக்கின்றது. தேநீராகிய வியாப்பியத்துள் பால், தேயிலைச் சாரம், வெல்லம் ஆகிய மூன்றும் முழுமையுங்கலந்து நீக்கமற நிறைந்துள்ளன. அதுபோல உயிர் வர்க்கமாகிய வியாப்பியத்துள் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் வியாத்தியாய் உள்ளன. இந்த வியாபக வியாப்பிய வியாத்தித் தொடர்பை விளக்குவதற்கே இறைவன் உலகெலாமாகி, வேறுய், உடனுமாய் நிற்பன் என்று சொல்லுவர்.

சைவ சித்தாந்தம் கடவுளுக்கு இரண்டு நிலைகள் உண்டு என்று கூறும்: ஒன்று சொருபலக்கதையும் எனப்படும் சிறப்பியல் பாகும். மற்றது தடத்தலக்கதையும் எனப் படும் பொதுவியல்பாகும். சொருபலக்கதையும் என்பது கடவுளின் உண்மைத் தன்மையைக் காண்பிப்பது. இந்த நிலையிலுள்ள கடவுளுக்குப் பெயர், குணம், குறி முதலியன ஒன்றும் இல்லை. உருவம், அருவம், அருவுரு என்னும் மூன்றும் இல்லை. மனம், வாக்கு காயம் ஆகிய மூன்றாலும் அறியப்படாத அறிவு மூத்த சித்தாயிருக்கும். இந்த நிலையிலுள்ள கடவுளைச் சித்தாந்திகள் ''பரமசிவம்'' என்றும் ''சிவம்'' என்றும் குறிப்பிடுவர். இக்கடவுளே வேதாந்த நூல்களிற் குறிப்பிடப் படும் ''பிரமம்'' ஆகும். பெயர் இல்லாத கடவுளுக்கு பெயர் கொடுக்கப்படும். இத்தகைய சொருபலக்கணத்தையுடைய சாவம், உயிர்களுடைய துன்பங்களைப் போக்கி, அவைகளுக்கு அருள் செய்தற்காக இரக்கங் கொண்டு, தானுகவே பலபடிகள் இறங்கி வந்து, பல நிலைகளிலுள்ள கடவுளரை அதிட்டித்து நின்று, அவர்கள் மூலமாக ஆணை செலுத்திப் படைத்தல் முதலிய தொழில்களைச் செய்கின்றது. இந்த நிலை கடவுளின் தடத்தலக்கணம் என்று சொல்லப்படும்.

இறைவன் படைத்தல், காத்தல், அழித்தல், மறைதல், அருளல் என்னும் ஐந்தொழில்களைச் செய்கின்றார். உயிர்களுக்கு நிலைக்களனான உடம்பு, உணர்வதற்கு வேண்டிய கருவி கரணங்கள், வாழ்க்கை நடத்துதற்கான இடங்கள், நுகர்ச்சிக்கு வேண்டிய பொருட்கள் என்னும் இவற்றையெல்லாம் இறைவன் படைக்கின்றான். இந்நான்கும் 'தனு கரண புவன போகங்கள்' எனப்படும். ஒரு செயலுக்கு முதற் காரணம், துணைக் காரணம், நிமித்த காரணம் என மூன்று காரணங்கள் உண்டு. சிப்பி சிலையை உருவாக்கினான் என்னும் போது சிலைக்கு முதற் காரணம் கல்; துணைக்காரணம் உளி முதலிய கருவிகள்; நிமித்த காரணம் சிற்பி. கடவுளின் படைப்புக்கு முதற்காரணம் மாயை; துணைக்காரணம் சக்தி; இறைவனே நிமித்த காரணம். இறைவனே முதற்காரணம் என்ற கொள்கை சைவசித்தாந்தத் தத்துவத்துக்கு உடன்பாடில்லை. உலகம் ஒடுங்குவதற்கும் தோன்றுவதற்கும் இடமாயிருப்பது மாயை என்ற சைவர் பொருள் விரிப்பர். தோன்றிய உலகங்களையும் உடம்பெடுத்த உயிர்களையும் உரிய கால எல்லை வரையிற்காப்பாற்றிக் கன்ம நுகர்ச்சிகளுக்குத் துணை செய்தலே காத்தல் எனப்படும். அழித்தல் என்பது பல பிறவிகளிற் பிறந்திறந்து உழலும் உயிர்களை இளைப்பாற வைத்தல் ஆகும். ஆகவே இதுவும் ஓர் அருட் செயலேயாம். மறைத்தல் என்பது இருவினை யொப்பு வருவித்து மலங்களை முதிர்விக்கும் அருட் செயலாம். அருளல் என்பது உயிர்களின் பக்குவ நிலையில் அவற்றின் மல பந்தத்தை ஒழித்து, வீடுபேறு எனப்படும் முத்தியை அருளுதலாகும்.

மலங்கள் உடைமை பற்றிச் சைவ சித்தாந்திகள் உயிர்களை மூவகையாகப் பிரிப்பர். ஆணவமலம் ஒன்றே உடையோர் விஞ்ஞானகலர் என்றும், ஆணவம், கன்மம் ஆகிய இரு மலங்களை உடையோர் பிரளயாகலர் என்றும், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் உடையோர் சகலர் என்றும் கூறப்படுவர். எல்லா உயிர்களும் கடவுளுக்கு அடிமைகளே. சகலர் தாம் மலங்களினாற் கட்டுற்றதை உணர மாட்டார். பிரளயாகலரும் விஞ்ஞானகலரும் தாம் கட்டுற்றிருப்பதை உணர்வர்.

உயிர், அறியும் ஆற்றல் உடையதாயினும் அறிவித்த வழியே அறியவல்லது. அது ஆணவ மலததோடு அத்துவிதமாய்க் கலந்திருக்கும் கேவல நிலையில் ஒன்றையும் அறியாது சட மாகவே கிடக்கும். ஆணவப் பிணிப்பிலிருந்து விடுவித்து உயிருக்குப் பேரின்பம் அருளுதற் பொருட்டே இறைவன் அதற்கு உடம்பு முதலியவற்றைக் கொடுக்கின்றான். உயிர் உடம்போடு கூடுவதே அதற்குப் பிறப்பு ஆகும். பிறவிப் பெருங்கடலைத் தாண்டி முத்திக்கரை சேருவதற்கு வழி உண்டு என்று சைவ சித்தாந்தம் உறுதியாய்க் கூறுகின்றது. சில ஒழுக்கங்களை மேற்கொண்டால் வினைகளை ஒழிக்கலாம். பிறவியை நிறுத்தலாம்; பேரின்பத்தை அடையலாம் என்று சித்தாந்திகள் நமக்கு நம்பிக்கை ஊட்டுகின்றனர். இதற்கு வழி இறைவனை அடைந்து வழிபடுதலேயாம். இறைவழிபாட்டிற்கு மக்கட் பிறவியே சிறந்தது. உயிர்முத்தி பெறுவதற்கென்றே மனிதப் பிறவியை இறைவன் கொடுத்துள்ளான் என்பது சித்தாந்த முடிபுகளுள் ஒன்று.

மலங்கள் அறிவித்தாலும் அறிய மாட்டாத சடப் பொருள்கள். ஆதலால் அவை அசத்து என்றும் அவித்து என்றும் சொல்லப்படும். அவை உயிரை மாசுபடுத்துவதால் மலம் என்றும், கட்டுவதனால் பாசம், பந்தம், களை, கட்டு என்றும் சொல்லப்படும். ''ஆணவம்'' என்பதற்கு அணுவின் தன்மை உடையது என்பது பொருள். மிக்க நுண்ணிய தாய் உயிரைச் சிறுமைப்படுத்துவதனால் இம்மலம் ஆணவம் எனப்படும். இது, உயிரை மறைத்திருப்பதோடு தன்னை உயிர் காணவொட்டாமலும் மறைத்துக் கொள்ளும் ''பலரைப் புணர்ந்தும் இருட்பாவைக்குன்றென்றும் கணவர்க்கும் தோன்றுத கற்பு'' என்ற அழகான உருவகத்தால் உமாபதி சிவனார் இதை விளக்குகின்றார். உயிர்கள் அனுபவிக்கும் துன்பங்களுக்கெல்லாம் இதுவே மூலகாரணமாயுள்ளது எனலாம்.

கன்மம் என்னும் வினை என்பது பொருள். அது நல்வினை, தீவினை என இருவகைப்படும். அவை மனத்திற் செய்யப்படுவனவும், வாக்கினாற் செய்யப்படுவனவும், சரீரத்தாற் செய்யபபடுவனவும் என ஒவ்வொன்றும் மூவகைப்படும். உயிரானது முற்பிறப்புக்களில் செய்த வினைத் தொகுதியின் ஒரு பகுதியை மட்டுமே இப்பிறப்பில் அனுபவிக்கின்றது. அவ்வாறு அனுபவிக்கப்படும் வினைப்பகுதிக்குப் பிராரத்தம் என்பது பெயர். அனுபவிக்கப்படாமற் பின் வரும் பிறப்புக்களில் அனுபவிப்பதன் பொருட்டு எஞ்சியிருக்கும் பழவினைக்குச் சஞ்சிதம் என்பது பெயர். பிராரத்த வினையை இப் பிறப்பில் அனுபவிக்கும் போது புதிதாகச் சேரும் வினைக்கு ஆகாமியம் என்பது பெயர். உயிர், உடம்போடு கூடியவழியே இருவினையும் உண்டாகின்றமையாற் கன்மமலம் ஆகந்துக மலம் எனப்படும். உயிர் அநாதியாதலால் அதன் வினையாகிய கன்மமும் அநாதியாம்.

சைவ சித்தாந்திகள் மாயை அநாதியேயுள்ள நித்தியப் பொருள் என்று விளக்குவர். மாயா காரியங்களான உடம்பும் கருவி கரணங்களும் உயிர்களின் அறிவை ஓரளவு விளக்குவதால் இதனை விளக்குப் போன்றது என்பர் உமாபதி சிவனார். ''விடிவாமளவும் வளக்கினை மாயை வடிவாதி கன்மத்து வந்து''; கன்மத்தைப் போலவே மாயையும் உயிரை வந்தடைவதால் ஆகந்துக மலம் எனப்படும்.

மூலமலமாகிய ஆணவம் உயிரோடு இயைந்திருக்கும் வரையும் பிறப்பு உண்டு பிறப்புண்டானற் கன்மமும் உண்டாம்; மாயா மலமும் உண்டாம்; பிறப்பை ஒழிப்பதற்கு மலங்கள் மூன்றையும் அறுத்தல் வேண்டும். இதற்குச் சைவ சித்தாந்தம் வழிகளைக் கூறுகின்றது. முதலில் அறுவது மாயா மலம்; இரண்டாவதாக அறுவது கன்மமலம். இறுதியில் அறுவது ஆணவமலம். முதற்படியாகப் பெற வேண்டியது தீட்சை. ஆணவ மலம் இறைவனுடைய ஞானசக்தியால் ஒழிக்கப்படும். வாதனை பற்றி நிகழும் ஆகாமிய கன்மமும் இந்த ஞானசக்தியினாலே ஒழிக்கப்படும். சஞ்சிதகன்மம் கிரியா சக்தியினால் ஒழிக்கப்படும் பிராரத்தகன்மம் அனுபவித்தே ஒழித்தற்குரியது. இந்த மலங்கள் அறுவதற்காக உயிர், படிமுறையாக ஏறிச் செல்வதற்குச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு மார்க்கங்களைச் சைவ நூல்கள் கூறுகின்றன. மனிதப்பிறவி எடுத்த உயிர், மேற்கொள்ள வேண்டிய ஒழுக்கத்தை 'இறைபணி நிற்றல்' என்று பொதுவாகக் கூறலாம்.

அகப்பூசை, புறப்பூசை, தியானம், திருக் கோயில் வழிபாடு, அடியார் வழிபாடு சமூகத் தொண்டு ஆகிய இவை எல்லாம் 'இறைபணி நிற்றல்' என்பதில் அடங்கும். ஏழைகள், நோயாளிகள், அங்கவீனர்கள் ஆகியோருக்கு உதவி செய்யும் போதும், வெள்ள நிவாரணம், பஞ்ச நிவாரணம் முதலிய தொண்டுகள் செய்யும் போதும், கீழ் நிலையிலுள்ள ஓர் உயிருக்குத் தான் மேல் நிலையிலிருந்து இறங்கி, இரங்கி உதவி செய்வதாக எண்ணுகின்ற மனப்பான்மை எள்ளளவேனும் இருத்தலாகாது. இறைவன் கொடுத்த பொருளைக் கொண்டு, இறைவன் கட்டளையிட்டு அறிவுறுத்தும் இவ்வழியில் இறைவனுடைய கருவியால் நின்று இதை செய்யும்பேறு பெற்றேன் என்ற உணர்வோடே ஒருவர் இப்பணிகளைச் செய்தல் வேண்டும். இவ்வாறு செய்யும் போது இவ்வுயிரின் பக்குவம் படிப்படியாக முதிர்ச்சி பெறும். இப்படிகளை இருவினை ஒப்பு, மலபரிபாகம் சக்தி நிபாதம் என்பது சித்தாந்த முடிபு.

முத்தி என்பதற்கு விடுவதலை என்பது பொருள். உயிரானது பிறப்பு, இறப்பு என்னும் தொடர்ச்சியிலிருந்து விடுபட்டு, இறைவன் திருவடியில் இரண்டறக் கலந்து, அவனுடைய ஐந்தொழிற்களிற் கலவாது, என்றென்றும் பேரின்பம் அனுபவித்துக் கொண்டிருக்கும் நிலையே முத்தி நிலை என்று சைவ சித்தாந்திகள் கூறுவர். முத்தி நிலையிலும் இறைவன் தலைவனாகவும் உயிர் அவனது அடிமையாகவும் இருக்கும் என்பது சைவ சித்தாந்தம் கூறும் உண்மைகளுள் ஒன்று. இறைவனும் உயிரும் இரண்டறக் கலந்து ஒன்றாய் நிற்பினும் உயிரின் அழியாத நிலை இங்கும் வற்புறுத்தப்படுகிறது. இதனை 'தாடலை போற் கூடியவை தானிகழா வேற்றின்பக் கூடலை நீ ஏகமெனக்கொள்' என்று திருவருட்பயன் கூறுகின்றது. தாள், தலை என்னும் இரு சொற்களும் தாடலை எனச் சேர்ந்தாற் போல், சிவமும் உயிரும் பிரிப்பின்றி நிற்கும் நிலை அத்துவிதம்.

இந்து மதம் கூறும் இக்கால விஞ்ஞானம்

பி. ஆர். செல்வகுமார், உயிரியல் விஞ்ஞானம், இறுதியாண்டு.

விஞ்ஞானிகளுக்கு மதத்தில் நம்பிக்கை இராது என்பது இன்றைய பகுத்தறிவு வாதிகளின் பேச்சு. ஆனால் சமீபத்தில் உலகப் புகழ் பெற்று விளங்கிய ஐன்ஸ்டீன் என்ன சொல்லுகிறார்? 'மதத்தை ஒட்டிச் செல்லாத விஞ்ஞானம், நடக்க முடியாத நொண்டியைப் போல, விஞ்ஞான ரீதியாக அமையாத மதம் பார்க்க முடியாத குருடனைப்போல" என்று சொல்லுகிறார். மருத்துவக் கலையில் நோபல் பரிசு பெற்றவர் அலெக்ஸ்கோரல் என்ன சொல்லுகிறார்? மனிதனின் புதிய கண்டு பிடிப்புக்கள் அவனுடைய நல்வாழ்வுக்கு வகை செய்திருக்கலாம். ஆனால் அவனுடைய உறுதியான வாழ்க்கை உறுதியான உடலைப் போல, சீரான உள்ளப்பாங்குடன் அமைய வேண்டுமானால் அவன் மதம் காட்டும் வழியையும் ஒட்டி நடக்க வேண்டும் என்று கூறுகின்றார். இஹா உபநிடதம் இதைத்தான் சொல்கிறது. மனிதனுக்கு மெய்ஞ்ஞான அறிவு (வித்தியா) உலகியல் சார்ந்த அறிவு (அவித்யா) இரண்டுமே தேவை. கடவுளின் அருளை உணர்ந்து வாழ்வில் மேன்மையை அடைய வித்தியா உதவி புரியும். வாழ்க்கையை எல்லா வசதிகளுடனும் அமைத்துக் கொள்ள அவித்யா உதவுகிறது என்று அது கூறுகிறது.

உலகத்தில் எந்தப் பொருளும் ஒரு குறிப்பிட்ட நியதியிலேயே இயங்குகிறது. அதேபோல எந்தக் காரியமும் அதற்குரிய மறுபலனைத் தராமல் போவதில்லை. இந்த இரண்டையும் மனிதன் விஞ்ஞான சோதனைகளின் மூலம் தெரிந்து கொண்டான். இந்து மதம் அன்று முதல் நமக்கு மெய்ஞ்ஞான அறிவாகப் புகட்டி வந்திருக்கிறது. ஒவ்வொரு நிகழ்ச்சியும் அதற்கு முன்பே அமைந்து விட்ட ஒரு காரணத்தை ஒட்டியே நடக்கிறது. இந்த நிகழ்ச்சியில் எதைச் செய்கிறோமோ, அதைப் பொறுத்தே அடுத்த நிகழ்ச்சி அமைகிறது என்று விஞ்ஞானம் கூறுகிறது. இந்து மத வேதாந்தம் இதையே முற்பிறவியில் செய்த நல்வினைகளை ஒட்டியே இந்தப் பிறவியின் நல்வாழ்வு அமைகின்றது இந்தப் பிறவியில் செய்யும் நல்ல காரியங்களை ஒட்டியே அடுத்த பிறவியில் நமக்கு நன்மைகள் கிடைக்கும் என்று கூறுகிறது. இது Law of Karma அல்லது கர்மவிதி என்று சொல்வார்கள். இது வேறு மதங்களில் இல்லை.

மனிதர்களது படைப்புப் பற்றி மதங்கள் கூறும் கொள்கைகளில் கடவுள் பூமண்டலத்தைச் சிருஷ்டித்தார் என்றும் அப்படித் தோன்றிய ஆறாவது நாளிலே மனிதனும் கடவுளால் உற்பத்தி செய்யப்பட்டான் என்றும் சில மதங்கள் கூறுகின்றன ஆனால் இந்து மதம் கூறும் தத்துவம் அதுவல்ல. கடவுளின் விம்பமாக அவரிடமிருந்து தோன்றியதே உலகம். அதன் உயிர்கள் அனைத்தும் அந்தக் கடவுளின் வடிவமே. படிப்படியாகத்தான் நீரில் வாழ்ந்து, நிலத்தில் வாழ்ந்து, மிருகமாக வாழ்ந்து மனிதனாக அவன் உருவானான். இப்படி அவனைப் படிப்படியாக வளர்ச்சி பெற வைத்தே கடவுள் அவனை முன்னேறச் செய்தார் என்று கூறுகிறது இந்து மதம். இதுவே விஞ்ஞான ரீதியிலான கூற்றிற்கு அமைவானதாகக் காணப்படுகின்றது. எந்தப் பொருளும் படிப்படியாகத்தான் ஒரு நிலையில் இருந்து இன்னோர் நிலைக்கு மாறி அதன் மூலம் மேம்பாடான உருவத்தை அடைகிறது என்பதே விஞ்ஞான தத்துவமாகும். உலகிலே தோன்றிய மனிதர்களை இந்து மதம் வகைகளாகப் பிரித்தது. விஞ்ஞானிகளுக்கு இது பெரும் வியப்பாகவே அமைந்திருக்கலாம். மனிதனின் காலப்போக்கை ஆராய்பவர்கள் கற்கால மனிதனிலிருந்து இக்கால மனிதன் வரை தரம் பிரித்துக் கூறக்கூடும். ஆயினும் அவர்களால் அந்த மனிதர்களைக் குணங்களின்

அடிப்படையில் வகைப்படுத்த இயலாது. மருத்துவ நிபுணர்கள் உடற்கூற்றை ஆராய்கிறார்கள். ஆனால் அவர்களால் உறுப்புக்களைப் பொதுவாக ஆண், பெண் என்று இரண்டு பிரிக்க முடியுமே தவிர, வேறு விதமாகச் சுபாவத்தை ஒட்டிப் பிரித்துச் சொல்ல முடியாது.

ஆனால், இந்து மதம் அப்படி விட்டுவிடவில்லை. மனித இனத்தை மற்ற உயிரினங்களுடன் ஒப்பிடுகின்றது. அவனுடைய குணங்களின் அடிப்படையில் அவனை மற்ற உயிரினங்களுடைய பண்புகளுடன் ஒப்பிடுகின்றது. மனிதனின் உடலைப் பொறுத்தமட்டில் அல்லாமல் உள்ளப்பாங்கை வைத்தும் அவனை வெவ்வேறு நிலைகளில் பிரித்துக் காட்டுகிறது. இது எவ்வாறு அமைகின்றது எனப் பார்ப்போம். உலகத்தில் மண்ணும், கற்களும் சடப் பொருட்களாக அமைகின்றன. அவை தம்மைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றிக் கவலைப் படுவதில்லை மழை, வெயில், காற்று போன்ற இயற்கையின் சக்திகளே அவற்றைச் சிறிதளவு பாதிக்கின்றன. இவற்றுக்குத் தம்மைச் சுற்றியுள்ள சூழ்நிலைக்கு ஏற்றவாறு தம்மை மாற்றிக் கொள்ளத் தெரியாது. இயற்கையை ஒட்டி அவை எந்த நேரமும் அசையாது வீழ்ந்து கிடக்கின்றன. இதே போல் தம்மைச் சுற்றியுள்ள சமூகம், உலக அமைப்பு, உயிர்கள் எதைப் பற்றியும் சிறிதும் கவலைப்படாமல் இருந்த இடத்திலேயே அசையாமல் விழுந்து கிடக்கும் மனிதர்களும் உண்டு. இவர்கள் கற்கால மனிதர்கள் (Stone age men) எனப் படுகிறார்கள். இதற்கு அடுத்த படியாக உயர்ந்த உயிரினம் தாவரங்கள். இவை ஒரே இடத்தில் இருந்தாலும் உயரமாகவும், அகலமாகவும் வளர்ந்து தமக்கென்று ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்கின்றன. தமது நன்மைக்காக நீரையும், காற்றையும் ஒளியையும் நாடுகின்றன. பிறர் தம்மை அணுகாத வாறும் ஓரளவு தடுக்க முயலுகின்றன. இதே போல முழுவதும் தனக்காக வாழும் மனிதர்களும் இருக்கின்றார்கள். இப்படி முழுவதும் சுயநலம் என்ற ஒரே நோக்கத்துடன் வாழ்பவர்களைத் தாவர இன மனிதர்கள் (Plant men) என்று வகைப்படுத்தினார்கள். மிருகங்கள் தாவர இனத்தை விட உயர்ந்தவை. அவை ஓரளவு உணர்ச்சிகளுக்குக் கட்டுப்பட்டு வாழ்கின்றன. சூழ்நிலைக்கு ஏற்ப வாழ நினைத்து அவை இடம் விட்டு இடம் பெயர்ந்து செல்லுகின்றன. பசி வந்தாலும் அவை தமது இனத்தைச் சேர்ந்த உயிர்களைக் கொல்லுவதில்லை. தமக்கு பிறக்கும் குட்டிகளை கண்ணெனப் பாதுகாக்கின்றன. சில சமயங்களில் நன்றி உணர்வுடனும், விசுவாசத்துடனும் வாழ்வதுண்டு. ஆனால் இவற்றிற்கு உயர்ந்த உள்ளப்பாங்கு கிடையாது. சாதாரண உணர்ச்சிகளே அதிகமாதலால் அதற்காக எதையும் செய்து தம்மைத் திருப்தி செய்து கொள்ளும். இதைப் போல உயிர்வாழும் மனிதர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தமது உடைமைகளையும், குடும்பத்தையும் காத்துக் கொள்ளப் பிறரை அழிக்கவும் துணிவார்கள். தமது பசி, கோபம், தாகம், காமம் போன்ற உணர்ச்சிகளைத் தணித்துக் கொள்ள எதையும் செய்ய முற்படுவார்கள். உணர்ச்சி அடிப்படையைத் தவிர இவர்களுக்கு பண்பின் நயம் முக்கியமாகத் தெரிவதில்லை. இப்படிப் பட்டவர்களை மிருக மனிதர்கள் (Animal men) என்றும் தரம் பிரித்தார்கள்.

மனித உயிர் மேற்குறிப்பிடப்பட்ட மூன்று வகை உயிரினங்களைக் காட்டிலும் மேன்மையான படைப்பாகும். ஏனென்றால் அவனுக்கு இந்த உயிர் உள்ள உடம்பைத்தவிர உள்ளம் என்று ஒன்று இருக்கின்றது. அவனுடைய பகுத்தறிவு அவனுக்கு நல்லவை, தீயவை எவை என்று அடையாளம் காட்டுகிறது, உடம்பைப் பற்றிய உணர்வுகள் மட்டும் இன்றி உள்ளத்தைப் பொறுத்தவரை நல்ல இயல்புகளைப் பெறவும் வழிகாட்டுகிறது. இந்த ஆரம்ப நிலையில் உள்ளவர்கள் சாதாரண மனிதர்கள் (Ordinary men). மேலே குறிப்பிட்ட மூன்று வகையிலும் அவர்கள் உட்படுகின்றார்கள். இந்தச் சாதாரண மனிதர்களே வாழும் விதத்தைப் பொறுத்தவரையில் சடமாகவும், தாவரமாகவும், மிருகமாகவும் அமைந்து விடுகின்றார்கள். இப்படிப்பட்டவர்களைச் சற்று உயர்த்தி மேலே உயர்ந்த நிலைக்கு நமது மதம் அழைத்துச் செல்கிறது. அந்த வகையில் அது விஞ்ஞான சாதனையை விட ஒருபடி மேலே போகின்றது. சாதாரண வாழ்க்கை வசதிகள் மூலம் இந்த மூன்று

வகை மனிதர்களும் வாழ்க்கையின் அடிப் படையான நன்மைகளைப் பெறமுடியும். ஆனால் மதமோ ஆன்மீகப் பாதையின் மூலம் அவர் களை அதைவிட உயர்ந்த நிலைக்கு அழைத் துச் செல்கிறது. அதாவது எல்லோருக்கும் உடம்பு, மனம், புத்தி ஆகியவை மூன்றும் இருக் கின்றன. ஆனால் சாதாரண உலக வாழ்க்கையில் இருந்து சற்று உயர்ந்த, மேலான உணர்வு களைப் பெற இவற்றை ஓர் உணர்வு தூண்டி விட வேண்டியிருக்கிறது. அதுதான் ஆன்மீக உணர்ச்சியின் விழிப்பு. இது தன்னுலேயே வந்து விடுவதில்லை. இறைவனைப் பற்றிய உணர்வு அல்லது பரம்பொருளைப் பற்றிய உணர்வு வந்ததும் தான் இந்து விழிப்பு ஏற் படுகின்றது. சாதாரண நிலையில் குளிர்சாத னப்பெட்டி குளிர்ச்சி தருவதில்லை. மின்விசிறி காற்றைச் சுழற்றி விடுவதில்லை. ஆனால் மின் சாரம் அவற்றுக்குச் செலுத்தப்பட்டதும் அவை இயங்கத் தொடங்குகின்றன. அதே போல ஆன்மீக விழிப்பு ஏற்பட்டதும் மனி தர்களது உடம்பு, மனம், புத்தி ஆகிய மூன்று சாதனங்களையும் அவற்றின் சாதாரண இயக் கத்தைக் காட்டிலும் மேம்பட்ட நிலைக்குக் கொண்டு போகக் கூடிய உயர்வை அடைந்து விடுகின்றன. அவன் தன்னுள்ளேயே இறைவ னைக் காண்கின்றன். எல்லாம் ஒன்றே - எல்லாம் இறைவனே என்ற உயர்ந்த உண் மையை உணர்கின்றன. இப்படி மனிதனை உயர்த்துவது மதம். இது காட்டும் மெய்ஞ் ஞானப் பாதையானது, தத்துவ அடிப்படை யில் விஞ்ஞானத்தைக் காட்டிலும் உயர்ந் தோங்குகின்றது. மனிதனை வேறுபிரித்து நெறிப்படுத்தக் கூடிய வகையில் வழிப்படுத்தி மனிதனை உயர்ந்த நிலைக்குக்கொண்டுபோகும். ஞான மார்க்கத்தை இந்து மதம் நமக்கு எளிமையாகக் கற்றுக் கொடுக்கின்றது. உல கம் நமக்கு கொடுக்கக் கூடியதை விஞ்ஞானம் கண்டு பிடித்துக் காட்டுகிறது. உலகத்துக்கு நாம் கொடுக்கக் கூடியதை மெய்ஞ்ஞானம் நமக்கு உணர்த்தி அது நமக்குள்ளேயே இருப் பதையும் எடுத்துக் காட்டுகிறது.

எந்தக் கொள்கையையும், ஒவ்வொரு விஞ்ஞானியும் தனக்குரிய புதிய கோணத்தில் பார்த்து அதற்கு பொருள் கூறும் விதமாக அமைப்பதுவும் இயல்பு. அதனால் தான் நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டவை இன்று மாற்றமடைந்து வேறு விதமாக உருவெடுக் கின்றது. இந்து மதத்தின் ஞானிகளும் இது போன்ற விஞ்ஞானிகளே. அதனால் தான் சிலர் கடவுளை வெளியே ஒரு வடிவமாக வைத்துத் துதித்தார்கள். வேறு சிலர் கடவுளை நமக்குள்ளேயே தேடிக் காணும் பாதையை யும் பக்குவமாகக் காண்பித்தார்கள். கடவுளைப் பிரார்த்திக்க வெவ்வேறு ஒலி வடிவங்களை யும் அமைத்துத் தந்தார்கள். மௌனத்தில் மூழ்கியே இறைவனை உணர்ந்தும் கொள்ள லாம் என்றும் கற்றுக் கொடுத்தார்கள்.

ஆலயங்களுக்கு வழிபடச் செல்லும் மனி தர்களில் அங்கு நடைபெறும் தீபாராதனை கள், அர்ச்சனைகள் என்பவைகளால் ஏற்படும் உடல் உள ரீதியிலான நன்மைகளை நோக்கி னால் அதில் அடங்கியுள்ள விஞ்ஞானப் பின் னணியை நாம் காணலாம். அபிஷேகத்தைத் தொடர்ந்து தீபாராதனை செய்கின்ற வேளை யில் காற்று மண்டலத்தில் என்னென்ன மாறு தல் ஏற்படுகின்றன. அப்போது காற்று மண் டலத்தில் ஒரு மின் தேக்கியை வைத்து மின் னூட்டத்தை (charge) அளந்தால் தூபம், தீபம் காட்டும் மாறுபாட்டால் மின்னூட்டம் மாறுபடுவது தெரியும். எதிர் மின்னூட்ட மும், ஈரப்பதமும் உள்ள காற்று மண்டலம் கருப்பக் கிரகத்துள் அமைந்துள்ளது. அந்தக் காற்று மண்டலத்துள் 'ஓம்' என்ற பிரணவ மந்திரஒலியுடன் அர்ச்சனைசெய்யும்போது அந்த ஒலி விக்கிரகத்தில் பட்டு எதிரொலிக்கிறது. இதனால் அந்தக் காற்று மண்டலத்தில் பெரும் அதிர்வும், முத்ததிர்வும் (Maximum Amplitude at Resonance) கிடைக்கிறது. இந்நிலையில் ஏற் படும் காற்றுவீச்சு எதிரே உள்ள பக்தர்களின் மேல் விழும்போது. அவர்களுக்கு உள்ளவள மும், உடல்வளமும் கிடைக்கிறது. இந்த விஞ்ஞான உண்மையை அன்றே அறிந்திருந்த நமது முன்னோர்கள் இத்தகைய ஆலயங்களை மலைகள் மீதும், கடற்கரைகளிலும், மூலிகை கள் அடர்ந்த சோலைப் பகுதிகளிலும், நதிக் கரையோரங்களிலும் அமைத்திருக்கின்றார் கள். இந்த இடங்களில் உடல், உள்ளத் தூய் மைகளும், நலங்களும் பெறுவதற்கான சூழ் நிலைகளும் உருவாக்கப் பட்டிருக்கிறது. ஆலயங் களுக்கு செல்பவர்களுக்கு மேலே சொன்ன

பலன்கள் தவறுமல் கிடைப்பதற்காகத்தான் ஆலயங்களில் ஆறுகால அபிஷேகங்கள் நடத்தப்பட வேண்டும் என்கிறார்கள். தொடர்ந்து நடைபெறுகின்ற அர்ச்சனைகளினதும் ஆராதனைகளினதும் விளைவுகளால் கருப்பக் கிரகத்தில் உள்ள விக்கிரகத்தில் தொடர்ந்து அதிர்வுகள் நிலைத்திருக்கும். ஆலயத்திலுள்ள கருப்பக் கிரகத்தின் அமைப்பு இதை சேமித்துப் பாதுகாக்கக் கூடியதாக உள்ளது! மூல விக்கிரகம் ஒலி அலைகளின் எதிரொலியை எழுப்ப வல்ல விதத்தில் அமைந்துள்ளது. இதற்கு அடியில் பொருத்தப்பட்டுள்ள இயந்திரத் தகடு சேமிப்புக் கலமாகவும், காற்று மண்டலம் அந்தச் சக்தியைப் பெற்றுக் கடத்தும் முறையிலும் அமைந்துள்ளது.

இதன் முழ்ப்பலனும் வழிபட வரும் பக்தர்களுக்குப் போய்ச் சேருகின்றது. அவர்கள் இவற்றைப் பெறுபவர்களாக விளங்குகின்றார்கள். கருப்பக் கிரகத்தில் உள்ள காற்று மண்டலத்தில் பிராணவாயு அல்லது ஒட்சிசனுடைய அழுத்தம் அதிகரிக்கிறது. அதே வேளையில் அந்தக் காற்றுமண்டலம் ஒட்சிசன் மூலக் கூறுகளை அதிகமாகப் பெறுவதால் பக்தர்களின் உடல் நலம் சீர்பெற உதவும். ஒலியின் திசைவேகம் ஈரப்பதத்தில் அதிகமாக இருக்கும். ஆகையால் எப்போதும் அபிஷேக நீரினால் ஈரமாகவே உள்ள கருப்பக் கிரகம் இந்த நிலையை ஊக்குவிக்கும் விதமாக அமைத்துள்ளது.

பண்டைய காலம் தொட்டு இன்று வரை இந்து மத வழிபாட்டு முறைகளிலே யாகம் முக்கிய ஒரு இடத்தை வகிக்கிறது. பண்டைய காலங்களிலே ஆற்றங்கரைகளிலே பெரிய பந்தல் போட்டு மக்கள் இதில் கலந்து கொண்டார்கள். இதில் பெரிய கூட்டுறவுத் தத்துவம் உண்டு. ஒரு சிலர் பந்தல் போட வருவார்கள். வேறுசிலர் யாகசாலையை உருவாக்குவார்கள். வேறு சிலர் யாகத்துக்கான பொருட்களைத் தயார் செய்வார்கள். சிறந்த ஞானமும் தகுதியும் உடைய பண்டிதர்கள் மட்டுமே யாகத்தை நடத்துவார்கள். ஒரு சமூகத்தில் உள்ள பெரும்பாலும் எல்லா மட்டங்களிலுள்ள எல்லாமக்களும் கலந்து கொள்ளக் கூடிய தன்மை இந்து மத பண்டைய சமூக அமைப்பில் உருவாக்கப் பட்டிருந்தது. இது பலன்தரும் பக்தியுடன் கூடிய உயர்ந்த கூட்டுறவுத் தன்மையைப் பிரதிபலிக்கக் கூடியதாக அமைந்திருந்தது.

இந்து மதத்தில் காணப்படும் அனைத்து அம்சங்களும் விஞ்ஞானக் கருத்துக்களுடன் பின்னிப் பிணைந்தவையாகவே காணப்படுகின்றன. இவற்றை விளங்காத தன்மையாலும் தவறுகப் புரிந்து கொள்வதாலும் நடைமுறையில் இன்று போலிகளும் அஞ்ஞானமும் கலந்துவிட்டன. இதற்கு விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் ஒருங்கே அமையப் பெற்ற இந்து மதம் பொறுப்பல்ல என்பதை இந்து சமூகம் உணர வேண்டும்.

இந்து மதத்தில் கிரியைகள் பற்றி ஒரு கண்ணோட்டம்

எஸ் பகீரதன், பௌதிக விஞ்ஞானம் 2ம் வருடம்

கிரியை எனும்போது செயலாற்றுதல் அல்லது தொழிலாற்றுதல் அல்லது வினையாற்றுதல் எனப் பொருள்படும். அது சமயத்துடன் தொடர்பு கொள்ளும் பொழுது சடங்குக் கொள்கை என அழைக்கப்படும். வட சொல்லாகிய ''கிறு'' என்ற வினையடியிலிருந்து கிரியை எனத் தோற்றம் பெற்றது. சமயம் தொழிலைக் கிரியா மார்க்கத்துடன் தொடர்புறுத்துகின்றது.

சரியை மார்க்கம், கிரியை மார்க்கம், யோக மார்க்கம், ஞான மார்க்கம், பக்தி மார்க்கம், தியான மார்க்கம் என ஆறு வகை மார்க்கங்கள் உண்டு இந்த ஆறுவகை மார்க்கங்களையும் இரு பிரிவினுள் அடக்கலாம். அறிவில் முதிர்ந்தவர்களுக்கு யோக, தியான மார்க்கங்கள் உகந்தன. ஏனையவர்களுக்கு அது பொருந்தாது. இந்த இரண்டையுமே ஞான மார்க்கத்தில் அடக்கலாம். கிரியை, பக்தி மார்க்கங்களை கிரியை மார்க்கத்தினுள் அடக்கலாம். கிரியை மார்க்கமானது சமயத் துறையினை உள்ளடக்கியது. சமயம் நம்பிக்கையினை அடிப்படையாகக் கொண்டது. நம்பிக்கை அற்றவர்களுக்குச் சமயமும் இல்லை கிரியையும் இல்லை எனலாம்.

மனிதன் இவ்வாழ்க்கையினை நெறிப்படுத்தவும், சீர்படுத்தவும் கிரிகைகள் வழி வகுக்கின்றன அவன் வாழ்க்கையில், அறிவுவழி மூலமும் செயல்வழி மூலமும் முன்னேற முடிகின்றது. அறிவுவழி மார்க்கம் சைவ சித்தாந்தமாகவும் செயல்வழி மார்க்கம் கோயிற் கிரியை நெறியாகவும் வகுக்கப்பட்டுள்ளது. வேதமும் ஆகமமும் கிரியை நெறிபற்றிப் பல்வேறு விதமான செயல்களையும், பொருட்களையும் கொண்டுள்ளன. வேதங்களில் கிரியை பற்றி அறிய முடிகின்றது. கிரியையின்றி வேதமில்லை. இவை மரபு வழிக்குட்பட்ட வேதாகமக் கிரியைகள் ஆகும். விஞ்ஞான அறிவினால் கிரியை முறைகள் நடைமுறை வாழ்விலே குறைந்து வருகின்றன, எனினும் அடியோடு மாறவில்லை எனலாம்.

இந்துக்களின் வாழ்க்கையோடு கிரியைகள், சடங்குகள் என்பன பிணைக்கப்பட்டுள்ளன. கிரியைகளை கோயிற்கிரியை, வீட்டுக்கிரியை என இரு வகைப்படுத்தலாம். மேலும் கோயிற்கிரியைகளை நித்திய கிரியை, நைமித்திய கிரியை எனவும் வீட்டுக்கிரியையினை பூர்வகிரியை, அபரக்கிரியை எனவும் பிரிக்கலாம். இக்கிரியைகள் எல்லாம் ஆன்மீக நாடேற்றத்தினை அடிப்படையாகக் கொண்டவையாகும். கோவில்கள் பாரதக் கிரியைக்காகவே உருவாக்கப்பட்டவை. இங்கு சமூக நலன் கருதியே பூசைகள் நடைபெறுகின்றன. கோவில்களில் தினந்தோறும் உசங்காலம், காலாசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை இரண்டாங்காலம், அர்த்த சாமம் ஆகிய ஆறு பூசைகளும் நித்திய கிரியைகள் ஆகும். பெரிய கோவில்களில் பன்னிரண்டு காலப் பூசை நடைபெறுவதுமுண்டு. சில ஆலயங்களில் விசேட தினங்களில் மாத்திரம் வழிபாடு இடம்பெறும் இத்தினங்களில் விசேட அபிஷேகமும் ஆராதனைகளும் வழிபாடுகளும் நடைபெறும். பிரதோஷம் திருத்திகை, சதுர்த்தி, ஆனி உத்தரம், ஆடிப்பூரம், ஆவணி மூலம், நவராத்திரி, கார்த்திகை, சோமவாரம், தைச்சங்கராந்தி, தைப்பூசம், மாசிமகம், மகாமகம், பங்குனி உத்தரம், வைகாசி விசாகம் போன்ற விசேட தினங்களில் செய்யப்படும் கிரியைகள் நைமித்திய கிரியை எனப்படும். நித்திய கிரியைகளும் நைமித்திய கிரியைகளும் பலன் கருதிச் செய்யப்படும் பொழுது அவை காமிய கிரியைகள் ஆகின்றன. பொதுவாக ஆலயங்களில் சங்காபிஷேகம், விக்னேஸ்வரர் பூசை

பண்ணியாகாவர்சனம், பஞ்சகௌவியம், பஞ் சாமிர்த பூசை முதலியவற்றோடு அலங்காரம், அபிடேகம், நைவேத்தியம், தீபாராதனை, அர்ச்சனை, தோத்திரம் போன்ற கிரியைகளும் நிகழ்கின்றன.

சமூக வாழ்க்கையே கிரியையின் அடிப் படையாகும். துதிபாடுதல் முறையும் கிரியை யில் குறிப்பிடப்படுகின்றது. தேவாரம் திருவா சகம் பாடும் முறை இவ்வாறே வெளிவந்தன. கிரியை முறைகள் இல்லறத்தார்னுக்கு மட்டுமே சொல்லப்படுகின்றன. வாழ்வினை உயர்த்து வதும் தாழ்த்துவதும் அவனவன் செய்த செயலே ஆகும். ஈந்து சமயம் தழைத் தோங்கிய காலத்தில் அவற்றிற்கேற்ப வழி பாட்டு முறையும் அதாவது பல்வகைக் கிரியை களும் அக்கால வழிபாட்டில் இடம் பெற்றிருக் கலாம். வேதத்தில் அரைவாசி செயல்வழிக்கு முக்கியம் கொடுக்கின்றது. இவை பழமை யினைப் பேணுவன. வேதக்கிரியையின் முக்கிய நோக்கம் தானம் கொடுப்பதாகும். கொடுத் துப் பெறுவதே முக்கிய வழிபாடாகும். இருக்கு வேதப் பாடல்களில் பெரும் பாலானவை தெய்வத்தினை விழித்து "நான் நெய், தேன், பால் முதலியவற்றினை உனக் குத் தருகிறேன். நீர் பெருவீரர்களான புத்திரர் களையும் மாடு முதலிய செல்வங்களையும் நோயற்ற நீண்ட வாழ்வினையும் தா" என வேண்டும் வகையில் அமைந்திருப்பது குறிப் பிடத்தக்கது. இவ்வாறு இருக்குவேதப்பாடல் கள் பயனை அவாவிச் செய்யப்படும் நிலை யினையே தெளிவுறுத்துகின்றது.

இந்திரன், அக்கினி, வர்ணன், விஷ்ணு, உருத்திரன் முதலிய தெய்வங்களை விளித்துப் பாடப்பட்ட பாடல்கள் இருக்கு வேதத்தில் அதிகமுண்டு. இத்தெய்வங்கள் எல்லாம் விளித்தழைக்கப் படுகின்றன. இவ்வாறு கூவி யழைத்தல் ஒரு கிரியையாக அமைந்து விடும். எண் ஆகமங்களும் ஏனைய துணைநூல்களும் கிரியை வழிபாட்டினுல் ஏற்படும் பயன்கள் பற்றி எடுத்தியம்புகின்றன. அக்கினி, வீட் டிற்கும் நாட்டு மக்களுக்கும் தலைவனாக விளங்குகிறான். இவன் மக்களையும் தேவர் களையும் தொடுக்கும் பிணைப்பாகவுள்ளான். இவ்வாறு முக்கியம் பெறும் அக்கினியைப் பல முறை விழிந்து நாம் அளிக்கின்ற அவியினை ஏற்று ஏனைய தேவர்களிடம் சேர்ப்பிப்பாய் எனவும் அவர்களை யாகத்திற்கு அழைத்து வா எனக் கேட்பவன் பலவாறு வேண்டுவதை இருக்குவேதப்பாடல்கள் எடுத்தியம்புகின்றன. துதிப்பாடல்களும் பிரார்த்தனைகளும் இருக்கு வேதத்தில் முக்கியம் பெறுகின்றன. செல்வம் பெருக மக்களின் கிரியை முறைகளும் அதிகரிக் கத் தொடங்கின.

தேவர்களுக்கு யாகங்களில் அவிகொடுக் கும் முறையினை யசூர் வேதம் விளங்கு கின்றது. தீயினை வளர்த்து அத்தீயினுள் பலபொருட்களை முறையாகச் சொரியும் முறைபற்றியும் அக்கினி வளர்ப்பதற்கு வேண் டிய குண்டங்கள் யாகவேத முதலியவற்றை அமைக்கும் முறையினையும் யசூர் வேதம் விளக்குகின்றது. அத்தோடு பலவகையாகங் களையும் யசூர் வேதம் குறிப்பிடுகின்றது. வேதகாலங்களில் ஓதப்பட்ட மந்திரங்கள் பண்ணுடன் அமைந்திருப்பதைக் காண்கிறோம். வழிபாடுகளில் சாம வேதம் இசைப்பது அன்றுட கிரிகைக்காக இடம் பெறுகிறது. நைமித்திய கிரிகைகளில் சாம வேத இசைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது இசை யின் மூலம் மனிதனையும் கடவுளையும் இணைக்க முடிகின்றது.

அதர்வ வேதத்தில் மாந்திரிகம் பேரிடம் பெறுகிறது. நன்மை தீமை ஆகிய இரு வினைகளை விளைவிக்கும் கிரிகைகளைப் பற்றி இருக்கு வேதப் பாடல்கள் எடுத் தியம்புகின்றன. தானும் தன்னைச் சார்ந்த உறவினர்களும் நன்மை பெறுவதற்காகச் செய்யப்படும் கிரியை 'பௌஷ்டிகர்ளி' எனப் பெயர் பெறுகின்றது. தன் பகைவன் வேரு டன் அழிய மேற்கொள்ளும் கிரிகை 'அபிசாரணி' எனப்படும் அதர்வவேதப்பாடல் கள் மந்திர சக்தி வாய்ந்தவை. இச் சக்தி ஆக்கல், அழித்தல் என்னும் இரு தொழில் களையும் செய்யும்.

மேற்கூறப்பட்டவற்றில் இருந்து இந்து சமயக் கிரியைகள் ஆங்காங்கே முக்கியம் பெறுவதோடு சமய நம்பிக்கையினையும் ஆன்மீக ஈடேற்றத்திற்குரிய வழிவகைகளை யும் காட்டி நிற்கின்றன என்பது புலனு கின்றது. கலைகளும், பண்பாடுகளும் இருக் கும் வரை கிரியை நெறிகளும் இருக்கவே செய்யும் எனலாம்.

சௌந்தர்யலகரியும் அபிராமி அந்தாதியும்

— சா. தவமணிதேவி, உதவி நூலகர், கிழக்குப் பல்கலைக்கழகம். —

தமிழ் பத்தி இலக்கிய வரலாற்றில் திரி-மூர்த்திகளையும் அவரது சத்திகளையும் வழி பாடு செய்தமையைக் காணமுடிகிறது. இதனால் சைவசமயம் பல்கிப் பெருகிவிட்டது. இப்பெருகிய சமயங்களைக் குறிப்பாக ஆறு பிரிவுகளில் அடக்கலாம். சௌரம் (சூரியக் கடவுள்) காணபத்தியம் (கணபதி) கௌமாரம் (முருகன்), வைணவம் (திருமால்), சைவம் (சிவன்), சாக்தம் (சத்தி) என்பன அவை. இவை தத்தி, தாத்த சொற்கள். அவ்வக்காலப் பகுதிகளில் பாடப்பட்ட தேவாரம், திருவாசகம், கந்தபுராணம், சௌந்தர்யலகரி, பிரபந்தம், அபிராமி அந்தாதி போன்ற பாராயண நூல்கள் இப் பிரிவுகளைப் பறைசாற்றுகின்றன. சாக்த சமயத்தில் சாக்த சித்தாந்தம், சைவசித்தாந்தம் போன்று ஆழ்ந்து அகன்றது. இச்சாக்த சித்தாந்தம் சொரூபியின் மீது பாடப்பட்ட நூல்களாக வடமொழி சௌந்தர்யலகரியும் தமிழ் அபிராமி அந்தாதியும் உள்ளன.

சௌந்தர்யலகரி வடமொழியில் ஆக்கப் பட்டாலும் அது தமிழில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. இதனால் தமிழ் அபிராமி அந்தாதியுடன் ஒப்பிட்டு நோக்க முடிகிறது. எனினும் வடமொழி கலந்து சொற்கள், கருத்துக்கள் காணல் தவிர்க்க முடியாதது. இவ்விரு நூல்களையும் அவற்றின் பெயர்க் காரணம், நூல் செய்யப்பட்ட காரணம், ஆசிரியர், காலம், பாடல்தொகை, உரையாசிரியர்கள், பதிப்புக்கள், தலப்பெருமை, பாடப்பட்ட விடயங்கள் போன்ற சில முக்கிய அமிசங்களில் நோக்கின் இச்சிறிய ஒப்பீட்டாய்வின் பயன் தெளிவாம்.

பாடல்களில் கூறப்பட்டுள்ள விடயங்கள் எனும்போது அம்பிகையே மேலே கூறப்பட்ட மூர்த்திகளிலும் மேலானவள் என்ற பொதுவான கருத்து மேலோங்கி நிற்கிறது. இத்துடன் சத்தியின் அழகு, பெருமை, வல்லமை, கருணை, பாதப்பெருமை, வேதங்களுக்கு சத்தியின் துணை, சத்தியின் பல்வகைப்பட்ட பெயர்கள் வரலாற்றுச் செய்தியுடன் தொடர்புடைய புராண நிகழ்ச்சிகளில் சிவசத்தியின் பங்கு, சிவத்தின் பாதிப்பாகம், சத்தியிடம் சிவ அடக்கம், அவளை வணங்குவதால் அல்லது வணங்காவிட்டால் கிடைக்கும் நிலைகள், மூன்று நிலைகள், இருபாடல் தொகைகளில் காணப்பட்ட மிக நெருக்கமான பாடல்கள் என்ப பல்வகைப்பட்ட சாக்த சித்தாந்தக் கருத்துக்களை ஆசிரியர் இருவரும் கூறுகின்றனர். சாக்தத்தில் விளக்கப்பட்டிருக்கும் உருவம், சக்கரம், மந்திரம் போன்ற தத்துவங்கள் விபரிக்கப்பட்டுள்ளன.

பெயர்க் காரணம்:

சௌந்தர்யலகரி தமிழுக்கு மொழி பெயர்க்கப்பட்ட நூல். இதன் மூலம் நாகர எழுத்தில் எழுதப்பட்டது என்பர். சௌந்தர்யலகரியில் இரண்டு பகுதிகள் காணப்படுகின்றன. ஒன்று ஆனந்தலகரி. அடுத்தது சௌந்தர்யலகரி. ஆனந்தம் என்னும் மகிழ்ச்சி, இன்பம். லகரி என்னும் மிகுதி, பெருக்கு. சௌந்தரியம் என்னும் சுந்தரம். இது திரிந்து சௌந்தரியம். இதனைத் தத்திதாந்தம் என்பர். ஆகவே தேவியின் தன்மைகளை எடுத்துக் கூறும்போது ஆனந்தம் ஏற்படுகின்றது என்றும் அவள் அழகைப் பாதாதிகேசம் வரை வர்ணிப்பதில் அழகு சுந்தரம்) வெளிக்கொணரப்படுகிறது என்பது தெளிவாக உளது. இதன் முதற்பகுதி ஆனந்தலகரியாக இருந்த போது பிற்பகுதியால் நூல் பெயர் பெறுவது இங்கு சிந்திக்கத் தக்கது. ஆனந்தலகரி கையிலைமலையில் எழுதப்பட்டு, சௌந்தர்யலகரி எழுதிய ஆசிரியரால் உலகிற்குக்

கொண்டுவரப்பட்டது. இதனுல் ஆசிரியர் தான் இயற்றிய பகுதியை இந்நூல் முழுமைக் கும் பெயரிட்டுள்ளார்.

அபிராமி அந்தாதி தமிழ் நூல். ஆசிரியர் அபிராமி எனும் திருக்கடவூர் பெண் தெய் வத்தின்மேல் பாடல்கள் பாடினர். இங்கும் அபிராமி என்றுல் அழகுடையவள். அந்தாதி யாப்பில் பாடப்பட்டது. அந்தாதி என்றுல் ஒரு பாடலின் முடிவு அடுத்த பாடலின் தொடக்கமாக அமைவது. அபிராமி அந்தாதி சத்தி வழிபாட்டில் இடம்பெறுவது போல் ஏனைய சமயங்களிலும் அந்தாதி இலக்கியங் கள் தோன்றின. அழகர் அந்தாதி - வைணவம், தேவமாதா அந்தாதி - கிறித்துவ சமயம், மெதினத்தந்தாதி - இசுலாமிய சமயம், நூற் றைந்தாதி - சமண சமயம் என்பன ஈண்டு நினைவு கூரத்தக்கன.

ஆசிரியர், நூல் செய்யப்பட்ட காரணம்:

சௌந்தர்யலகரியின் ஆசிரியர் ஆதிசங்கரர் இது பற்றிப் பலவித கருத்துக்கள் இன்றும் நிலவுகின்றன. இலிங்க புராணத்தில் விநாய கர் வாழ்த்தில் இது மகாமேருமலையில் விநா யகரால் எழுதப்பட்டதென்று கூறப்பட்டுள் ளது. மேருமலையில் எழுதிவைத்தவர் புட்பதந் தர் என்றும் ஆனுல் அதற்கு முன்பே அது கைலாயமலையில் சிவாலயத்தின் மதிற்சுவரில் எழுதப்பட்டிருந்தது என்று ஒரு வரலாறு உண்டு. மேருமலையில் இருந்ததை கௌட பாதர் கிரகித்துப் பின்பு ஆதிசங்கரருக்கு அதை உபதேசம் செய்ததாக சௌந்தர்ய லகரியைத் தமிழ்ப் பாடலாக்கிய வீரைகவி ராயபண்டிதர் கூறுகிறுர். மற்றும் சிலர் ஆதி சங்கரரே கைலாயமலையிலிருந்து இதைக் கொணர்ந்தவர் என்றும், ஆனுல் அவருக்குக் கிடைத்தது ஆனந்தலகரி எனப் பெயர் பெற்ற பகுதியில் அடங்கிய 41 சுலோகங்கள் மட்டுமே என்றும் பிற்பகுதியில் உள்ள 59 சுலோகங்களையும் சங்கரர் தாமே எழுதிப் பூர்த்தி செய்தார் என்றும் கூறுவர். பொது வாகச் சௌந்தர்யலகரி என்றும் நூலின் ஒரு பகுதி சங்கராச்சாரியரால் எழுதப்பட்டது என்பதிலும் முதன் முதலில் அவராலேயே அது உலகிற்கு அளிக்கப்பட்டது என்பதிலும் ஐயமில்லை. (1)

இன்னும் திராவிடசிசு என்னும் கவிஞ னுடன் இந் நூல் இணைத்துக் கூறப்படுகிறது. இக்கவிஞர் கைலாயமலையில் அமுதபோது தேவி பால் கொடுத்ததாயும் இந்தக் கவி தேவி மேல் 100 பாடல்கள் கைலாயசுவரில் எழுதி வைப்பு. ஒரு நாள் சங்கராச்சாரியர் கயிலாயத்திற்கு வர தேவி விருப்பப்படி அப் பாடல்கள் திராவிடசிசுவினுல் அழிக்க, அழிந் தது போக மிகுதி 41 பாடல்களே ஆதிசங்க ரர் பார்வையால் கற்றுத் தேர்ந்தார் என் றும் இவ்விபரங்கள் வடமொழி உரைகளிலும் உள்ளது என்றும் ஏனைய 59 பாடல்கள் சங்கரர் இயற்றியவை என்பர். (2) திராவிட சிசுவைப் பற்றி சௌந்தர்யலகரி 75ம் பாடல் சிறப்பித்துக் கூறுகின்றது. இவ் 'திராவிடசிசு' என்றவர் திருஞானசமபந்தரைக் குறிக்கும் எனக் காமகோடி ஆசிரியரும் பிறரும் கூறு கிறுர்கள். (3)

அபிராமி அந்தாதி ஆசிரியர், அது பாடப் பட்ட வரலாறு பற்றித் தெளிவான கருத்துக் கள் உள. ஆசிரியர் அபிராமிபட்டர். ஒரு சாக்தர். இவரது அபரிதமான அபிராமிப் பத்தி நிலையை உணராத திருக்கடவூர் பத்தர் கள் எள்ளிநகையாடினர். திருக்கடவூர் வந்த சரபோசிமகாராசா அவரைச் சோதிக்க விரும்பி இன்று என்ன நாள் என வினவ, சத்தி நினைப்பில் இருந்த பட்டர் வாய்தடு மாறி இன்று பௌர்ணமி என்று கூறுகிறுர். மன்னரும் இவர் பற்றி மற்றவர்கள் கூறியது உண்மையா என ஐயுற்றுப் போந்தார். பின் தவற்றை உணர்ந்த அபிராமிப்பட்டர் யாவற் றுக்கும் இவ் அபிராமியே பொறுப்பு என வேண்டி இவ் நூறு பாடல்களையும் பாடினர். 'விழிக்கேயருளுண்டு' எனும் 79ம் பாடல் முடிய அபிராமி அவர்முன் தோன்றி தமது ஒரு திருத்தோட்டில் ஒன்றைக் கழற்றி வீசித் தன் பத்தனின் வாக்கை மெய்யாக்கினர்.

---

1. சௌந்தர்யலகரி - பாஷயம்: முகவுரை P. V - VJ; 4ம் பதிப்பு 1974.
2. செந்தமிழ்: ஒரு தமிழ்ப் பத்திரிகை June - July 1954 Vol. 50, N 8; P. 243.
3. சௌந்தர்யலகரி: 75ம் பாடல் குறிப்பு; 4ம் பதிப்பு; பக். 134.

அபிராமிபட்டர் இந்நூலுடன் கள்ளவ ாணப்பிள்ளையார் பதிகம், அமுதகடேசுவரர் பதிகம், காலசங்கார மூர்த்திப் பதிகம், அபி ராமியம்மைப் பதிகம் போன்றவற்றையும் பாடி உள்ளனர்.

காலம்:-

சௌந்தர்யலகரி மகாமேருமலையில் விநா யகரால் எழுதப்பட்டது என இலிங்கபுராணத் தில் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே இது இலிங்க புராணத்திற்கும் முற்பட்டது எனக் கூறலாம். திருஞானசம்பந்தருடன் திரவிடசிசு என்றவர் தொடர்புபடுத்திக் கூறப்படுவதால் இதன் காலம் சம்பந்தர் காலம் எனவும் கருத்துளது. சௌந்தர்யலகரின் 2ம் பாகத்தை ஆதிசங்கரர் இயற்றினர் அல்லது உலகுக்குக் கொணர்ந் தார். எனும்போது ஆதிசங்கரர் காலம் இந் நூலுக்குரிய காலம் என ஒரு பொது முடிவுக்கு வரலாம். அபிராமி அந்தாதியை நோக்கும் போது இது இதில் கூறப்பட்டுள்ள சரபோசி மன்னன் காலத்தது எனலாம். தஞ்சையில் ஆண்ட சரபோசி மன்னர் இருவர் காலமும் 18ம் நூற்றாண்டுக்கும் 19ம் நூற்றாண்டு நடுப்பகுதி வரை குறிக்கப்படுவதால் பட்டர் இக்காலப்பகுதியில் வாழ்ந்தவராகக் கொள்ளலாம்.

பாடல் தொகை:-

இரு பாடல் தொகுதிகளும் காப்பும் நூற்பயனும் போக நூறுபாடல்களைக் கொண் டன. சௌந்தர்யலகரியில் முதல் 41 பாடல் களும் 1ம் பாகம். ஆனந்தலகரி கைலாசத்தி லிருந்து கிடைத்தது. நாற்பத்தியொன்றிலி ருந்து நூறும் பாடல் வரை சௌந்தர்யலகரி சங்கராச்சாரியரால் அருளிச் செய்யப்பட்டது. இவ் நூறு சுலோகங்களைப் பற்றி காமகோடி சங்கராசாரியார் பின் வருமாறு குறிப்பிடு கிறார். ''நூறு சுலோகங்களும் கைலாசத்திலி ருந்து வந்திருந்தால் நமக்கும் கஷ்டந்தான். அப்பொழுது ஸ்ரீ ஆசார்யாளுடைய வாக்கின் மகிமையை நாம் அநுபவிக்க முடி யாது ஆசார்யாள் செய்தவைகளை விடக் கைலாயத்திலிருந்து வந்தவைகள் உயர்வாகத் தோன்றவில்லை. அவையெல்லாம் மந்திரங்கள் தான்'(4) சௌந்தர்யலகரியின் சில பாடல்களில் 3 சுலோகங்கள் (94, 99, 102) அதிகமாக வந்துள்ளதைக் காணக்கூடியதாக உளது. அபிராமி அந்தாதியில் காப்பும் நூற்பயனும் சேர்த்து 102 பாடல்கள் உள்ளன.

உரையாசிரியர்கள்:-

இரண்டு நூல்களுக்கும் உரைகள் எழுதப் பட்டுள்ளன. சௌந்தர்யலகரி முழுமையும் வடமொழியாலானது. அதைத் தமிழில் படித் துப் பாராயணம் செய்வதற்காக மொழி பெயர்க்கப்பட்டது. தமிழில் சௌந்தர்யல கரியை மொழிபெயர்த்தவர் வீரைக்கவிராச பண்டிதர் என்பர். சௌந்தர்யலகரியைச் செய்யுள்வடிவில் ஆக்கியமை இவரது அரும் புலமைக்குச் சான்றாகும். இவர் காலம் 700 ஆண்டுகட்கு முன்பாகும். இத் தமிழ் செய்யுள் களுக்கு உரையெழுதியவர் திவ்வியகவி சைவ எல்லப்ப நாவலர். இவர் கலம்பகம், புராணங் கள் பாடுவதில் வல்லவர். இவர் காலம் 17ம் நூற்றாண்டு என்பர். கவிராசபண்டிதரும் சௌந்தர்யலகரியைத் தமிழில் யாத்தார் என்பது பாயிரத்தால் அறியலாம். இவர் வட மொழிவடிவிலேயே சில சொற்களை அமைத் துள்ளார். ப்ரபந்தம், ப்ரபை, மாதா, தீயா கம், த்ரிகோணம் என்பன சில உதாரணங்கள். கமலை, அம்பிகை, இந்திரை, விமலை முதலிய சொற்கள் ஆசிரியரால் கருத்துடன் கையாளப் பட்டுள்ளன. இன்று உரையாசிரியர் அண்ணா விஞல் எழுதப்பட்டு ஸ்ரீராமகிருஷ்ணமட வெளியீட்டுப் பதிப்புக்கள் பல விளக்கங் களுடன் தமிழ் மக்கள் கையில் உள்ளது.

அபிராமிஅந்தாதியின் 1ம் பதிப்பு யாழ்ப் பாணத்தில் 1913ல் உரையுடன் வெளியிடப் பட்டுள்ளது. இதன் உரையாசிரியர் மட்டுவில் க. வேற்பிள்ளை. இவர் ஆறுமுகநாவலர் பெரு மானின் மாணவருள் ஒருவர். இவரைத் தவிர இந்நூலுக்கு கி. வா. ஜகந்நாதன் (மாலை பூண்ட மலர் I, II) தருமையாதீனப்புலவர் முத்துமாணிக்கவாசக முதலியார், திண்டுக்கல் பெ. கா. சண்முகநாதன் ஆகியோரின் உரையுடன் கூடிய நூல்கள் வெளிவந்துள்ளன.

4. சௌந்தர்யலகரி - பாஷ்யம் 1974, பக் : 85

பதிப்புக்கள்:-

ஆறுமுகநாவலர் 1849ல் பதிப்பித்த முதல் நூல் சௌந்தர்யலகரியாகும். அவர் பதிப்பில் சிவமென்னும் கவி முதல் நீநந்துமென்னும் கவி வளரதேவியின் இன்பப் பெருக்கைச் சொல்லுதல் சௌந்தரியலகரியென்றும் அறிக. லகரி என்பது பெருக்கு இப்பதிப்பில் உரையாசிரியர் பெயர் கவிராசபண்டிதர் என்பது அறிய வருகிறது (5) பிரஹ்மஶ்ரீ தி. ஶ்ரீனிவாசசாஸ்திரிகளால் தொகுத்த நூறு சுலோகங்கள் மட்டும் உள்ள நூல் ஒன்று 1971ல் சென்னையில் வெளியிடப்பட்டுள்ளது. பின் ஶ்ரீராமகிருஷ்ண மடத்தினால் 1963ல் முதல் பதிப்பு உரையுடன் வெளியானது.

அபிராமிஅந்தாதி மீண்டும் உரையுடன் 1970ல் 5ம் பதிப்பு வெளியாகியது. இதன் 2ம் பதிப்பை 1923ல் விசுவநாதபிள்ளை பதிப்பித்தார்.(6)1974ல் திலிட்டில் ப்ளவர் கம்பெனி (The Little Flower Company) உரையுடன் கூடிய அபிராமி அந்தாதியை வெளியிட்டு உள்ளது. இதன் பயன்பாடு கருதி தனிப் பாடல்கள் மட்டும் அடங்கிய பதிப்புக்கள் வெளிவந்துள்ளமை கண்கூடு.

தலப் பெருமை:-

சௌந்தர்யலகரியின் முதல் பாகம் கையிலாயத்தில் எழுதப்பட்டிருந்தது என்பது தெளிவு. ஆகவே இது சிறப்புற்றது. அபிராமி அம்மை எழுந்தருளியிருக்கும் இடம் திருக்கடவூர். இறைவனின் பெயர் அமுதகடேசுவரர். தேவர்கள் பாற்கடலைக் கடைந்து கொணர்ந்த அமுதத்தை இங்கு வைத்து, நீராடச் சென்றனர். திரும்பி வந்து பார்த்த போது அமுத கடம் சிவலிங்க உருவமாக இருக்கக் கண்டனர். பின் சிவன், விநாயகரை வணங்கி அமுதத்தைப் பெற்றனர். இதனால் இத்தலத்திற்குக் கடவூர் என்றும் இறைவனுக்கு அமுதகடேசுவரர் என்றும் பெயர் ஏற்பட்டது.

மேலும் மார்க்கண்டேயரது உயிரைக் கவர வந்த இயமனை இறைவன் இவ்விலிங்கத்தினின்றும் தோன்றிக் காப்பாற்றினார். ஆகவே திருக்கடவூர் அட்ட வீரத் தலங்களுள் ஒன்றாகும். இத்தலம் குங்கிலியக்கலைய நாயனாருக்கும் காரிநாயனாருக்கும் பிறப்பு, முத்தி தலமாகவும் இருந்த சிறப்பினை உடையது. இவற்றுடன் பட்டரின் வாக்கை மெய்ப்பித்த அபிராமித் தலமாகச் சிறப்புப் பெற்றது.

பாடப்பட்ட விடயங்கள்:-

இரண்டு நூல்களும் சத்தியைப் பாட்டுடைத் தலைவியாகக் கொண்டவை. எனினும் தலைவியை வணங்கும் முறை; அணுகு முறை போன்றவற்றில் பொதுவாக இரண்டிற்கும் வேறுபாடு உண்டு இதற்குக் காரணம் சௌந்தர்யலகரியில் உள்ள பாடல்கள் கடவுளைப் பாராயணம் செய்யும் மந்திரங்களாகவே உள்ளன. அபிராமி அந்தாதிப் பாடல்களில் அம்மையைப் பலவாறு ஏற்றிப் புகழ்ந்து தன்னைக் காப்பாற்றும்படி, கருணை புரியும்படி இரங்கி வேண்டுகிறார். அதாவது ''இன்று பௌர்ணமி நாள்'' எனத் தவறிக் கூறிய நிலையிலிருந்து காப்பாற்றப்படுவதே அவரது முழுமூச்சாகும்.

சத்தி மயம், சிவமயம்:

இரண்டு நூல்களிலும் சத்திமயம், சிவமயம் ஆழமாகக் கூறப்பட்டுள்ளன. சௌந்தர்யலரியில் சத்தியிடம் சிவாம்சத்தின் அடக்கம் பற்றி சுலோகம்23ல் 'பாவானி தவம்' எனக் கூறப்பட்டுள்ளது. சிவனின் உடலில் பாதிப் பாகத்தை இறைவி இடம் பிடித்ததுடன் திருப்தியடையாது தன் சிவப்பு நிறத்தால் முழுவதையும் ஆக்கிரமித்துள்ளமை தெளிவு. அர்த்த நாரீசுவர மூர்த்தி (சௌ : 37) வடிவம் பற்றி விளக்கப்பட்டுள்ளது. அக்கினியும் பிரகாசமும் போல இறைவியும் இறைவனும் பிரிக்க முடியாத நிலையில் உள்ளனர். இறைவியைச் சிவயுவதி என விளித்து (சௌ : 35) நீயே மண், நீர், நெருப்பு, காற்று போன்ற

---

5. ஆறுமுகநாவலர் பதிப்பு, 1849. பக்: 163
6. Lexicon Vol. I Part II துந்தபி வரு பங்குனி பக்: 12

வற்றுக்கும் சத்தியாகவும் ஆனந்த பைரவ ராகவும் இருக்கிறாய் என்கிறார். இதே கருத்து அபிராமியிலும்,

"பாரும் புனலும் கனலும் வெங்
காலும் படர் விசும்பும்
ஊரும் முருகு சுவையொளி
யூறிலி ஒன்றுபடச்... (7) என உளது.

அபிராமி அந்தாதியில் பலவிடங்களில் சிவ சத்திப் பாதிப்பாகம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. உதாரணங்கள் சில வார்சடையோன் (அபி: 5) வாமபாகம் (அபி : 17) உமையும் உமையொரு பாகனும் (அபி ; 31) ஈசன் பாகத்து நேரிழையே (அபி ; 32) செம்பாகத்து இருந்தவளே (அபி ; 43) இடப்பாகம் கலந்த பொன்னே (அபி ; 41) எங்கள் பெம்மானிடையாளே (அபி ; 84) பாகம் கொண்டாளும் (அபி; 87) இடப்பாகம் சிறந்தவளே (அபி : 88)

சத்தியின் அழகு;

சௌந்தர்யலகரியின் இரு . பகு தி யும் சத்தியின் அழகை வருணிப்பதில் முன்னிற் கின்றது. நூலின் பெயரே இதற்குச் சான்று கும். சத்தியின் பாதாதிகேசம் வரை வருணிக் கப்படுகிறது. இப்பகுதியே நூலின் பிற்பகுதி யான் சௌந்தர்யலகரியாகும். சத்தியை வணங்க விருப்பம் கொண்ட பன்னிரண்டு ஆதித்தர்களும் அவள் கிரீடத்திலுள்ள இரத் தினங்களாக உள்ளனர் என கிரீட வருணனை உளது. சத்தியை வருணிக்கும்போது அவள் அழகுடன் ஒப்பிட்டுக் கூறமுடியாத உவமை யற்ற அழகே வ ருணிப் பு. கிரீடத்தில் தொடங்கிய அழகு வருணனை தொடர்ந்து சத்தியின் வகிட்டின் வருணனை (சௌ ; 44), முன்நெற்றி மயிர் வருணனை (சௌ ; 45) பாதிச்சந்திரன் போன்ற நெற்றியின் வருணனை (சௌ : 46) புருவங்களின் அழகு (சௌ ;47) கண்களின் அழகு (சௌ ; 48) பின் அவளின் ஆடை, ஆபரணங்கள் வருணனை கூறல். தேவியின் கடைக் கண்ணின் அழகு மட்டும் ஏறக்குறைய பதினெரு பாடல்களில் கூறப் பட்டுள்ளது. இவள் கண்கள் மீன் க ளின் அழகையும் நீலோத்பவத்தின் அழகையும் வெல்லும். இவள் கண்களேமூடித் திறப்பதால் புவனங்களே ஆக்கி அ ழி க் கி ரு ள். ஆகவே மும்மூர்த்திகளுக்கும் இவளே தலைவியாகிறாள். மீன்களைப் போன்ற கண்ணழகு படைத்த மூர்த்தி விசேடம் மதுரையில் உள்ளது. இத னால் தான் அங்குள்ள பெர்ற்றாமரைக் குளத் தில் மீன்கள் வாழ்வதில்லை என்பர்.

அபிராமி அந்தாதியில் அவள் அழகு மெரு கூட்டப்படுகிறது. இவ்வழகு வருணனையில் இரு நூல்களுக்கும் அதிக வேறுபாடு காணப்பட வில்லை. இந்நூலில் பட்டரைக் காப்பாற்றிய அம்பிகையின் தோடு வருணனை (அபி : 10 ; சௌ : 28) மதுரமான கீ ர் வ ா ணி (அபி : 69 ; சௌ ; 60) மெல்லிய இடையழகு (அபி : 53 : சௌ : 79) நாவின் வருணனை (அபி : 38 ; சௌ : 64) எனப் பல்கிப் பெருகி யுள.

பாதப் பெருமை;

அழகு வருணிப்பில் பாத வருணனை குறிப் பிடத்தக்க இ ட த் தை ப் பெறுகிறது. தம் மனம் இயைந்தவாறு போற்றுகின்றனர். உப நிடதங்களின் உச்சியில் விளங்கும் பாதார விந்தம் (சௌ : 84), மு ம் மூ ர் த் தி க ளின் கிரீடங்களில் இவள் பாதம் (சௌ : 25) அழகு குன்றாத பாதம் (சௌ ; 87) ப ர ம சி வ ன் வணங்க விரும்பும் பாதாரவிந்தம் (சௌ:85) எனப் போற்றல். இங்கு உபநிடதங்களின் உச்சியில் இவள் பாதம் இருப்பதால் மூர்த்தி களுக்கு மட்டுமல்ல, வேதம் போன்றவற்றுக் கும் இவளே அதிபதி என்பது தெளிவு. சிவன் ஊடலின் போது. ச த் தி யின் பாதத்தை வணங்குவது சிவன் பகைவனுகிய மன்மதனுக்கு வெற்றி உண்டாகிறது எனல். இது சத்தி யின் மேம்பாட்டை உணர்த்துகிறது. (8)

அபிராமியில் அவள் பாதங்களே தன்னைக் காப்பாற்றும் என அழுதழுது வேண்டுகின்றார். இ ரு பா த ா ம் (அபி ; 12), நின்பத்மபாதம் (அபி ; 24), பத்மபதயுகம் (அபி ; 27), புது மலர்த்தாள் (அபி : 28), தி ங் க ட் ப த லின் மணம் நாறும் சிறடி (அபி : 35), சரணம் புயம் (அபி ; 58), சேமம் திருவடி (அபி:73), நின்னடித்தாமரை (அபி ; 98) என் ப ன அவற்றுட் சில.

7. அபிராமி அந்தாதி மூலமும் உரையும்:- க. வேற்பிள்ளை
8. சௌந்தர்யலகரி சுபோசம் - 86 பக்: 149 68ம் பாடம் பக்:- 67 - 68.

வேதங்களின் துணை:

சௌந்தர்யலகரியில் உபநிடதங்களின் தலைவி, துணைவி என்கிறார். அபிராமியில் எழுதாமறை (அபி : 10) மறைநான்கு (அபி : 11), நான்மறை (அபி : 20, 70) மறையின் வரிமளம் (அபி ; 12), அருமறை (அபி ; 55) வேதம் (அபி ; 71, 74) மறை தேட (அபி ; 86), புகழ்ந்து மறை சொல்லிய வண்ணம் (அபி ; 91) என அவளைப் போற்றும் அவளுடன் பழகும், துதிக்கும் வேதங்கள் எனல்.

வரலாற்றுச் செய்தி:

இரு நூல்களிலும் புல்வகைப்பட்ட வரலாற்றுச் செய்திகள் கூறப்பட்டுள்ளன. அபிராமி அந்தாதியில் கூறியவை, சௌந்தர்யலகரியில் அதிகம் எனலாம். பட்டரின் நிலை இதற்குக் காரணம். அபிராமி முன்பு பல திருவிளையாடல்களைச் செய்து பத்தர்களைக் காப்பாற்றியவள். இப்போது தனக்கும் அத்தகைய கருணை காட்டிக் காப்பாற்றும்படி வேண்டுதல் இயல்பே.

மன்மதன் எரிப்பு, நஞ்சுண்ட கதை, முப்புரம் எரிப்பு, அடிமுடிதேடிய கதை இயமனை உதைத்த கதை இரு நூல்களிலும் கூறல். ஆனால் சௌந்தர்யலகரியில் உள்ள அம்பிகையின் கூந்தல் மணம் பற்றி வாதிட்ட நக்கீரர் கதையும் (சௌ ; 44) அபிராமியில் உள்ள அம்பிகை இருநாழி கொண்டு அறம் செய்த கதையும் (அபி ; 57) இரு நூல்களிலும் கூறப்படாதவை.

சௌந்தர்யலகரியில் மன்மதனைச் சிவன் நெற்றிக் கண்ணால் எரிக்கப்பட்ட வரலாறு உளது. (சௌ ; 23) தேவியின் பாதிப்பாகம் சிவனில் உளது. ஆகவே இதனால் ஏற்பட்ட புகழில் பாதி சத்திக்கும் உரியது. ஆனால் சிவனுக்கே அப்பெருமை சேருகிறது. ஆனால் இயமனை உதைத்த கால் இடக்கால் அதாவது இறைவியின் கால். ஆகவே இதில் எங்கே சிவனுக்குப் பெருமை என நாசூக்காக வினவுவது நினைத்து இன்புறத்தக்கது. இதன் மூலம் சத்தியிலேயே சிவன் ஐக்கியம் என்பது மேலும்வலிமை பெறல்.

சத்தியினை விளித்து அழைக்கும் பெயர்கள்.

ஒப்பிட்டளவில் நோக்கும்போது அபிராமி அந்தாதியில் அழைக்கும் பெயர்கள் அதிகம். ஒவ்வொரு பாடலிலும் அவள் பலவாறு விளிக்கப்படுகிறாள். சௌந்தர்யலகரியில் பவானி, பார்வதி (சௌ : 33), மாதா (சௌ : 98), தாயே (சௌ : 83) தேவியே (சௌ : 88) என்றும் அபிராமியில் சுந்தரி(5) பெண்ணே (6), நீலி (8), கந்தரி (8), அந்தரி(8) கள்ளே, கனியே, களியே (23), மணியே, ஒளியே, பிணியே, மருந்தே, விருந்தே (24) மாலினி, சூலி, வராகி (77), பயிரவி (76,77) பூங்குயிலே (98) தையலே (97) என வேண்டுகின்றார். பாடல் 24ல் பிணியே அதற்கு மருந்தே என முரண்பட்ட அழகுடன் விளிக்கிறார். ஒரு சில பாடல்கள் முழுவதுமே சத்தியை அழைப்பதாக உளது. (அபி : 50;77)

மும்மூர்த்திகள் நிலை:-

சத்தி மும்மூர்த்திகளுக்கும் மேம்பட்டவள். அவர்களைப் படைக்கும் முக்குணம் உடைய கண்களையுடையவள். (சௌ : 53) தேவியின் இருக்கைக் கட்டில்களின் நான்கு கால்களாக பிரம்மா, ஈசுவரன், உருத்திரன், விட்ணு ஆகியோர் உள்ளனர். (சௌ : 92) மும்மூர்த்திகள் வணங்க வரும்போது, சிவன் சிறப்பாகச் சத்தியைக் காண வருகின்றான். பத்தர்களின் வணக்கத்தை ஏற்றுக் கொள்வதுடன் நின்றுவிடாது பிரம்மா, விட்ணுவின் கிரீடங்களை விலக்கிச் சிவனை வரவேற்கிறாள். (சௌ : 29) இந் நிலை சத்தி யாவருக்கும் மேம்பட்டவள் என்பது தெளிவு.

படைத்தல், காத்தல், அழித்தல் தொழில்களைச் செய்பவள் நீயே (அபி ; 13, 14, 26, 34) ஆகவே உன்னை வணங்கவே பொருத்தம். நாராயணனும் அயனும் உன்னை வணங்குகின்றனர். (அபி : 74) ஆதித்தன், அம்புலி, குபேரன், கணபதி, காமன் போன்றோர் சத்தியை வணங்குவர். (அபி : 97) ஆகவே நீ எல்லோருக்கும் மேலானவள் என்கிறது அபிராமி அந்தாதி.

சத்தியை வழிபடுவதால் ஏற்படும் நிலைகள்:

சத்தி மும்மூர்த்திகளால் வணங்கப்படுகின்றாள். அப்படியாயின் எனதுநிலை எங்கே எனப்பட்டார் அங்கலாய்க்கிறார். தவிக்கிறார். தன் கையற நிலையை அடிக்கடி கூறி அரற்றுகிறார். தீவினை மிக்க, கரும நெஞ்சம் (அபி : 3) கதியுறு மத்திற் சுழலும் என் ஆவி (அபி : 7) வஞ்சப்பிறவி, நெஞ்சத்து அழுக்கு (அபி : 27) நாயேன் (அபி : 61), அறிவொன்றிலேன் (அபி : 81) எனத் தன்னைக் குறைத்துக் கூறி இரக்கம் ஏற்பட வழிவகுக்கிறார். உன் அருள் உள்ள விழியும், வேதம் சொன்ன வழியும் இருக்கக் கயவரோடு கூடித்திரிந்தது என் பிழை நின் குறையன்று என அரற்றுகிறார்.

பட்டரும் விடாப்பிடியாக வணங்குகிறார். அம்பிகை அருள் புரிகிறாள். எத்தகைய அருள்? எவருக்கும் கிடைக்காத மற்றவர்களால் உணர முடியாத அனுபூதி நிலையை அடைகின்றார். அவளை அடைகின்றார். அவளை அடைந்தவர்க்கு அடையாத தனமில்லையே எனல்,(9) ஆன்மா இறைவனைத் தேடுவது வழமை. "நம் காரணத்தால் நண்ணி இங்கே வந்து" என்பது மூலம் இறைவன் (10) ஆன்மாவைத் தேடும் சிரிய கருத்து தெளிவாகிறது. இவளை வணங்குவதால் பரவும், மழையும், அயிராவதமும், பகீரதியும் உரவும், குளிசமும், கற்பகாவும் நிலைகளை அடைவர் இல்வுலக இன்பத்தையும் வான் உலக இந்திரப் பதவியையும் அடைவர். எதற்கும், மொழிக்கும், நினைவிற்கும் எட்டாத நின்மூர்த்தி என் விழிக்கு எட்டியதால் இனி பொருந்த ஒரு பொருள் இல்லை எனப் பட்டர் தன் அமைதி, ஆறுதல் நிலையைக் கூறுகிறார்.

இரு நூல்களிலும் உள்ள கருத்து ஒற்றுமைப் பாடல்கள்:

சத்தியை வணங்கப் புண்ணியம் செய்திருக்க வேண்டும். (சௌ : 1, அபி : 12), பரிபூரண அருள் கிடைக்கும் (சௌ : 3, அபி : 14) தோட்டின் மகிமை (சௌ : 28, அபி : 10) ஆறு சக்கரங்களிலும் விளங்கும் தேவி (சௌ : 35, அபி : 68), அவள் குங்குமம், அழகு (சௌ : 44, அபி : 1) மதுரமான சொல் ஓசை (சௌ : 60, அபி : 69) பழுத்த செவ்வாய் (சௌ : 64, 65, அபி : 38) மெல்லிய இடையின் அழகு (சௌ : 79, அபி : 53) எல்லாம் சத்தியாகத் தெரிதல் (சௌ : 81, அபி : 85).

முடிபு:

இரு நூல்களும் சாக்த சமயத்தின் தத்துவங்களை எடுத்துரைப்பதில் முன்னிற்கின்றன. ஆனால் ஒப்பிட்டளவில் அபிராமி அந்தாதியின் பயன்பாடு அதிகம் எனலாம். சௌந்தர்யலகரி வெறும் மந்திரங்களாக இருப்பது இதற்குக் காரணம் எனினும் சத்தியை வழிபடுவதால் தனம், கல்வி, தளர்வறியாமை, தெய்வ வடிவம், வஞ்சமில்லா இனம், நல்லன எல்லாம் தரும் என்பதில் இரு நூல்களுக்கும் வேற்றுபாடு இல்லை. (சௌ : 99, அபி : 69) சௌந்தர்யலகரியின் முழுமையான விபரம் இன்னும் ஆராய்ச்சிக்குரியதாகவே உளது. அபிராமி அந்தாதி பற்றிய விடயங்களில் நிறைவு காணப்படுவது தவிர்க்க முடியாதது. இது எவ்வாறிருப்பினும் சாக்தசமயம், அபிராபி சமயம் என்னும் வரலாற்றில் இவ்விரு நூல்களும் முக்கிய இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

9, 10 அபிராமி அந்தாதி பாடல் : 69! 41

உசாத்துணை நூல்கள்

1. ஆறுமுகநாவலர் (பதிப்பு) - சௌந்தர்யலகரி கவிராச பண்டிதர் அருளிச்செய்தது.
சென்னை:
அண்ணமலை முதலியார்
1849 - பக் : 166

2. செந்தமிழ்: ஒரு தமிழ்ப் பத்திரிகை.
தொகுதி : 50
பகுதி : 1
Nov - Decem.
1953

3. ஆதிசங்கரர் - சிவானந்தலகரி பாஷ்யம் உரையாசிரியர் அண்ணு.
சென்னை:
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
1965 - பக் : 158

4. ஆதிசங்கரர் - சௌந்தர்யலகரி பாஷ்யம் உரையாசிரியர் அண்ணு.
1975 - மறுபதிப்பு.
சென்னை:
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
1974 - பக் : 223

5. ஆதிசங்கரர் - சௌந்தர்யலகரி பாஷ்யம் உரையாசிரியர் அண்ணு.
1984 - பக் : 223

6. ஸ்ரீதேவி ஸ்தோத்திரங்கள் உரையாசிரியர் அண்ணு.
சென்னை:
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
1970 - பக் : 91

7. அபிராமிபட்டர் - அபிராமி அந்தாதி 5ம் பதிப்பு உரை : ம. க. வேற்பிள்ளை.
சென்னை:
சைவப்பிரகாச வித்தியாசாலை
1970 - பக் : 102

8. அபிராமிபட்டர் - அபிராமி அந்தாதி உரை : சேக்கிழார் அடிமை.
கு. காசிவிசுவநாதன் செட்டியார் திண்டுக்கல்
1974 - பக் : 248

9. அபிராமிபட்டர் - அபிராமி அந்தாதி
The Little Flower Company
1975 - திருச்சி

10. கி. வா. ஜகந்நாதன் - மாலைபூண்ட மலர் (அபிராமி அந்தாதி விளக்கம் பகுதி: 2)
சென்னை:
அமுத நிலையம்
1970 - பக் : 131

11. கவிஞர் கண்ணதாசன் - அம்பிகை அழகு தரிசனம் 3ம் பதிப்பு
சென்னை:
வானதி பதிப்பகம்
1985 - பக் : 108

12. காந்தளகம் - அபிராமி மகிமை
காங்கேசன்துறை காந்தமை
1982 - பக் : 51

13. Dr. ஆ. வேலுப்பிள்ளை - தமிழர் சமய வரலாறு 2ம் பதிப்பு.
சென்னை:
பாரி புத்தகப் பண்ணை
1985 - பக் : 240

14. Lexicon Vol: I Part II Uuiversity of Madras
சென்னை:
வித்தியானு பாலன யந்திரசாலை
1923 - பக் : 632

ஆங்கில வாணி

க கணபதிப்பிள்ளை, B.A, F, R, G, S, மட்டக்களப்பு

வந்தான் வரத்தான் பாட்டினைச்
சுவைக்கப் பழகிக்கொண்டான்,

அஃதெவ்வாறு என்பதை இக்கட்டுரை விளக்கிக் காட்டுகின்றது.

பாட்டானது சுவைக்க வேண்டியதொரு கலை. எனவே பாட்டுச் சுவைத்தல் ஒரு தனிக் கலை. அதை விமரிசனம் எனவும் கூறுவர். சுவை தராதவிடத்துப் பாட்டானது பாட்டாக மாட்டாது. பாட்டின் பொருளினை எடுத்துரைப்போர் பெரும்பாலும் அதன் இலக்கண அமைவு, பொருள் நிறைவு, சொல் வினைக்கம், ஓசை நயம், சிந்தனைச் சிறப்பு, கற்பனை நிறைவு, யதார்த்தத் திறன் ஆகிய வற்றினை மாத்திரம் விளக்கிக் காட்டுவதுடன் நின்றுவிடுகின்றனர்.

பாட்டினை - அது எம்மொழியில் எழுதப் பட்டுள்ள பாட்டாயிருந்தாலும் சரி; தமிழ் பாட்டாயிருக்கலாம், ஆங்கிலமொழி பாட்டாயிருக்கலாம். வடமொழியிலுள்ள உபநிடதக் கிரந்தங்களாயிருக்கலாம் - இரசிப்பதில்பூரண அனுபவத்தினையும் இன்பத்தினையும் பெற்றுள்ள வேறு ஒருவர் விபுலாநந்தரை விஞ்சியவராக இருந்ததாக நாம் அறிந்திலம். இலக்கிய பனுவல்களில் சரி, பாட்டில் சரி, நினைத்து கரந்துறைபொருள் கண்டவர் விபுலாநந்தராவார்.

ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு முன் என நினைக்கிறேன். அரியதொரு சந்தர்ப்பம் நிகழ்ந்தது. அதில் 'பட்டினத்துக்கு வந்தான் வரத்தானு'யிருந்த நான் கலந்து கொண்டேன். அது ஒரு தனி வாய்ப்பு : இலக்கிய இரசனையினை பெறுதற்கு. அக்கூட்டத்தில் விபுலாநந்தரவர்கள் 'ஆங்கில வாணி' என்னும் தமது தமிழாக்கக் காவியத்தினை படித்துக் காட்டினர், ஓரளவு விமர்சனங்கூடச் செய்தனர். அவரது விமரிசனத்தினைத் தழுவியதாகவே இவ்வியாசம் எழுதப் பெற்றுள்ளது.

பாட்டெனப்படுவது அழகு நிரம்பப் பெற்றுள்ளது; சத்தியம் நிரம்பப் பெற்றுள்ளது. எனவே தான்:

'Beauty is truth, truth beauty' that is all ye know on earth, and all ye need to know' என ஜோண் கீற்ஸ் (John Keats) என்னும் கவிஞன் கூறிப் போந்தான். கவிதை அழகு நிரம்பியுள்ளது; நவின்றோர்க்கு இனிய நன் மொழி பயப்பது; படிக்கப் படிக்கத் தெவிட்டாத இன்பந்தருவது. வையகத்தின்மாட்டு மண்டிக்கிடக்கும் பலபக்க உண்மைகளையெல்லாம் எடுத்து இயம்புவது. இவ்வுண்மையினை உணர்ந்திருந்தான் இக்கால ஆங்கிலக் கவியரசாகிய T. S. எலியட் (T. S. Eliot) என்னும் பெருந்தகை. பாட்டின் பாங்கினைக் குறித்து இவ்வாறு விளம்பியுள்ளான்.

—The natural language of the drama should be verse, not prose.—

நாடகத்திற்குகந்த இலக்கிய அமைவு செய்யுளாகவே இருத்தல் வேண்டும். இதற்குக் காரணம் உளது. மக்களின் உளப் 'பாவங்களை' அதாவது உணர்ச்சி வேகங்களை எடுத்தோதும் திறத்தினைப் பெற்றுள்ளது பாட்டு; உரை நடையாகாது. ஆகையினால் தான் மகா கவி சேக்ஸ்பியரவர்கள் தமது நாடகங்களனைத்தினையும் பாவிலமைத்துத் தந்துள்ளார். மக்களினது உள உணர்ச்சிகள், உணர்ச்சி வேகங்கள், ஆசைகள், அபிலாசைகள், விருப்பு வெறுப்புக்கள், உளக்குமுறல்களனைத்தினையும் எடுத்தோதுவதற்குகந்த மொழி நடை பாநடையாகும் எனவே தான் சிலப்பதிகாரத்தினைப் படைத்துத் தந்துள்ள இளங்கோவடிகளார் அதைப் பாட்டும் உரை நடையும் கலந்துள்ள

இயல், இசை, நாடகக் காப்பியமாக ஆக்கி யமைத்துள்ளனர் போலும்.

சுவைத்து சுவைத்துத்தான், LXX இசைத்து இசைத்துத்தான் பாட்டினை உற்று ணர்ந்து கொள்ள வேண்டியதாக மக்கள் உள மானது இசைக்கப்பட்டுள்ளது. இயற்கையின் விதி அதுவேயாம். உளம் ஒரு அற்புத இசைக் கருவியாய் அமைந்துள்ளது. உள நோக்கு இதுவாகும். உளத்தினை ஊட்டி வளர்ப்பது இசை. இசையமையாத உள்ளம் கபடம் நிறைந்த சிந்தையாகிவிடும். அந் நிலை யில் கொலை, களவு, காமம், குரோதம், பொறுமையாகிய கபடம் நிறைந்த உணர்வு கள் உளத்தில் குடிபுகுந்து விடும். எனவே பேருண்மைகளை உணர்த்தி நிற்பன உலக மகா காவியங்களெனக் கருதப்பட்டு வரும் காப்பி யங்களாகும். உளத்தினை தூய்மையாக்கும் பண்பு (Catharsis) காப்பியங்களிலுளது.

ஆங்கில மொழியில் சாலச் சிறந்த காப்பி யப் படைப்பாகக் கருதப்பட்டு வருவது ஜோண் மில்டன் (John Milton) மகா கவியின் 'சுவர்க்க நீக்கம்' 'Paradise Lost' ஆகும். இச் சிறந்த காப்பியத்திலுள்ள ஒரு சில வரிகளை வீபுலாநந்தர் தமது 'ஆங்கில வாணி' என்னும் தலைப்பினைக் கொண்டுள்ள ஒப்பற்ற சிறப்பு வாய்ந்த ஒரு தனிப் பாடலாக தமிழாக்கம் செய்து தந்துள்ளார். அப்பாட்டினை இங்கு தருவாம்.

நித்திலத்தை நிலத்தில் உகுத்தது போற்
காலைப்பருதி கதிர் காலும் வேளையிலே
உள்ளக் கவலையின்றி உணவுடலிற்
சேர்தலினுல்
நன்கு துயின் றெழுந்த நல்லோர் புகழ்
அத்தன்
இளங் காற்றிசை யொலியும் இன்பவிலே
யொலியும்
வளஞ்சான்ற நீரருவி வாய் நின்றெழு
மொலியும்.
பள்ளி யெழுச்சிப்பண் பாடுகின்ற புள்
ளொலியும்
ஆரா உவகை தர, அன்பு இதயத்துள்
ஊரச்
சீரார் இனமான், திருமகள் போல்வாள்
அவ்வை
காதற் கனியனைய கட்டழகி, எந் நாளும்
வைகறையில் முன் னெழுவாள் மலர்ச்
சயனம் விட்டகலாச்
செய்கையினை நோக்கியவள் செத்தாமரை
வதனம்
ஏறச் சிவந்த இயல்பும், மலர்க் கூந்தல்
சீர் சிதைந்து சோர்ந்த செயலுங் கண்டுள்
ளுருகி
எழிலார் மடநல்லார் இன்றுயிலும் சீரிதே
என்ன உளத்தெண்ணி இளந்தென்றல்
மென்மலர் மேற்
சென்று வருடுந் திறமனைய மெல்
லொலியில்
'என் ஆருயிர்த் துணையே, ஈசனெனக்
களித்த
செல்வ நிதியே! செழுந்துயில் நீத்தே
எழுவாய்,
புத்தமிழ்தே அன்பே! புலரிப்
பொழுதினிலே
வாச மலர்க் கொடியில் வண்டினங்கள்
தேனருந்தும்
விந்தையினைக் காண்போம் விழிதுயில்
நீத்தே எழுவாய்.
வண்ண வண்ணப் பூக்கள் மலர்ந்தன
காண்! - என்றுரைத்தான்
ஆங்கு அவளும் இன் துயில் நீத்து அன்பன்
முக நோக்கி
'மேதகவு செம்மை நெறி மேவிய என்
அன்பரே!
காதலரே! நும் முகமுங் காலையிளம்
பொழுதும்
கண்டேன், கவலையற்றேன் கங்குற்
பொழுதினிலே
கனவோ நனவோ - நான் கண்ட
தொரு காட்சியினை விண்டுரைப்பேன்
கேளீர்.

இப்பாட்டினைச் சுவைப்பது எவ்வாறு? ஆரம்பத்தில் பாட்டினைப் பொருள் ததும்பப் பன்முறையும் படித்துப் பார்த்தல் வேண்டும். இசைத்தும் பார்த்தல் வேண்டும். பொருளினை அறிந்து கொள்ள வேண்டும். பொழிப்பான பொருளினைத் திட்ட வட்டமாய் உணர்ந்து கொள்வது அத்தியாவசியம்.

காலை வேளையினைப் படம்பிடித்துக் காட்டுகின்ற இவ்வரிகளை நோக்குவோம்.

'நித்திலத்தை நிலத்தில் உகுத்தது போல்' காட்சியளிக்கின்றன காலைக் கதிரவனின் கிரணங்கள். இளம் வெய்யில் புற்களிலும் செடிகளிலும் கொடிகளிலும் பூக்களிலும் படிந்திருக்கும் பனித்துளிகளில் படுவதால் ஆங்குள்ள பனித்துளிகள் பல்வேறு வானவில் நிறத்தில் மினுமினுக்கின்றன. அவை முத்துக்களெனப் பிரகாசிக்கின்றன. பலவர்ணக் கிரணங்களை பிரித்துப் பிரித்து காட்டுகின்றன. இத்தனை காட்சியும் பூத இணக்கத்தினை எடுத்து எழில் பெறக் காட்டுகின்றது. இது புறப் பூதச் செறிவு; புறப்பூத இணக்கமுமாகும். தொடர்ந்து உள்ளிணக்கம், அதாவது உள இணக்கம், எடுத்தியம்பப்படுகின்றது.

'உள்ளக் கவலையின்றி, உணவு உட்லிற் சேர்தலினால்,' அத்தனது உள்ளம் களங்கமில்லாதது; பளிங்கனையது; கவலை ஏதேனும் இல்லாதது. இத்தகைய சீரான உடலியைபு ஒரு தனி உள்ளுறவினை, அளக்கொணு இன்பத்தினை விளைக்கின்றது. இதற்குக் காரணமுண்டு. 'உணவு உடலிற் சேர்வதினால்' உள்ளமானது ஒப்புவமையில்லா இன்பத்தினை - சௌக்கியத்தினை - அனுபவிக்கும் வாய்ப்பினைப் பெற்றுள்ளது.

விபுலாநந்தர் இடைக்கிடை 'உணவு உட்லிற் சேராத' உடல் நிலையினால் வருந்துவதுண்டு. இதற்குக் காரணம் உளது. அவர் ஓரிடத்தில் தங்கித் தாமதித்து இருப்பதில்லை. சாதாரணமாய் அவர் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் பயணம் செய்து கொண்டே இருப்பார். இதனால் அவர் மலச்சிக்கலினால் வருந்துவதுண்டு. இவ்வனுபவத்தினை முன் வைத்துத்தான் இப் பொருளினை அவர் உணர்ந்திருத்தல் கூடும்.

உயிர் விஞ்ஞானியாகத் திகழ்ந்த (T. H. Huxley) டீ.எச். ஹக்ஸ்லி அவர்கள் ஓரிடத்தில் இதே பொருளினைக் கூறியுள்ளனர். அவர் தமது ஆய்வுகூடத்தில் தினமும் பதினெட்டு மணித்தியாலங்கள் வேலை செய்வாராம். இதனால் அவருக்கு உணவு, உடலிற் சேராக் குறை ஏற்பட்டிருந்ததாம். அவரை ஒரு பெரியார் இவ்வாறு உசாவினாராம்.

பெரியார்: உங்களிடத்தில் ஒரு தேவதூதன் வந்து தரிசனங் கொடுத்து: 'உங்களுக்கு ஒரு குழந்தை வருவதாகவிருந்தால் அது எத்தகைய உடலியல்பினைப் பெற்றிருத்தல் வேண்டுமென விரும்புகின்றீர்கள்?'

ஹக்ஸ்லி: அது உணவினைச் சீரணிக்கும் திறத்தினைப் பெற்றுள்ள உணவுச் சமிபாட்டுக் குடர், இரைப்பையாகிய உள்ளுறுப்புக்களைப் பெற்றுள்ளதாயிருத்தல் வேண்டும்.

எனவே உணவு உடலிற் சேர்தல் ஒருவரது ஆரோக்கியத்தினைப் பேணிக் கொள்வதற்கு எத்தகைய வாய்ப்பினையுடையதாயிருத்தல் வேண்டுமென்பது இங்கு எடுத்தாளப் பெற்றுள்ளது.

உணவு உடலிற் சேர்தலினால் உள்ளக் கவலையின்றி வாழ முடிகிறது. நன்கு துயின்று தெழும் பாக்கியத்தினையும் பெற்று விடுகின்றோம்.

எனவே 'நல்லோர் புகழ் அத்தன்' (Adam) நன்கு துயின்று எழுந்துள்ளவனாயிருந்தான். அவனது உறவுகள், இயற்கை இயைபுகள் பலப்பல.

காதுக்கினிமை தரும் ஓசைகள்:

'இளங்காற்றினிசை யொலியும்
இன்பவிலை யொலியும்,'

வளம் சான்ற நீரருவி வாய் நின் றெழு மொலியும்,
பள்ளி யெழுச்சிப்பண் பாடுகின்ற
புள் ளொலியும் - அத்தனுக்கு
'ஆரா உவகையினை' வாரி வாரி வழங்கு கின்றன.

இளங்காற்றின் ஒலி உடலுக்கு இன்ப மூட்டுவது; காதுக்கு இன்னிசை தருவது.

இளங்காற்றினுசையிலும், இன்ப இலை யொலியிலும் ஒரு தனி மெல்லோசை ஓமென் றெழுலிக்கின்றது. இயற்கை அன்னையின் மேனி மினுக்கிலும், உடலின் சாயையிலும் ஒய்யாரம் மிளிர்கின்றது. அவளது நடை மடவன்னத்தின் மென்மையிலும், மலர்களின் ஒளியிலும் தவழ்கிறது.

இம்மென்மையினை ஆங்கிலக் கவிவாண ரொருவன் (Tennyson) இவ்வாறு எழில்பெற வருணிக்கின்றான்:

Even the slight harebell raised its head
Elastic from her airy tread.

மோப்பக் குழையும் அனிச்ச மலரின் மென்மையினை உடையவள் அத்தை.

பன்முறையும் படிக்கப் படிக்க இவ்வரி களில் நிறைந்துள்ள இன்னுசை நம் காதினைத் தழுவித் தழுவி இன்பஞ் சேர்க்கின்றது.

எனவே மீண்டும் மீண்டும் படித்துப்படித்து மகிழ்வதற்குரிய ஒலிகள் நிரம்பி ஓசை விம்மும் வரிகள் இவை. நமது உள்ளத்தில் அன்பு உள்ளூருகின்றது. அத்தையின் உள்ளத்திலும் உவகை ஊற்றெடுத்துப் பொங்கி வழிகின்றது.

அத்தை தான் எத்திறத்தினள்? 'காதற் கிளியனைய கட்டழகி') மெல்லிய குரலினள், எழில் நிரம்பப் பெற்றவள். பின்வரும் வரிகளில் அவளது குணுதிசயங்கள் எடுத்தாளப் பெற்றுள்ளன.

அவள் 'எந் நாளும் வைகறையில் மூன் னெழுவாள்'
'மலர்ச்சயனம் விட்டகலாச் செய்கையினை நோக்கி அவள் செந்தாமரை வதனம் ஏறச்சிவந்த இயலும் மலர்க் கூந்தல் சீர் சிதைந்து சோர்ந்த செயலுங் கண்டுள்ளுருகி,'
'எழிலார் மட நல்லார் இன்துயிலும் சீரிதே.'

உளந்தெளிந்து கொள்வதற்கான பாங் கினதாகிய செந்தாமரையன்ன அம்மெல்லிய லாள் வதனம் ஏறச் சிவந்திருப்பதும், அழகிய வாசமலர்க் கூந்தல் சீர் சிதைந்து சோர்ந் திருப்பதும் அத்தனின் பார்வையினைக் கவர்ந்தன.

அதனால் அவனுந் தான் உளம் நெகிழ்வுற் றான். எழில் நிறைந்த மட நல்லார் இன் துயில் கொள்ளும் சீர் இதுவே என்பதை உணர்ந்து கொண்டான். அத்தையின் அழகினைக் கண்டு கண்டு துய்த்தான்.

இளம் தென்றல் மென் மலர் மேல் வீசும் பொழுது மெல்லிய குரலில் இத்தகை வார்த்தைகளை விளம்பலானாள் அத்தை.

எத்துணை மென்மையினைத் தான், அழகி னைத்தான் இச் சொற்பிரயோகங்கள் வழங்கு கின்றன. கவனிப் போமாக:

'மலர்க் கூந்தல்'
'சீர் சிதைந்து சோர்ந்த செயல்'
'எழிலார் மட நல்லார்'
'இன் துயிலும் சீர்'
'இளந் தென்றல்'
'சென்று வருடும் திறமனைய மெல் ஒலி'

மென்மையும் அழகும் நொய்மையும் துவண்டு துவண்டு பின்னிப்பிணைந்து தோன்று கின்றன. அவை வளம்மிகுந்த சொற் சித்திரத் தினை நம் கண்முன் கொண்டு வந்து விட்டன.

இத்தகைய கொடையினை வழங்குந் தகைமையர் யார்? எனவே அத்தன் கூறுகின்றான்:

'என் ஆருயிர்த்துணை நீ!
ஈசன் எனக்களித்த செல்வ நிதி நீ!
அன்பே உனது துயில் செழுமையானது,
ஆழமுடையது. எனினும் அத்துயிலினைக் கூட நீ
நீத்து எழுவாயாக'.

மேலும் மேலும் அழகு வார்த்தைகளை அடுக்கிக் கொண்டே போகின்றான், அத்தன்.

'புத்தமிழ்தே! அன்பே!'

புலர்ந்து கொண்டேயிருக்கும் வைகறைப் பொழுதினிலே:

வாசமலர்க் கொடிகளில் வண்டினங்கள் தேனருந்தும் விந்தையினைக் காண்போம் வாரீர்! இயற்கையுடன் இருவரும் உறவாட எத்தனம் செய்கின்றனர். இதுவே காலைப் பிரார்த்தனை! இறைவணக்கம் வேறெது? எனவே இவ்வின்ப அனுபவத்தில் கலந்து கொள்வாயாக.

வண்ண, வண்ணப் பூக்கள் மலர்ந்தன,
வந்து காண்பாயாக!

அத்தனது முகத்தில் இளம் சோபை மிளிர்கிறது. அதனைக் கண்டு கண்டு அதில் சொக்கிவிட்டாள் அத்தை.இது இறைப் பாசம் He for God ; She for God in him- அத்தை உறக்கம் தெளிந்தாள். இவ்வாறு கூறுகின்றாள்.

'மேதகவு செம்மை நெறி மேவிய என்
அன்பரே!!'

மெல்லிய ஒலி மிதந்து செல்கின்றது. அத்தை தன் வார்த்தையில் செழுமையான மொழிகளினால் சொற்சித்திரம் தீட்டுகின்றாள்.

'காதலரே! நும் முகங்காலை இளம் பொழுதும் கண்டேன்.'

காலைப் பொழுதின் அழகினைக் கண்ணுற்றேன். அதைத்துய்த்தேன். காலைப் பொழுதிற் கினியான நும்முகங்கண்டேன்,உளம் நெகிழ்ந்தேன். நுமது முகமலரின் செம்மையில் உளந் தோய்ந்தேன். உள இணக்கம்; உள ஒருமை; அஃது இடையறாத உள்ளப் பிணைப்பு எனவே 'அவ்வெழிலினைக் கண்டேன்! கவலையற்றேன்!

'நான் கங்குல் பொழுதினிலே கண்டேன் ஓர் அரிய காட்சி. அது கனவோ நனவோ அறியேன். அதை விண்டுரைக்கின்றேன் கேட்டருள்வாயாக.'

விபுலாநந்தருடைய 'ஆங்கில வாணி' என்னும் இப் பாடலில் நாம் கண்டு கொண்டது யாது? நாம் பெற்றுள்ள உள நிதியம் யாது? நாம் துய்ப்பது யாது? அஃது அளப்பரிய செல்வம். சாலவும் பெருகியநிதி. ஓசை நயமும், சொல் நயமும், பொருள் நயமும், இயற்கை ஒலிகளின் நலனும், வண்ணக் காட்சிகளின் தெளிவும், நமது காதுக்கு அளிக்கப்பட்ட ஒலிவிருந்தும், கண்களுக்கு நல்கப்பட்ட காட்சிகளின் சிறப்பும் நமது ஊனினை உருக்கி உளத்தினைக் குழைத்து இன்ப ஆறாக பெருக்கெடுக்க வழிவகுத்துவிடுகின்றன.

இப் பாட்டினைப் பன்முறையும் விபுலாநந்தர் தமது உளம் நிறைந்த குரலில் பாடக் கேட்ட நாம்: 'நாம் எங்கே! பனுவல் எங்கே" என்பதை உணரவொட்டாத நிலையில் பாட்டின் கசிவும் நமது உளத்தின் கசிவும் ஒன்றித்து விடுந்தறுவாயில், பாட்டினை ரசிக்கின்றோம்: துய்க்கின்றோம் எனக் கூறக் கூடியதாகி விடுகின்றது.

பன் முறையும் உள ஒருமைப்பாட்டுடன், சித்தம் நெகிழப் படித்துப் படித்து சுவைக்க வேண்டிய திறத்தினதாய இத் தமிழாக்கப் பாடல் ஜோன் மில்டனின் ஆதிப் பிரபந்தத்தின் அற்புத அமைவுகளனைத்தையும் ஒருங்கே திரட்டிக் காட்டுவது போல மிளிர்கின்றது.

இந்து மாணவர் மன்றச்
செயலாளர் அறிக்கை

இந்து நதி தனது பிரதான கிளையாக ஊற்றெடுத்து ஓடும் இன்னேரத்தில் செயலாளர் என்ற முறையில் நானும் இணைந்து கொண்டு இந்த நதியின் சலசலப்பில் உங்களையும் கடந்த வருட நிகழ்வின் நிரலில் இட்டுச் செல்கிறேன் என்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

தொடர்ந்தும் புதுப்பொலிவுபெற்றுப் பல கட்டுரைகளைத் தாங்கி வெளிவரும் / இந்து நதிச் சஞ்சிகையின் வளர்ச்சிப் பாதையில் அக்கறை கொண்டு அதனை வெளியிடுவதற்கு ஊக்கமளித்த எமது மன்றப் பெருந்தலைவி பேராசிரியர் மனோ சபாரெத்தினம் அவர்களையும், பெரும் பொருளாளர் கலாநிதி க. சபேசன் அவர்களையும் நினைவு கூராமல் இருக்க முடியாது.

கடந்த வருடத்தில் இந்து மாணவர் மன்றமானது இந்து சமய நிகழ்ச்சிகளை ஒழுங்காகவும் ஆசாரமுறைப்படியும் கொண்டாடியுள்ளது. அத்துடன் சமயப் பெரியார்கள் கல்விமான்கள் ஆகியோரையும் இதில் அழைத்துவந்து அவர்களின் பங்களிப்பையும் எமது மன்றத்திற்கு அளித்துள்ளோம்.

மேலும் எமது மன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டு கல்லடியிலுள்ள இராமகிருஷ்ண ஆச்சிரமம், சாரதா இல்லம், இசை நடனக் கல்லூரி போன்றவற்றிற்கு மாணவர்கள் விரிவுரையாளர்கள் ஒன்று சேர்ந்து விஜயம் செய்து, அங்குள்ள மாணவர்களுடன் ஒரு பகல் நாள் முழுதாகப் பல்வேறு இந்து சமய நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டோம்.

மேலும், எமது மன்ற உறுப்பினர்களால் கடந்த வருடத்தில் செங்கலடி மகாவித்தியாலயத்தில் க. பொ. த. (சா / த) மாணவர்களுக்கு இலவச பாட வகுப்புகள் நடாத்தப்பட்டன. இதில் பங்குபற்றிய எமது மன்ற உறுப்பினர்களுக்கு நான் மன்றத்தின் சார்பில் நன்றி கூறக் கடமைப்பாடுடையேன். மேலும் எம்மால் கொம்மாதுறையிலுள்ள தேவி கோயில் கட்டிட நிதிக்கென இந்து மாணவர்களிடமிருந்து பணம் வசூலித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இவை மட்டுமின்றி எமது மன்றத்தினரால் மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தினர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இந்து இளைஞர் கொடிதினத்தை முன்னிட்டு கொடி விற்பனவு செய்து பணம் வசூலித்துக் கொடுக்கப்பட்டது.

இவை மட்டுமல்லாது, எமது மன்றத்தினால் முதன் முதலில் வெளியிடப்பட்ட இந்து நதியானது மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மண்டபத்தில் மிகவும் சிறப்பான முறையில் வெளியிட்டு வைக்கப்பட்டது. இதில் பல கல்விமான்களும், சமயப் பெரியார்களும் கலந்து கொண்டு, இந்நிகழ்ச்சியை மேலும் சிறப்புற மெருகூட்டினர்கள்.

மேலும் எமது மன்றத் தலைவர் செல்வன். ச. வரதராஜன் அவர்களும், பத்திராதிபர் செல்வன். ப, ஜெயக்குமார் அவர்களும் ஏனைய எமது மன்ற உறுப்பினர்களும் இந்து நதி ஊற்றெடுப்பதற்குப் பெரிதும் உறுதுணையாக நின்று உழைத்துள்ளார்கள்.

இந்து நதியுடன் சங்கமமாகும் உங்களை நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால் இந்து நதியை தொடர்ந்தும் வற்றாது பெருக்காகப் பாயச்செய்வதற்கு நீங்கள் ஒவ்வொருவரும் இந்து நதியுடன் சிற்றாறாக இணைந்து கொள்ள வேண்டுமென்பதே!

வே. கேதீஸ்வரராசா.

எம் சிரம் தாழ்வது இவர்களுக்கு:-

'இந்து நதி' இவள் வளர்ச்சியில் பங்கெடுத்த பெரியவர்கள் உங்கள் அனைவருக்கும் சிரம் தாழ்த்தி நன்றி செலுத்துகிறோம்.

கண்ணனின் உபதேசம் அருச்சுனனை வழி நடத்தியது என்பதை விட, முக்கியம் என்னவெனில் அது மானிட உலகிற்கு ''பகவத் கீதை'' என்ற அரும் பெரும் பொக்கிஷத்தையே தந்தமைதான். இவ் வகையில் எமக்குக் களத்திலேயே ஆசிகளும் வாழ்த்துக்களும் தந்துதவிய சமயப் பெரியோருக்கும் எமது பெரியோருக்கும் என்றும் கடமைப்பட்டுள்ளோம். அத்துடன் தமது கைவண்ணங்களைத் தந்துதவிய அறிவு ஜீவிகள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் அனைவருக்கும்,

மண்ணின் மணத்தைப் பரப்பக் கைகொடுத்து உதவிய வர்த்தகச் செம்மல்கள், வள்ளல்கள் இவர்களுக்கும், விளம்பரங்களையும், ஆக்கங்களையும் திரட்டுவதில் தம் சிரமங்களைப்பாராது மூனைப்பாக ஈடுபட்ட நண்பர்களுக்கும்,

தமக்குரிய வேலைகளில் மட்டுமல்லாது எமக்குரிய வேலைகளிலும் பங்கேற்று அழகான முறையில் இவ்விதழை அச்சிட்ட மட்டுநகர், புனித செபஸ்தியார் அச்சகத்தினருக்கும்,

வாசகப் பெரியோராகிய உங்கள் அனைவருக்கும்,

மனமார்ந்த நன்றிகள் என்றும் நிலைக்கும்.

இந்து மாணவர் மன்றம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

With the Best Compliments from

SELVASANNITHI STORES

Proprietor:- M. VELUPPILLAI

Dealer in:- *ELEPHANT BRAND SOFT DRINKS*

PEPSI & MIRINDA

58, **Sea View Road, - TRINCOMALEE.**

T'Phone: (Residence) 026 - 2585.

BUY THE BEST BUY IT AT

BUHARY'S

THE ONLY QUALITY TEXTILE SHOP IN TRINCOMALEE.



BUHARY TEXTILE

109, N. C. Road, - TRINCOMALEE.

☎ 026 - 2321.

"இந்து நதி" பாய்தோட வாழ்த்துக்கள்
நம்பிக்கைக்கும் உத்தரவாதத்திற்கும்
நவ நாகரீகத்திற்கேற்ப
வைர ஆபரணங்களைத் தெரிவு செய்ய

சிறந்த இடம்



எஸ். கே. எஸ் அன் சன்ஸ்

10, மூன்றும் குறுக்குத் தெரு,
திருகோணமலை.

☎ 2219

For

Fashionable Jewellers

S. K. S. & SONS

10, 3rd, CROSS STREET,

TRINCOMALEE

With Best Compliments

From



SUPER SONIC

Radio Spares, Radio Sales & Service

CONTACT:

"SUPER SONIC"

No. 223, Lower Street,

BADULLA.

With Best compliments from:

AMBIGA JEWELLERY

DEALERS IN:

JEWELLERY & GEMS

182, N. C. Road; TRINCOMALEE.

மங்கையரின்- மனத்தைக் கவரும் அழகிய
தங்க, வைர, நகைகளுக்குத்
தன்னிகரற்ற ஸ்தாபனம்

அம்பிகா ஜுவல்லரி

182. என். சி. ரோட், திருகோணமலை.

N. I

என். ஐ

சைக்கிள் ரயர்கள், ரியூப்புகள் தயாரிப்பாளர்களும்
தேய்ந்த கார், லொறி, உழவு இயந்திர ரயர்கள்
மீள நிரப்புனர்களும்

● நீடித்த பாவிப்பு ● சொகுசான ஓட்டம்

நோர்தேண் இன்டஸ்ரீஸ்

தொழிற்சாலை:-
69, பிரவுண் வீதி,
கொக்குவில்.

காட்சியறை:-
112, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 23158

With the best compliments from:

Dilka Cream House

AGENTS FOR:

★ ELEPHANT HOUSE PRODUCTS
★ FIESTA ICE CREAM
★ NEWS PAPERS & BAKERS

256, Thirugnanasampanthar Street,

TRINCOMALEE.

☎ 026 - 2709

★ பாட நூல்களா?
★ பாடசாலை உபகரணங்களா?
★ இலங்கை இந்திய சஞ்சிகைகளா?
★ ஆங்கில ஏடுகளா?
★ எழுது கருவிகளா?

உங்கள் தேவைகள் எதுவானாலும் எம்மிடம் வாருங்கள்

மயூரன்ஸ் புத்தகசாலை

101A, வித்தியாலயம் வீதி, திருகோணமலை

தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன உற்பத்திப் பொருட்களின்
வினியோகஸ்தர்கள்.

புதிய உயர் கல்லூரி

ஆரிய குளம் சந்தி, யாழ்ப்பாணம்

B. A கலைமாணி B. Com வர்த்தகமாணி

ஆகிய வகுப்புக்கள் மிகச் சிறந்த முறையில் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

A/Lல் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் இப்பயிற்சிக்கு அனுமதிக்கப்படுவர்.

சகலபதிவுகளும் எமது நிறுவனத்தால் செய்து கொடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகிறோம்.

A/L கலை வர்த்தகம் ஆகிய வகுப்புகளும் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

விபரங்களுக்கு, பதிவாளர், புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

OLD PARK

CHINESE RESTAURANT

CATERERS FOR SPECIAL OCCASIONS

Ideal place to enjoy meals with your family & friends Ideal place for wedding reception

* Soups * Rice * Noodles
* Chop Suey * Sweet & Sour

Plus

Our Old Park Specials
TAKE AWAY LUNCH PARCELS.

207, Old Park Rd, Chundikuli JAFFNA.

☎ 23028

RAJAH HARDWARE STORES

HARDWARE & TIMBER MERCHANTS

76, Seaview Road,

TRINCOMALEE.

☎ 026 - 2552

DOLLAR AGENCIES

GENERAL MERCHANTS, WHOLESALE & RETAIL DEALERS
Regd GOVT. TRANSPORTERS.

AGENTS:

LANKA MILK FOODS (C. W. E.) LTD
SHAW WALLACE & HEDGES LTD
DARLEY BUTLER & CO LTD
RECKITT & COLMAN OF CEYLON LTD
B. C. C. PRODUCTS

80, Main Street,
TRINCOMALEE

☎ 026 / 2716 - 2253

அழகிற்கு அழகு செய்யும்
தங்க வைர ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்

அஜந்தா ஜுவல்லர்ஸ்

190 N, ஏகாம்பரம் வீதி,
திருகோணமலை.

Ajantha Jewellery,
190 N. Akambaram Road;
Trincomalee.

JEEVAN
VIDEO MOVIES

(VIDEO FILMING CENTRE)

51, Thirugnanasampanthar Street,

TRINCOMALEE.

தரமான 22 கரெட்
இன்றைய நவீன டிசைன்கள். . .

வெல்கம் ஜுவலரி பெலஸ்

WELCOME JEWELLERY PALACE

121, என். சி. வீதி,
திருகோணமலை.

121, N. C. Road,
TRINCOMALEE.

☎ 026 - 2488 . 2673.

With compliments from:

Samuel, Sons & Co. Ltd

HEAD OFFICE:
164, Messenger Street,
COLOMBO - 12.

JAFFNA BRANCH;
206, 208 Hospital Road,
JAFFNA.

KILINOCNCHI BRANCH.
Kandy Road,
KILINOCHCHI.

இந்துநதிக்கு எமது இதயம் நிறைந்த
நல்வாழ்த்துக்கள்.

யாழ்நகரில்

- G. C. E (O/L), A/L விஞ்ஞானப் பயிற்சிகள்
- 5ம் ஆண்டிற்கான புலமைப்பரிசில் பயிற்சி வகுப்புக்கள்
- போட்டிப்பரீட்சையில் தொழில் தேடுவோருக்கான பொது அறிவும், உளச்சார்பும்.
- 6ம், 7ம் ஆண்டு மாணவர்களுக்கான கணிதப் பயிற்சிகள்.

முன்னணி வெளியீட்டாளர்கள்,

அஸ்ரன் பதிப்பகம்

166/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

AUM

✠

With Best Compliments From:

Paramjothy Medical Stores

WHOLESALE & RETAIL

194, Ehambaram Road,

TRINCOMALEE.

☎ 2419

GRAMS: "PARAMJOTHY"

திருகோணமலை நகரில்

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்குச்

சிறந்த ஸ்தாபனம்

இக்பால் ஜுவலர்ஸ்

105, வடகரை வீதி,

திருகோணமலை.

With Best Wishes From

MAJESTA

MAIN STREET

AKKARAIPATTU.

Best Wishes to

"INTHU NATHI"

Ambal Stores

Sagama Road,

AKKARAIPATTU.

ஓம் நம சிவாய

'இந்து நதி' க்கு எம் நல்வாழ்த்துக்கள்

சிறந்த ரக,

★ எவர்சில்வர் பொருட்கள்

★ அலுமினியப் பொருட்கள்

★ அழகிய பாதணிகள்

★ பரிசுப் பொருட்கள்

★ அழகு சாதனப் பொருட்கள்

ஆகியன குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள

சரவணஸ்

சாகமம் வீதி - அக்கரைப்பற்று.

With Best Compliments

From

Vikna Trade Centre

01, Cash Street,

TRINCOMALEE.

With the best compliments from:

M. S. INDUSTRIES LTD

MANUFACTURERS OF **BOLTS & NUTS, WIRE NAILS, HINGES & OTHER ALLIED PRODUCTS**

ADDRESS; **Irupalai Road, KONDAVIL.**

T. Phone: 021 - 2241

HEAD OFFICE; **54, 3/3 York Street,**
P. O. Box: 1693
COLOMBO - 1.

T. Phone 24591, 24596 Telex; 21381 Combamilcey.

VICTOR & SONS

The Leading Music - T. V. Video Centre
Electrical Engineers

நீங்கள் விரும்பும் மதுரகான பாடல்களை
நவீன எலெக்ரோனிக் ஈக்குவலைசர் மூலமும்
ஸ்ரீரியோ முறையில் பதிவு செய்துகொள்ளவும்,
எக்கோ ஒலி அமைப்பில் விளம்பரங்களை பதிவு செய்துகொள்ளவும்
நாடுங்கள்

விக்ரர் அன் சன்ஸ்

(விக்ரேஸ்)

இல. 100, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

கிளை ஸ்தாபனம்;

விக்ரேஸ் மியூசிக் சென்ரர்

இல 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டிக்குழி.

'இந்து நதி'க்கு எங்கள் வாழ்த்துக்கள்

ஓடர் நகைகள் 22 கரட் சுத்தமான பவுணில்
வேண்டிய டிசைன்களில் நயம், நம்பிக்கை நாணயத்துடன்
குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

நவநாகரிக டிசைன்களிலான தங்க வைர ஆபரணங்களுக்கு

— சிறந்த ஸ்தாபனம் —

நியூ அனுஜா ஜுவலர்ஸ்

181, ஏகாம்பரம் வீதி, திருகோணமலை.

WITH THE BEST COMPLIMENTS OF

N. A. MARKANDU & BROS.

176, CENTRAL ROAD,
TRINCOMALEE.

FOR LICENCED TEA DEALER D. T. 116
LAVY TRANSPORT SERVICE FROM

COLOMBO TO TRINCO

Head Office :

173, KEYZER STREET,
COLOMBO - 11.

☎ 01-25577.

The Leading Farm Centre in Jaffna.

Dealers in

1. 'Prima' Poultry Feed & Cattle Feed.
2. Issue of day old chicks.
3. Vetzyme Dog Products.
4. Sausages.
5. Broiler Chicken &

Other Items relating to Animal Husbandry.

NALLUR FARM CENTRE

19, Murugesar Lane,
NALLUR - JAFFNA.

சுவை, தரம் உயர்ந்த,
உங்கள் விருப்பத்திற்கு அமைய
தரமான உணவுகளை
இன்று களிப்புற, உண்டு களிப்புற,
நானே வலுப்பெற

— தினமும் நாடுங்கள் —

STANLEY RESTAURANT (Chinese)

60, Stanley Road,
JAFFNA.

BEST WISHES TO 'INTHU NATHI

FOR ALL YOUR

- *TRAVEL*
- *PHOTO COLOUR PRINTING*
- *TRAVEL DOCUMENTS*
- *TELEX AND CABLE*

CONTACT

THE PIONEERS IN THE DOMESTIC FLIGHT TO AND FROM COLOMBO / JAFFNA.

MACK TRAVELS

8, FIRST LANE, PT. PEDRO ROAD,
JAFFNA.

Best Wishes to

"INTHU NATHI"



SHAMROCK ACADEMY

274, HOSPITAL ROAD,
CHUNDIKULI, JAFFNA.

"இந்து நதி"க்கு எம் வாழ்த்துக்கள்

சகல விதமான பலசரக்குச் சாமான்கள்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
வேண்டிய ஸ்தாபனம்

கிருபா ஏஜென்சி

108, பஜார் வீதி,
வவுனியா.

வாழ்க இந்து மாணவர் மன்றம்!
வளங்கொழித்து வருக "இந்து நதி"!!
விவசாயிகளே, உங்கள் பயிர்களுக்கு வேண்டிய

★ பேயர் (BAYER) விவசாய இரசாயனங்கள்
★ கிருமி நாசினிகள்
★ களை கொல்லிகள்
★ பங்கசு கொல்லிகள்

மற்றும் விவசாய உபகரணங்களுக்கும் நாடவேண்டிய
நம்பிக்கை, நாணயம், நன்மதிப்பு
பெற்ற ஒரே ஸ்தாபனம் - உங்கள் ஸ்தாபனமான

குளோப் ரேடர்ஸ்

பஜார் வீதி,
வவுனியா

GLOBE TRADERS
BAZAAR STREET,
VAVUNIYA.

☎ 024 - 2345

நாடு செழிக்க, நானிலம் புரக்க ஓடிவரும்
இந்து நதியே; வாழ்க! வளர்க!!
வவுனியா தெற்கு தமிழ்ப்பிரிவு

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

வவுனியா.

எங்களிடம்;

- வீட்டுப்பாவனைக்கேற்ற சகலவித அலுமினிய, பிளாஸ்ரிக் பொருட்கள்
- மின்சார உபகரணங்கள்
- மட்பாண்ட கூட்டுத்தாபன உற்பத்திப் பொருட்கள்
- அலுவலக/பாடசாலை மாணவர்களுக்கான காகிதாதி வகைகள்

மற்றும், பலவிதமான பொருட்களை மலிவு விலையில் பொற்றுக்கொள்ளலாம்

கூட்டுறவு மக்கள் விற்பனை நிலையம்

மொத்த/சில்லறை விற்பனை நிலையக் கட்டிடம்

பஜார் வீதி, வவுனியா.

☎ 024 - 2384

இந்து மாணவர் மன்றமளித்திடும் இணையிலாததோர்
'இந்து நதி'யே
இந்த மானிலம் எங்குஞ் செழித்திட
ஏற்றதாய்ப் புகழ் சேர்த்துப் பாய்ந்திடு!

சிவசக்தி வவுனியா

சகலவிதமான சாய்ப்புச் சாமான்கள், பலசரக்கு, மருந்து வகைகள்
உள்ளூர் விளைபொருட்கள்

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள வேண்டிய ஸ்தாபனம்

Sivasakthy
Bazaar Street,
VAVUNIYA.

சிவசக்தி
பஜார் வீதி,
வவுனியா.

☎ 024 - 2330

Our Hearty Congratulation

To

'INTHU NATHI'



ARUNA JEWELLERY

"Our motto is Honesty & Promptness"

18 (A) Third Cross Street,
TRINCOMALEE.

அருணை ஜுவலரி

18 (A) மூன்றும் குறுக்குத் தெரு,

திருகோணமலை.

"இந்து நதி"க்கு

எமது இதயம் நிறைந்த வாழ்த்துக்கள்

அழகிய தங்க வைர நகைகள்
தங்கள் மனதிற்குகந்த நவீன
முறையில் இடைக்குமிடம்

வி. எஸ். இ.

நகை மாளிகை

8, காசுக் கடைத் தெரு,

திருகோணமலை.

V, S, E,

JEWEL HOUSE

No. 8 Cash Street,
TRINCOMALEE.

FOR
FASHIONABLE
JEWELLERIES &
DIAMONDS

☎ 599

With best compliments from:

CITY MEDICALS

487, Hospital Road,
JAFFNA.

DISTRIBUTORS FOR;

- *PFIZER*
- *CEYLON NUTRITIONAL FOODS LTD*
- *MULLER & PHIPPS (CEYLON) LTD*
- *HOECHST CEYLON LTD*
- *STATE PHARMACEUTICALS CORPORATION*
- *UNION TRADERS*

Our Best Compliments To 'INTHU NATHY'

எழில் மிகு கண்கவர் டிசைன்களிலான நகைகளையும் அதிக உத்தரவாதத்துடன் ஓடர் நகைகளையும் பெற்றுக்கொள்ள

நாடுங்கள்

இல. 101. என். சி. ரோட்,
திருமலையில்.

A Tradition of Fine Quality Jewelleries
Orders Promptly Executed

VISIT

No. 101 N. C. Road,
TRINCOMALEE.

GOLD HOUSE கோல்ட் ஹவுஸ்

''கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக''

மில்க்வைற் நீல சோப் மேலுறைகளில் உள்ள திருக்குறள்களைச் சேகரித்துக்கொடுத்து மூவர்ண திருவள்ளுவர் படத்தையும், திருக்குறள் உரையுடன்கூடிய புத்தகத்தையும், திருக்குறள் ஸ்ரிக்கரையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

''நாளும் நற்பணி செய்திட உங்கள் ஆதரவை நாடும்''

''மில்க்வைற்''

525/2, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

'இந்து நதி' பெருக்கெடுத்து

பைந்தமிழ் இதயங்களை வளமாக்க

வாழ்த்துக்கள்

நவநாகரீக டிசைன்களிலான

தங்க ஆபரணங்களுக்கு

சிறந்த ஸ்தாபனம்

ஓடர் நகைகள்

குறித்த தவணையில் செய்து தரப்படும்.

அபிராமி ஜுவல்லர்ஸ்

29-G, காசுத்தெரு, திருகோணமலை.

026 - 2044.

'இந்து நதி'க்கு எமது வாழ்த்துக்கள்

முருகன் ஸ்டோர்ஸ்

இல: 14, பஜார் வீதி, - மட்டக்களப்பு.

065 - 2636.

WITH BEST COMPLIMENTS FROM

NEW GOPALAN COMPANY

Authorised Dealers for: C. I. C. Paints (Chemical Industries) S-lon Pipes & Fittings (Maharaja Organisation,) Centric & Robin Water Pumps & Generators (Jinasena Ltd.), Kelani Cables Ltd. Dealers in Building Materials, Electrical Goods, Sawn Timbers, Spare Parts. General Hardware and Transport Agents.

Grams: **GOPAL** *Telephone*: **026-2619.**

No. 28, Sea View Road, - TRINCOMALEE.

உள்ளே.....

1. தமிழ், முஸ்லிம் கலாச்சார பாரம்பரியம் ... 15

2. இந்து - பௌத்த அறநியமங்கள் ... 19

3. மாணிக்கவாசகரும் குவலயானந்தமும் ... 25

4. கிறீஸ்த்தாப்தத்திற்கு முந்திய கதிர்காமம் ... 28

5. விஞ்ஞானமும், மெய்ஞ்ஞானமும் ... 35

6. திருமூலர் காட்டும் திருநெறி ... 37

7. இலங்கைப் பூர்வ குடிகளும் சிவ வழிபாடும் ... 39

8. இந்து மதம் ... 44

9. சைவசித்தாந்த தத்துவங்கள் ... 45

10. இந்துமதம் கூறும் இக்கால விஞ்ஞானம் ... 49

11. இந்து மதத்தில் கிரியைகள் ... 53

12. சௌந்தர்யலகரியும், அபிராமி அந்தாதியும் ... 55

13. ஆங்கில வாணி ... 63

புனித செபஸ்தியார் அச்சகம், மட்டக்களப்பு. - SP. 228.